
மகன் மகுடம்



கலைஞர் மு. கருணாநிதி


மாண்புமிகு தமிழக துணை முதல்வர் தளபதி
மு.க.ஸ்டாலின் அவர்களுடன்
குறிஞ்சி சுப்ரமணியன் (22.9.2006)



இந்தப் புத்தகம் குறிஞ்சி சுப்ரமணியன் அன்பளிப்பு



மாண்புமிகு தமிழக முதல்வர்
டாக்டர் கலைஞர் அவர்கள்



குறிஞ்சி சுப்ரமணியன்
உரிமையாளர்- குறிஞ்சி பர்னிச்சர்,
14, வீட்டு வசதி வாரிய வணிக வளாகம்,
48, டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி சாலை,
(எல்.பி. ரோடு) அடையாறு, சென்னை - 20
தொலைபேசி : 24902541, 24919944

அன்புடையீர்,

வணக்கம். முத்தமிழ் அறிஞர் டாக்டர். கலைஞர் அவர்கள் நமக்கு படைத்தளித்த வரலாற்று நாடகங்களில் சிறப்பான ஒன்று 'மணி மகுடம்' நாடகம்.

1956 மே திங்களில் திருச்சியில் நடந்த திராவிட முன்னேற்றக் கழகத்தின் 2வது மாநில மாநாட்டில் இலட்சிய நடிகர் எஸ்.எஸ். இராசேந்திரன் குழுவினர் 'மணிமகுடம்' நாடகத்தை சீரிய முறையில் நடத்தினர். அந்த மாநாட்டில் பார்வையாளனாகக் கலந்து கொண்ட பள்ளி மாணவனான எனக்கு அந்த நாடகத்தைக் காணும் அரிய வாய்ப்பு ஏற்பட்டது.

இலட்சிய நடிகர் எஸ்.எஸ்.இராசேந்திரன் மன்னன் மணிமாறன், புதுமைப்பித்தன் ஆகிய இரண்டு வேடங்களிலும், நடிகமணி டி.வி.நாராயணசாமி மக்கள் தலைவர் பொன்னழகன் வேடத்திலும் இன்றைய ஆச்சி மனோரமா அல்லி வேடத்திலும் சிறப்பாக நடித்தார்கள்.

கல்லூரிப் படிப்பை முடித்தபின் என் சொந்த ஊர் சின்னாளப்பட்டியில் (அப்போதைய மதுரை மாவட்டத்திலும், தற்போதைய திண்டுக்கல் மாவட்டத்திலும் உள்ள ஊர்) சிறிது காலம் தங்கியிருந்தேன். கல்லூரி வாழ்க்கையில் மாணவர் மன்றத் தலைவனாக கழகப் பணியாற்றிய நான் எனது ஊரிலும் கழகப் பணியைத் தொடர்ந்தேன்.

1963ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் முரசொலி நாடக மன்றம் என்ற அமைப்பை ஏற்படுத்தி கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் தீட்டிய மணிமகுடம் நாடகத்தை பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் ஒத்துழைப்போடு நடத்தினேன்.

நாடகத்தை நடத்துவதற்கான செலவு போக மீதமான நன்கொடைப் பணம் ரூ. 1700/-இல் பேரறிஞர் அண்ணா அவர்களிடம் ரூ.200/- தேர்தல் நிதியாக வழங்கினேன். ரூ. 750/- கே.வி.கே.சாமி நினைவுப் படிப்பகத்திற்கும், ரூ. 750/- எம்.ஜி.ஆர். மன்றத்திற்கும் முரசொலி நாடக மன்றத்திற்கு ஒத்துழைத்த காரணத்தால் பேரறிஞர் அண்ணா அவர்கள் கையால் நிதியாக வழங்கப்பட்டது.

அந்த நாடகத்தை இயக்கியதோடு அந்த நாடகத்தில் வரும் பொன்னழகன் என்ற மக்கள் தலைவர் வேடத்தில் நடித்தேன். கலைஞரை அழைத்து என்னால் என் மகனுக்கு பெயர் சூட்டு விழா நடத்த முடியவில்லை. கலைஞரே என் மகனுக்குப் பெயர் சூட்டியதாக நினைத்துக் கொண்டு பொன்னழகன் என்ற பெயரைச் சூட்டினேன்.


தமிழ் இனத்தின் தலைவர் கலைஞர் அவர்கள் 50 ஆண்டு களுக்கு முன் எழுதிய நாடகத்தை இன்றைய தலைமுறை கழகத் தோழர்கள் எல்லாம் படித்து மகிழும்படியாக கலைஞர் அவர்களின் 87வது பிறந்த நாள் விழாவில் (3.6.2010) இந்நூலை எளிய அன்புப் பரிசாக வழங்குகிறேன்.

அன்புள்ள


குறிஞ்சி சுப்ரமணியன்

சென்னை - 20

3.6.2010




மதுரை தியாகராசர் கல்லூரி மாணவர் மன்ற விழாவில் சொற்பொழிவாற்ற வந்த
பேரறிஞர் அண்ணாவுடன் அன்றைய மாணவர் தலைவர்
குறிஞ்சி சுப்ரமணியன் (அண்ணாவின் வலது பக்கம்) 8.11.1960



புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., நாவரசு கா.காளிமுத்து, விருதுநகர் பெ.சீனிவாசன்
அவர்களுடன் குறிஞ்சி சுப்ரமணியன் (15.8.1975)



திராவிடர் கழகத் தலைவர் மானமிகு திரு. வீரமணி அவர்களுடன் குறிஞ்சி சுப்ரமணியன்



மணி மகுடம்

டாக்டர் கலைஞர். மு.கருணாநிதி



பாரதி பதிப்பகம்

126 / 108, உஸ்மான் சாலை,

தியாகராய நகர், சென்னை - 600 017.

த.பெ.எண்.4984

போன் : 4340205

பதிப்புரை

(நான்காம் பதிப்பின் பதிப்புரை)

"சென்றிடுவீர் எட்டுத் திக்கும் - கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்"

என்ற பாரதியின் மொழிக்கிணங்க, சிறப்பான மேனாட்டுக் கதையொன்றை ஆதாரமாகக் கொண்டு தீட்டப்பட்ட கலைச் செல்வமாகும் இது! மூலக்கதை எப்படியிருப்பினும், அதனை தம் வழியிற்கொணர்ந்து, தமது கொள்கை, நோக்கம், கோட்பாடு இவற்றைக் காண்பதிலே நமது கலைஞர் எப்போதும் திறமைசாலி என்பதற்கு இன்னுமோர் எடுத்துகாட்டுதான் இந்த மணிமகுடம்.

இந்நூலை வெளியிட உரிமையளித்த கலைஞர் அவர்களுக்கும், தமிழ்க்கனிப் பதிப்பகத்தாருக்கும் எங்கள் நன்றி உரியதாகும்.

டிசம்பர் 1986.
சென்னை - 17.

பழ.சிதம்பரம்

விலை : ரூ.40.00

○ MANIMAGUDAM ○ By : Kalaignar M.Karunanidhi ○ Copyright Holder : Tamilkani Pathippagam ○ Fourth Edition (Bharathi Pathippagam) : December 1986 ○ Fifth Edition : October 2001 ○ Sixth Edition : May 2010 ○ Price : Rs. 40.00 ○ Publisher: BHARATHI PATHIPPAGAM, No. 126/108, Usman Road, T. Nagar, Chennai - 600 017.○ Post Box No : 4984 ○ Phone : 24340205○ Printed at : Sivakami Printo Graphics, Triplicane, Chennai-600 005. Phone : 28445051.○

என்னுரை

மேரிகாரல்லி எழுதிய ''டெம்போரல் பவர்'' என்னும் நவீனத்திலுள்ள ஒரு அரசனின் பாத்திர அமைப்பு என்னை மிகவும் கவர்ந்தது. அந்த நவீனத்தில் ஆசிரியர் தீர்ப்பு பிற்போக்கு வாதத்தில் போய் முடிவதாக நான் கருதினேன். அதனால் அரசனின் பாத்திர அமைப்பை மட்டும் வைத்துக் கொண்டு, அரசியல் மாற்றம், பொருளாதார ஏற்றம் இவைகளை மட்டும் கொள்கையென வகுத்து கிளர்ச்சி நடத்துகிற மக்கள் மன்றத்திற்கு சமுதாயப் புரட்சித் தத்துவத்தை போதிக்கும் ஆசானாக அந்த அரசனை சித்தரித்தேன். அரசாங்கம் மக்கள் கைக்கு வரவேண்டும் என மக்கள் மன்றம் முழங்குகிறது. இந்த மக்கள் மனவளம் பெற்றவர்களாக ஆக வேண்டும் என அரசன் பணி புரிகிறான். ஆனால் அந்த அரசன் இறுதியில் மக்கள் தலைவனாக இருந்து ஆட்சி நடத்த இயலவில்லை.

தன் பதவி பறிபோய்விடும் எனக் கண்ட அரசன் வேண்டுமென்றே மக்கள் மன்றத்தில் சேர்ந்து, மக்கள் கைக்கு ஆட்சி வந்ததும் அந்த ஆட்சிக்கும் தலைவனாகி விடவே இதுபோல் சூழ்ச்சி செய்தான் என்ற கொடிய குற்றச் சாட்டுக்கு ஆளாகி விடாமல் - எதிர்பாராத சாவு - அவனை மீட்டு விடுகிறது.

மதம் - ஆட்சி பீடம் - பிரச்சார பீடம் - இம்மூன்றுக்கும் மக்களுக்கும் நடைபெறும் போராட்டமே 'மணிமகுடம்'

''தழுவலன்றோ இது! - இரவலன்றோ இது!'' - எனக் கதைக்கும் 'கனம்'களை நானறிவேன். பாவம்; அவர்கள் பிறர் கருத்தைத் தம் கருத்து எனவே வெளியிட்டு, பிடிபடும் வரையில் சுகவாழ்வு வாழ்ந்திடும் இலக்கிய மேதைகள்(?)

‘பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும்’

- என்ற பாரதியாரின் நல்வாக்கை நச்சுவாக்கென நவில்பவர்கள்!

எங்கிருந்து இந்த எண்ணம் பிறந்தது - எப்படிப் பிறந்தது என்பதை விளக்கி விட்டேன். ஏன் பிறந்தது? இதைக் கேட்க மாட்டீர்கள்! கொள்கையைத் தவிர, வேறெதை நினைக்க முடிகிறது - எழுத முடிகிறது என்னால்! எழுதினேன், திராவிட சமுதாயத்திற்குத் தேவையான படைக்கலன்களில் ஒன்றாக அமையட்டுமென்ற ஆசையுடன்!

கதையின் காலம் : வாளும் வேலும் படைக்கருவியாய் - பனை ஓலையை எழுத்துச் சாதனமாய் இருந்த பழைய காலமல்ல! பாளையக்காரர் உலவிய இடைக் காலமுமல்ல; இடைக்காலம் நவீன காலத்திற்கு மாறிக் கொண்டிருக்கும் காலம் - அதையே பின்னணியாக வைத்திருக்கிறேன்.

இந்த நாடகத்தை நூல் வடிவிலே நான்காம் பதிப்பாகத் தரும் உரிமையைத் தமிழ்க்கனிப் பதிப்பகத்திடம் பெற்று வெளியிடும் பாரதி பதிப்பக நண்பர் பழ.சிதம்பரம் அவர்களுக்கு என் நன்றி உரியதாகுக.

22.7.1986

அன்புள்ள
மு.கருணாநிதி

மணிமகுடம்

காட்சி 1

(இரவு நேரம் - மணிமகுடபுரியின் மாடவீதியில் ஒரு தெருவிளக்குக் கம்பத்திலே சாய்ந்தபடி ஒரு மனிதன் நின்று கொண்டிருக்கிறான். அப்போது கையிலே பத்திரிகைக் கட்டுகளுடனும், ஒரு ரோஜா மலருடனும் ஒரு குள்ளமான மனிதன் அங்கு ஓடி வருகிறான். வந்தவன் விளக்கடி மனிதனிடம் ஓடிவந்து)

குள்ளன்: பொன்னழகன் மட்டும் தனியாக வந்து கொண்டிருக்கிறான்... நம்ப நாடகத்தை ஆரம்பிக்கலாமா?

விளக்கடி மனிதன்: ஓ... ஆரம்பிக்கலாம்!... உலகப்பா! - ஜாக்கிரதை! நான் சொன்னதை யெல்லாம் மறந்து விடாதே!

குள்: அதெல்லாம், ஒத்திகைப்படியே சரியா செய்வேன்...

(என்று கூறிவிட்டு, குள்ள மனிதன் பத்திரிகைக் கட்டுடன் வேறிடம் போய் ஒளிந்து கொள்கிறான். விளக்கடி மனிதன் தன் உடைகளை சரிபார்த்துக் கொண்டு நீண்ட மீசையை சரியாக முறுக்கி விட்டுக் கொண்டு, கன்னத்தின் மேற்புறத்தில் பெரியதும், கரியதுமாக வளர்ந்திருக்கும் மருவைக் கையால் தடவியபடியே ஆகாயத்தைப் பார்த்துக் கொண்டு நிற்கிறான். அப்போது குள்ள மனிதன், தான் குறிப்பிட்ட பொன்னழகன் என்னும் ஆள் அருகே வருவதைப் பார்த்து விட்டு, விளக்கடி மனிதனிடம் வந்து...)

குள்: மக்கள் தொண்டன் பத்திரிகை வேணுமா; மக்கள் தொண்டன்! விலை இரண்டே பணம்தான்! மக்கள் தொண்டன்... விலை இரண்டே பணம்தான்...! மக்கள் தொண்டன்...!

(விளக்கடி மனிதன், கவனிக்காதது போல நிற்கிறான். அப்போது பொன்னழகன் என்பவனும் அந்தப் பக்கம்

வருகிறான். குள்ள மனிதன் விளக்கடி மனிதனிடம் வந்து நின்று, அவன் ஆகாயத்தைப் பார்த்து சிந்திப்பது போலவே தானும் ஆகாயத்தைப் பார்த்து சிந்திப்பது போல நடித்து)

குள்: ஏ, சந்திரனே! நீ ஒரு கற்கண்டுக் கட்டி! உன்னைச் சுற்றி இந்த நட்சத்திர எறும்புகள், மொய்த்திருக்கின்றனவே, ஏன்? ஆகா - இதோ, இந்த ஆகாயத்து வெள்ளை எறும்புகளை எண்ணப் போகிறேன் - ஒன்று! இரண்டு! மூன்று! நான்கு! ஐந்து! ஆறு!...

(விளக்கடி மனிதன் சிரித்தபடி குள்ளனின் முதுகில் தட்டிக் கொடுத்து)

வி.மனிதன்: என்னப்பா நட்சத்திரங்களை எண்ணுகிறாயா? ஆறு வரையில்தான் இதுவரை எண்ணியிருக்கிறாய்?

குள்: ஆறு என்றால் ஆறு லட்சம் எண்ணியிருக்கிறேன்.

வி.மனிதன்: சந்திரன் ஒரு கற்கண்டு நட்சத்திரங்கள் அதைச் சுற்றியுள்ள எறும்புகள்! சபாஷ்! நல்ல கற்பனை...

குள்: அதுவும் என் சொந்தக் கற்பனை..

வி.மனிதன்: மிகவும் சரி! ஆனால் - இந்தக் கற்கண்டை, இந்த எறும்புகள் தூரத்திலிருந்தே பார்த்துக் கொண்டிருக்கின்றனவே; எறும்புகளின் குணம் அதுவல்லவே - கற்கண்டின் மேலேயே போய் மொய்த்துவிட வேண்டுமே!

குள்: அதென்னமோ எனக்குத் தெரியாது - பெரிய தத்துவ ஞானியும், மக்கள் தொண்டன் ஆசிரியருமான ஸ்ரீஜத் அரிஹரநாதன் அவர்கள் எழுதியிருக்கிறார் - இதோ பத்திரிகை! (நீட்டுகிறான்)

(விளக்கடி மனிதன் பத்திரிகையை வாங்குகிறான். இந்த உரையாடல்களை பொன்னழகன் என்னும், அந்த கட்டு மஸ்தான தோற்றமுள்ள மனிதன், தனது குறுந் தாடியைத் தடவியபடி ரசித்துக் கொண்டு ஒதுங்கி நிற்கிறான்)

வி. மனிதன்: (குள்ளனிடம்) அப்பனே! மக்கள் தொண்டன் ஆசிரியர், சந்திரனைக் கற்கண்டு என்றும் நட்சத்திரங்களை எறும்புகள் என்றும் கூறினார் அல்லவா? இப்போது நான் ஒன்று கூறுகிறேன், கேள்! சிலந்தி வலை பார்த்திருக்கிறாய் அல்லவா?

குள்: அது என்ன அத்திப்பூவா? ஆடிப் பிறையா? பார்த்திருக்கிறேன்.

வி.மனிதன்: அந்த சிலந்தி வலையை ஞாபகம் வைத்துக் கொண்டு, இப்போது ஆகாயத்தைப் பார்! அழகான குளிர்மயமான அந்தப் பூரண சந்திரன், ஒரு சிலந்தி போலவும் - அந்த ஒளி விடும் நட்சத்திரங்கள், சிலந்தி வலையில் சிக்கி உயிர்விடும் பூச்சிகளைப் போலவும், காட்சி தருகின்றன அல்லவா?

குள்: ஆமாம்! - ஆமாம்!

வி.மனிதன்: இதைப் போலத்தானிருக்கிறது நம்முடைய நாடும்! அதாவது ஆட்சி பீடமானது...

குள்: சந்திரனைப் போலவும், ஜனங்கள் நட்சத்திரங்களைப் போலவும்...

வி.மனிதன்:... என்று மக்கள் தொண்டன் பத்திரிகை எழுதும்! நான் சொல்லுகிறேன். ஆட்சிபீடம் சிலந்தி போலவும், மக்கள் அதன் வலையில் சிக்கிவிட்ட பூச்சிகள் போலவும் என்று!

குள்: சரியான பேச்சு - ஒரு வேளை நீங்கள் அந்த மக்கள் மன்றத்து உறுப்பினரோ?

வி.மனிதன்: இல்லை - இது என் சொந்த அபிப்ராயம். உனக்கு மக்கள் மன்றத்தைப் பற்றித் தெரியுமா?

குள்: தெரியுமே - பொன்னழகன் என்பவர் பெரிய தலைவர்! நல்ல பேச்சாளி! தியாகி! அதேபோல அல்லி என்ற ஒரு பெண்மணி - அவளும் நன்றாகப் பேசுவாள்! அவர்கள் நடத்துகிற சங்கம் ஆட்சி பீடத்தை மாற்றி, ஜனங்கள் நாட்டை ஆள வேண்டும் என்று

பிரச்சாரம் செய்கிறது! நான்கூட நினைக்கிறேன் - அந்த அரசனைக் கொன்று விட்டால் நாடு உருப்பட்டுப் போய்விடும்.

வி.மனிதன்: அவசரப்படாதே! அரசன் என்ன செய்வான். பாவம்! அமைச்சரும், அரச குருவும் ஆட்டி வைக்கிறபடி ஆட வேண்டிய பொம்மை அவன்! அதிகாரமனைத்தும் சீமான்கள் சபைக்கு இருக்கிறது! நீட்டிய இடத்தில் கையெழுத்துப் போட்டு விட்டு அரண்மனையிலே சுகவாசியாக வாழ வேண்டியதுதான் அரசனுக்குத் தரப்பட்டிருக்கும் உரிமை! ஆகவே, அரசனைக் குறைகூறிப் பயனில்லை! நாட்டை நாசமாக்கும் அழிவு சக்திகள் எங்கேயிருக்கின்றன என்று முதலில் கண்டுபிடிக்க வேண்டும்! அந்த அழிவு சக்திக்கு ஆதரவு அளிக்கும் பிற்போக்கு சக்தி இதோ உன் கையில் இருக்கிறது!

(குள்ளன் தன் கையிலுள்ள ரோஜா மலரைப் பார்த்துக் கொள்கிறான்)

குள்: ரோஜாப் பூவா?

வி.மனிதன்: இல்லை! நீ விற்பனை செய்து பிழைக்கிறாயே, இந்த மக்கள் தொண்டன் பத்திரிகை! இது ஒரு பிற்போக்கு சக்தி! கண்ணை மூடிக் கொண்டு ஆட்சிபீடத்தை ஆதரித்து, மக்களை சந்தியில் நிறுத்தும் இந்த ஏட்டுக்கு மக்கள் தொண்டன் என்று பெயர்! ஆட்சிபீடம் மக்கள் சுமக்க முடியாத வரிகளைப் போட்டபோது, இது மக்கள் பக்கம் நிற்பதில்லை! அரசகுரு - ஆண்டவன் பெயராலும், மதத்தின் பெயராலும் மக்களிடம் உண்டு பண்ணும் சச்சரவுகளை இந்த மக்கள் தொண்டன் இதுவரை கண்டித்ததில்லை! அரசனை தெய்வ அவதாரம் என்று கூறிவிட்டு, அரசன் பெயரால் நடத்தப்படும் அக்கிரமங்கள் அத்தனைக்கும் இந்த ஏடு துதி பாடிக் கொண்டேயிருக்கிறது! முதலில் இந்த ஏடு அழிக்கப்பட வேண்டும் தம்பீ - அழிக்கப்பட வேண்டும்?

குள்: நீங்கள் சொல்வது மிகவும் உண்மை! உங்கள் பேச்சைக் கேட்ட பிறகு இந்தப் பத்திரிகையை விற்கவும் எனக்கு மனம்

வரவில்லை. சே! இதை விற்றுப் பிழைப்பது மானத்தை விற்றுப் பிழைப்பது போல!

(பத்திரிகை கட்டுகளை தூர எறிகிறான். இந்த நிகழ்ச்சிகளையும் உரையாடல்களையும் தூர இருந்து கவனித்த பொன்னழகன் இவர்களிடம் நெருங்கி வருகிறான்)

வி.மனிதன்: யார் நீங்கள்?

பொன்னழகன்: புதுமை நிறைந்ததும் - நாட்டுப் பற்று மிகுந்ததுமான உங்கள் உரையாடலைக் கேட்டுக் களிப்புற்ற ஒருவன் - நீங்கள் யார்?

வி.மனிதன்: நான் ஒரு நாடோடி!

பொன்: பெயர்?

வி.மனிதன்: புதுமைப்பித்தன்.

பொன்: பொருத்தமான பெயர் - புதுமைப்பித்தரே! மணிமகுடபுரிதானே தங்களின் சொந்த நாடு...

புதுமைப்பித்தன்: ஆமாம்... தாங்கள்?

பொன்: பொன்னழகன் என்று கேள்விப்பட்டிருக்கிறீர்களா?

புதுமை: யார்? பொன்னழகன் - பொதுமக்கள் தலைவர் - பொன்னழகன் - நீங்கள் தானே?

குள்: அடடே - நீங்களா? நான் பொதுக்கூட்டத்தில் பார்த்திருக்கிறேன் - அடையாளம் தெரியாமல் போய் விட்டது...?

புதுமை: கிடைத்தற்கரிய வாய்ப்பு! உங்களைப் போன்ற உத்தமர்களை சந்திப்பதும் உரையாடுவதும் எத்தனை உற்சாக நிகழ்ச்சி தெரியுமா?

பொன்: அதைப்போலவே நானும் மகிழ்கிறேன். ஒரு ராஜாங்க விரோதியை சந்திக்கிறோம் என்ற எண்ணத்தில்!

புதுமை: நாமெல்லாம் அரசாங்கத்தின் விரோதிகள் அல்லவே - மக்களுக்கு நண்பர்கள்; அவ்வளவுதான்!

பொன்னழகரே! ஒரு வேண்டுகோள்! நிறைவேறுமா?... தங்களோடு இணைந்து நின்று தாயகத்தின் மேன்மைக்குத் தொண்டாற்ற விரும்புகிறேன்...

பொன்: நிச்சயமாக நிறைவேறும், தங்கள் ஆசை! எங்கள் சங்கத்தில் அங்கத்தினராகவே ஆகும் தகுதியுடையவர் தாங்கள் என்பது என் நம்பிக்கை!

குள்: நானும் கூட சேரலாமா...?

பொன்: எங்கள் கூட இருக்கலாம். சில மாதங்களுக்குப் பிறகே, நீ அங்கத்தினராகலாம் - உன் பெயர்?

குள்: அதான் - பெரிய விசேஷம்! நான் பிறந்தவுடனேயே எங்க அப்பா அம்மா செத்து விட்டார்கள்! செத்தவர்கள் எனக்குப் பெயராவது வைத்துவிட்டுப் போகக் கூடதா? அதனால் பெயரில்லா மனிதன் நான்!

பொன்: உனக்கு ரோஜா மலர் மீது பிரியமாக்கும்?

குள்: ஆமாம்!

பொன்: நீ ஆளோ கருப்பு! உனக்குப் பிரியமோ சிகப்பு ரோஜா மீது!

குள்: என்ன பண்ணுவது; கருப்பு ரோஜா கிடையாதே!

புதுமை: நீதான் கருப்பு ரோஜாவாக இரேன்! உனக்கு இனிமேல் பெயரே கருப்பு ரோஜா...

பொன்: சரியான பெயர்..ம்.. போகலாமா? கருப்பு ரோஜா வா..வா!

(கருப்பு ரோஜாவும், புதுமைப் பித்தனும் ஒருவரை யொருவர் பார்த்துப் புன்னகை புரிந்து கொண்டு பொன்னழகன் பின்னே நடக்கிறார்கள்)

காட்சி 2

(ஏழை மக்கள் வாழும் குடிசைகள். இருளைப் போக்குவதற்காக அவர்கள் வீடுகளில் மின்மினி போன்ற விளக்குகள், குடிசைகளின் வெளிப்புறங்களில் படுத்திருப் போரும் உட்கார்ந்து கொண்டு ஊர்க்கதை பேசுவோருமாக எலும்பு உடலினர் பலர். அந்தப் பக்கம் பொன்னழகன், புதுமைப் பித்தன், கருப்பு ரோஜா மூவரும் வருகிறார்கள். பொன்னழகனைக் கண்ட ஏழைகள் அனைவரும் எழுந்து ஆவலுடன் அவனைச் சூழ்ந்து கொள்ளுகிறார்கள். ''தலைவர் அய்யா வந்துவிட்டார்; தலைவர் அய்யா வந்துவிட்டார்'' என்று கூறிக் கொண்டே பொன்னழகனை வணங்குகிறார்கள்)

பொன்: என்ன ஏதாவது புதிய செய்திகள்...?

ஒரு கிழவர்: இல்லாம இருக்குமா? பக்கத்துக் தெருவிலே ஏழு பேருக்குப் பேதி கண்டு இரண்டு தீர்ந்து விட்டது... நாலு பிழைக்கிறது சந்தேகம்.

பொன்: பேதியா? நேற்று வரும்போது நான் கேள்விப்படவில்லையே - அரசாங்க வைத்திய இலாகாவுக்குச் சொல்லி அனுப்பினீர்களா?

கிழவர்: சொல்லி அனுப்பினோம். கவனிக்கிறோம் என்று சொன்னார்கள்.

பொன்: கவனிப்பார்கள். எத்தனை பிணம் போகிறது என்று கவனித்துக் கொண்டிருப்பார்கள். பெரியவரே, காலையிலேயே எனக்காவது சொல்லி அனுப்பியிருக்கக் கூடாதா?

கிழ: சொல்லி அனுப்பினோம். நீங்கள் இல்லையென்று சங்கத்திலிருந்து அல்லியம்மாவும், நாலைந்து தொண்டர்களும் வந்து, தேவையான உதவிகளை எல்லாம் செய்தார்கள். பேதி தடுப்பு மருந்து எல்லோருக்கும் கொடுத்தார்கள். அரசாங்க வைத்திய இலாகாவுக்கு - அவர்களும் அவசரச் செய்தி அனுப்பினார்கள்.

செத்துப்போனப் பிணங்களைத் தூக்கக் கூட நாதியில்லை - வசதியில்லை; அல்லியம்மாளும் தொண்டர்களும் சேர்ந்து அந்தப் பிணங்களையெல்லாம் அப்புறப்படுத்தி தெருவெல்லாம் சுத்தம் செய்துவிட்டுப் போனார்கள்.

பொன்: புதுமைப் பித்தரே பார்த்தீரா. பாராள்வோரின் தகுதியை! பாட்டாளி மக்கள் வறுமையால் சாவது போதாது; அம்மை, பேதியாலும் செத்து ஒழியட்டும் என்று நினைத்துக் கொண்டு நிம்மதியாக ராஜநடை போடுகிற ஆட்சியை எங்கேயாவது காண முடியுமா? இந்த மணிமகுடபுரியைத் தவிர!

புதுமை: உலக வரலாறு இதைவிடப், பயங்கரமான ராஜரீகங்களையெல்லாம் கண்டிருக்கிறது - ஆனால் அந்த மதோன்மத்தர்களின் ஆட்சியிலே மண் படிந்து விட்ட காட்சிகளை இன்று மணிமகுடபுரியின் ஆட்சிச் சக்கரத்தை இயக்குவோர் மறந்து விட்டிருக்கிறார்கள் - அவ்வளவுதான்...'

(அப்போது ஒரு அரண்மனை அதிகாரி அங்கு வருகிறான் - அவன் அங்குள்ள ஏழைகளை கம்பீரமாகப் பார்த்து)

அதி: இங்கு பேதி பரவி இருப்பதாக அரண்மனை வைத்திய இலாகாவுக்கு மனுச் செய்து கொண்டவர் யார்?

கிழ: நாங்கள்தான்.

அதி: உங்கள் மனு மந்திரியாரிடம் சமர்ப்பிக்கப்பட்டது. குருநாதர் யோசனைப்படி, நீங்கள் உடனே மாரியம்மனுக்கும், காளியம்மனுக்கும் திருவிழா நடத்தி, பிரார்த்தனை செய்து கொண்டால், பேதி விலகிவிடும் - வேறு வைத்தியம் தேவையில்லை...

பொன்: என்ன?... யார் யோசனை? பேதி மருந்து காளியம்மன் பூஜையா?

அதி: ஆமாம் காளிதேவியின் கோபத்தினால்தான் பேதி வந்திருக்கிறது.

புது: காளி தேவிக்கு, என்னப்பா கோபம்?

கருப்புரோஜா: புதிய சேலை, ரவிக்கை கேட்டிருப்பாள்? கொடுத்திருக்க மாட்டார்கள்.

அதி: யாரடா பொடி முட்டாளே...

புது: அதிகாரியாரே, ஆத்திரப்படாதீர். நீர் என்னிடம் பதில் சொல்லும் - காளிக்கும், மாரிக்கும் பூஜைகள் நடத்தி நோய்களை விரட்ட முடியுமானால், அரசாங்க சார்பிலே ஒரு வைத்திய இலாகா எதற்கு?

அதி: அதெல்லாம் எனக்குத் தெரியாது. மணிமகுடபுரியின் குருநாதர் கட்டளையிடுகிறார். நான் கடமையை நிறைவேற்றுகிறேன். அவ்வளவுதான் - நீங்கள் எப்படியாவது கெட்டுப் போங்கள் - எனக்கென்ன வந்தது?

(அதிகாரி போய்விடுகிறான்)

புது: மணிமகுடபுரியின் குருநாதர் - மண்ணாங்கட்டி - மக்களை மாக்களாக மதிக்கும் மண்டூகம் - அவன் கட்டளையிடுகிறானாம் - பேதி தீர காளி பூஜை செய் என்று.

கிழ: அய்யோ குருநாதரைத் திட்டாதீர்கள் -அவர் கடவுள் அவதாரம்.

புதுமை: ஆமாம் - எல்லாருமே கடவுள் அவதாரம் - அரசன் ஒரு கடவுள் அவதாரம் - அமைச்சன் ஒரு கடவுள் அவதாரம் - அரசாங்க குருநாதர் ஒரு கடவுள் அவதாரம் - எல்லோருமே அவதாரம்; சீமான்கள் சபையிலே இருக்கிற பத்து அங்கத்தினரும், தசாவதாரம் - நல்ல நாடு - நல்ல நம்பிக்கைஐயா இது. பெரியவரே சொல்லுகிறேன் என்று வருத்தப்படாதீர்கள் -கடவுள் - அவருக்குத் தரப்படும் லட்சணங்களின்படி, மிகவும் தூய்மையானவர் என்று கூறப்படுகிறது - அந்தத் தூய்மையானவர் இப்படித் துரோக அவதாரங்கள் எடுக்க மாட்டார்.

கிழ: அது என்னமோ தம்பி பெரியவங்க காலத்திலே இருந்து...

புது: இப்படித்தான் அடிமையாக வாழ்கிறது நமது ஏழைகள் குலம் - இதற்கு ஒரு மாறுதல் தேவையில்லையா?

கிழ: விதியை மாற்ற வேண்டுமே? முடியுமா?

புது: விதி என்பது சட்டம்தானே - வலிமையுடையவன் வலிமையற்றவன் மீது அதிகாரம் செலுத்த வகுத்துக் கொண்ட முறைதானே பெரியவரே விதி என்பது.

பொன்: நண்பரே, இந்த விளக்கங்களைப் பிறகு வைத்துக் கொள்வோம் - பெரியவரே, நீங்கள் எல்லாம் போகலாம் -நான் நாளை காலையிலே வருகிறேன் -இப்போது பேதிகண்டுள்ள பகுதிக்குப் போய், ஆக வேண்டியதைக் கவனிக்கிறேன்.

கிழ: சரிங்க -

(கிழவரும் மற்றவர்களும் போய் விட அங்கிருந்து சிறிது தூரம் நடந்து கொண்டே -புதுமைப் பித்தனைப் பார்த்து)

பொன்: இந்த மக்கள், கடவுள், விதி, சாஸ்திர சம்பிரதாயம் இவைகளிலே கொண்டுள்ள மூட நம்பிக்கைகளை நான் எடுத்துச் சொல்வதில்லை - அவர்கள் போக்கிலேயே நானும் போய் எல்லாரையும் அரசனுக்கு எதிராக ஒன்று திரட்டுகிறேன்.

புது: அதுதான் தவறு என்கிறேன் நான். அரசனுக்கு விரோதியாக மட்டும் மக்களை ஒன்று திரட்டிப் பயனில்லை. இன்று இந்த நாட்டை ஆண்டு கொண்டிருப்பது அரசன் அல்ல - அவன் ஒரு பொம்மை - எத்தனின் கையிலேயுள்ள ஏடும், மதப் பித்தனின் நெஞ்சிலே உள்ள கேடும், அதிகார வர்க்கமெனும் மணல் மேடும்தான், இந்த நாட்டை ஆட்டிப் படைக்கின்றன - இந்த ஆட்சி மக்கள் கைக்கு மாற வேண்டுமானால், மக்கள் உள்ளம் முதலில் பண்பட வேண்டும் - களவாடப்பட்ட நெல்மணிகளைத் திரும்பப் பெற்று, காய்ந்து கிடக்கும் கழனியிலே தெளித்துப் பயனில்லை - முதலில் அறிவு ஒளி - அதையொட்டித்தான் ஆட்சி ஒளி.

பொன்: ஏறத்தாழ இதே கருத்துத்தான் எங்கள் அல்லிக்கும் - நான்தான் சிறிது வேறுபாடுடையவன்...

புது: வேறுபாடு என்றால் பரவாயில்லை... முரண்பாடுதான் இருக்கக் கூடாது.

பொன்: சரி, போகலாமா?

(மூவரும் போகிறார்கள்)

காட்சி 3

(மக்கள் மன்றம் - அதே இரவு - அல்லியும் தொண்டர்களும் கவிஞரும் இருக்கிறார்கள்)

''பேரன்பு கொண்டவரே, பெரியோரே, என் பெற்ற தாய்மாரே, நல் இளஞ்சிங்கங்காள்!''

என்று தொடரும் பாரதிதாசன் பாட்டைப் பாடுகிறார்.

அல்லி: அருமையான கவிதை - கவிஞரே!.. பாம்புக் கூட்டம் போராடும் பாழ் நிலத்தைப் புதுக்கியவர் யார்? எழுச்சி நிறைந்த கேள்வி - இந்த கேள்வி மணிமகுடபுரியின் மக்கள் இதயத்திலே கிளம்புமானால் - ''யார்?'' ''யார்?'' என்ற கேள்விக்குறி - அங்கிங்கெனாதபடி எங்கும் தோன்றி விடுமானால் - ஒரே நாளில் மணிமகுடம் மக்கள் மகுடமாகி விடும்!

கவிஞர்: அல்லி! கவிஞரின் நெஞ்சிலே பிறந்த கவிதைக் குழந்தை உன்னைப் போன்ற வீரப் பெண்மணிகளால் தாலாட்டி வளர்க்கப்பட வேண்டும்!

அல்லி: தாலாட்டுவதா? அய்யோ.. எழுச்சி மயமான கவிதைக் குழந்தைகளை நான் தாலாட்டி தூங்க வைக்க மாட்டேன். மக்கள் இதயமெனும் தாழ்வாரத்திலே தவழ விடுவேன். வேல் கைக் கொடுத்து ''வென்று வா'' என அனுப்புவேன் - கவிஞரே - இப்படி உணர்ச்சிக் காவியங்களை, ஏழைகளை வாழ்விக்கும் உரிமைப் பாடல்களை, கோழையையும் கொள்கை வீரனாக்கும் கவிதை வரிகளை... எழுதி எழுதிக் குவியுங்கள்! குனிந்து கிடக்கும் விடுதலை உணர்ச்சி, கொடியேந்திக் கிளம்பட்டும்! கூனன் நிமிரட்டும்! குருடன்

கண் பெறட்டும் -ஊமை பேசட்டும் - உரிமை வெல்லட்டும்! ஊரும், உலகமும் வாழட்டும்!

(அப்போது பொன்னழகன், புதுமைப்பித்தன், கருப்பு ரோஜா மூவரும் வருகிறார்கள்)

பொன்: அல்லி - இவரைத் தெரியுமா உனக்கு? இவர் பெயர் புதுமைப் பித்தன்.

அல்லி: வணக்கம்.

புது: வணக்கம்.

பொன்: தற்செயலாக சந்தித்தேன். ஆனால் சந்திப்பு மிகவும் பயனுள்ளதாயிற்று! இவர் - புரட்சிக் கருத்துக்கள் கொண்டவர் - ஆட்சி பீடம் மக்கள் கைக்கு மாற வேண்டும் என்பதிலே என் கொள்கையும், மக்கள் மனவளம் பெற வேண்டும்; அப்போதுதான் அவர்கள் ஆட்சி புரியத் தகுதியுள்ளவர்கள் என்பதிலே உன் கொள்கையும் கொண்டவர்.

அல்லி: சுருக்கமாகச் சொல்லுங்களேன் - மொத்தமாக என் கொள்கை கொண்டவர்.

கருப்பு ரோஜா: மன்னிக்க வேண்டும் - தலைவர் என்னை அறிமுகப்படுத்த தவறி விட்டார் - இல்லை; மறந்து விட்டார் - நான்தான் கருப்பு ரோஜா! கிட்டதட்ட உங்கள் கொள்கையுடையவன் - என்னையும் இங்கே அங்கத்தினராக...

பொன்: நான்தான் முன்பே சொன்னேனே! நீ அங்கத்தினராக - இன்னும் ஆறு மாதம் செல்லும் - அதுவரை நீ வேண்டுமானால் இங்கே இருக்கலாம் - அல்லி! புதுமைப் பித்தரை நமது மன்றத்தின் அங்கத்தினராக ஆக்குவதில் எனக்கு எந்தவித ஆட்சேபணையு மில்லை...

அல்லி: பிறகென்ன? மன்றத்தின் சட்ட திட்டங்களைக் கூறி விட்டீர்கள் அல்லவா?

புது: எல்லாம் முடிந்து விட்டது. கையெழுத்துப் போட வேண்டியதுதான்... பாக்கி...

(அல்லி ஒரு புத்தகத்தை எடுத்து வந்து அதில் கையெழுத்துப் போட நீட்டுகிறாள், புதுமைப்பித்தன், பேனாவைக் கையில் வாங்குகிறான்.

அல்லி: தயவு செய்து உறுதிமொழி எடுத்துக் கொண்டு...

புது: என்ன உறுதிமொழி?

அல்லி: மணிமகுடபுரியின் மக்கள் நலத்திற்காகவும் அவர்கள் விடுதலைக்காகவும் பாடுபடுவேன்.

புது: மணிமகுடபுரியின் மக்கள் நலத்திற்காகவும் அவர்கள் விடுதலைக்காகவும் பாடுபடுவேன்.

அல்லி: மக்களுக்காக செய்ய வேண்டிய எந்தப் பணிகளையும், மக்கள் மன்றத்தின் கட்டளைப்படி செய்வேன்.

புது: மக்களுக்காக செய்ய வேண்டிய எந்தப் பணிகளையும், மக்கள் மன்றத்தின் கட்டளைப்படி செய்வேன்.

அல்லி: நாட்டு விடுதலைக்காக, உயிரைத் தரவும் தயங்க மாட்டேன்.

புது: நாட்டு விடுதலைக்காக, உயிரைத் தரவும் தயங்க மாட்டேன்.

அல்லி: உம் - கையெழுத்துப் போடுங்கள்.

புது: உம் – கையெழுத்துப் போடுங்கள்.

அல்லி: (சிரித்தபடி) இல்லை -கையெழுத்துப் போடுங்கள் என்கிறேன்.

புது: மன்னிக்கவும் (என்று கூறியபடி கையெழுத்திடுகிறான்)

காட்சி 4

(அமைச்சர் வீடு! அவரது மகள் கலாராணியின் அறை. கலாராணி தூங்கிக் கொண்டிருக்கிறாள். கதிரவனின் ஒளி, பலகணி வழியே அவள் படுக்கையில் பாய்கிறது. அவளது தோழி வஞ்சி, காலை உணவுகளை எடுத்துக் கொண்டு, அறைக்குள் பிரவேசிக்கிறாள், கலாராணி தூங்கிக் கொண்டிருப்பதைப் பார்த்து...)

வஞ்சி: கலாராணி - கலாராணி! சரிதான் - சந்திரனை அணைத்துக் கொண்டு தூங்கிய உனக்கு கதிரவனின் கரம் பட்டும் எழுந்திருக்க மனம் வரவில்லை போலும்!

கலாராணி: (சோம்பல் முறித்து எழுந்தபடி) என்னடி இது? சந்திரனை அணைப்பதாவது; கதிரவனின் கரம் படுவதாவது?

வ: நிலவு எழுந்ததும் படுத்து விட்டாய் - சூரியன் கிளம்பியும் விழிக்க வில்லை! அதைத்தான் கவிதை நடையில் சொன்னேன்.

கலா: கவிதை நடையில் சொன்னாயாக்கும் - சந்திரனை அணைப்பது - கதிரவன் கரம் - படுவது - நான் என்ன தாரையா? அல்லது தாமரையா? நல்ல வேளை இரண்டு பேரோடு விட்டாயே; இன்னும் மூன்று பேரைச் சொல்லாமல் இதோ பார்; வஞ்சி! இனிமேல் இம்மாதிரி கண்ணை மூடிக் கொண்டு கவிதை நடையில் உளறாதே!

வ: கண்ணை மூடிக் கொண்டு நான் ஏன் உளறுகிறேன்? அப்படிக் கனவிலே உளறுவது, இந்தக் கலாராணிதான்! :

கலா: கனவிலே உளறினேனா? என்னடி உளறினேன்?

வ: அய்யோ - அதைச் சொல்ல எனக்கே வெட்கமாயிருக்கிறது?

(வஞ்சி கலாராணியைக் கிண்டல் செய்யும் பாவனையில்)

கண்ணாளா! உங்கள் இன்பமுகம் மறந்து போச்சே! இத்தனை நாள் என்னை ஏன் பிரிந்து சென்றீர்கள்?... ஆகா என் மீது உங்கள் கரம் படுவது; அய்யோ - என்னை மெய் மறக்கச் செய்கிறதே! வான விளக்கு எரியும் போது, வீட்டு விளக்கு எதற்காக? நிறுத்தி விடட்டுமா? அன்பரே! சுவாமி! பிராணநாதா!... ஆருயிரே! என்னை மறக்க மாட்டீர்களே? இந்த ஜென்மத்தில் மட்டுமல்ல; எல்லா ஜென்மங்களிலும் நாம் சேர்ந்தே பிறப்போம்.. இரட்டைக் குழந்தைகளாக!

கலா: சீ!.. இப்படியெல்லாம் உளறியிருக்க மாட்டேன்.. நீ கற்பனை செய்கிறாய்; குறும்புக்காரி...

வ: சரி; போகட்டும்! ஆமாம் கலாராணி! கொஞ்ச நாளாகவே ஏதோ சிந்தனையில் இருக்கிறாயே, என்ன அது?

கலா: ஒன்றுமில்லையடி! உன்னிடம் சொல்லாமல் வேறு யாரிடம் சொல்லப் போகிறேன்... பிறகு சொல்லுகிறேன்.

வ: "கா" வன்னா விஷயம்தானே, கலாராணி!

கலா: போடி!... (கலைந்து கிடக்கும் கூந்தலை சீவிக் கொள்ளுகிறாள்)

வ: சரி!.. முதலில் சாப்பிடு.

கலா: அதுசரி, பல் கூட துலக்க வேண்டாம் போலிருக்கிறதே!

வ: முத்துக்கனை துலக்குவானேன்? முல்லை அரும்புகள் என்பார்களே பற்களை; துலக்கினால் கசங்கி விடுமே.

கலா: ஏ, கவிதைப் பைத்தியம்- இரு, இரு - வருகிறேன்!

(கலாராணி, பல் துலக்க அறையை விட்டு வெளியேறுகிறாள். அமைச்சர் குணசீலர் அறைக்குள் வருகிறார், அவர் வஞ்சியிடம்)

குணசீலர்: என்ன வஞ்சி - கலாராணி எங்கே?

வ: இப்போதுதான் உதயமானாள் - காலைக் கடன் என்னும் மேகத்தில் மறைந்திருக்கிறாள் - வந்து விடுவாள்?

குண: இரவு அதிக நேரம் விழித்துக் கொண்டிருந்தாளா? எங்கே போனீர்கள்? அரண்மனைக்கா? அரண்மனையில், அரசரைச் சந்தித்தீர்களா? அரசரோடு கலா பேசினாளா? பேசும்போது நீயும் கூட இருந்தாயா? என்ன பேசினார்கள்? திருமண விஷயமாக ஏதாவது அரசர் வாய் திறந்தாரா? கலாராணி அதற்குச் சம்மதம் தெரிவித்தாளா? சம்மதத்தைக் கேட்டு அரசர் மகிழ்ச்சி அடைந்தாரா? அரசரும் கலாவும் எவ்வளவு நேரம் பேசிக் கொண்டிருந்தார்கள்...?

வ: உங்களது ஆயிரம் கேள்விகளுக்கு அடியாள் சொல்லும் ஒரே பதில் என்னவென்றால், கலாராணி அரண்மனைக்குப் போகவுமில்லை- அரசரைப் பார்க்கவுமில்லை.

குண: என்ன? போகவில்லையா? வஞ்சி - உன்னிடம் எத்தனை தடவை சொல்லிவிட்டேன்- அரசரையும் கலாராணியையும் சந்திக்க வைத்து, இருவரிடையே காதலை உண்டுபண்ண வேண்டியது உன் கடமை என்று எத்தனை தடவை சொல்லி விட்டேன்.

வ: பிடிவாதத்திற்கு மருந்து ஏது பிரபு? நான் எவ்வளவுதான் சொன்னாலும், அவள் அரசரைச் சந்திக்க விரும்புவதே இல்லை.

குண: வஞ்சி! அரசர் மீது அவளுக்கு எப்படியும் காதல் ஏற்பட வேண்டும்.

வ: என்ன செய்வது? தங்களுக்கு அரசர் மீது ஏற்படும் காதல் கூட அவளுக்கு ஏற்படவில்லை.

குண: எனக்கு அரசர் மீது அல்ல காதல் - மணி மகுடபுரியின் சிம்மாசனத்தின் மீது! அரசர் - கலாராணி திருமணம் நடந்து விட்டால் - என்னுடைய மருமகன் மணிமகுடத்தை ஆளுகிறான் என்பேன்! பிறகு என்னுடைய பேரன் ஆளுகிறான் என்பேன்! மணிமகுடபுரி கொலுமண்டபத்தின் மீது இந்தக் குணசீலரின் குலக் கொடியல்லவா படரும்?

வ: கவலைப் படாதீர்கள் பிரபு! - அரசனுக்கு நான் எப்படியும் வலை வீசுகிறேன்.

குண: என்ன நீயா?

வ: ஆமாம் - கலாராணி என்ற வலையை வீசுகிறேன்.

குண: சபாஷ் வஞ்சி - அந்த வேலையை உன்னிடம் ஒப்புவித்து விட்டேன். வெற்றிகரமாகச் செய்! - அரசருக்கும் கலாராணிக்கும் விரைவில் விவாகம் நடைபெற வேண்டும்.

வ: அதற்கு நான் பொறுப்பு.

குண:பேரன் பிறக்க வேண்டும்.

வ: அதற்கு நான் பொறுப்பல்ல - பேத்தி கூட பிறக்கலாம்.

(அமைச்சர் அறையை விட்டு சிரித்தபடி போகிறார்)

காட்சி 5

(வெற்றிலை, பாக்கு, பத்திரிகை முதலியன விற்கும் கடை. அதன் எதிரே கூட்டமாக நின்று சிலர் சாமான் வாங்குகிறார்கள். ஒருவன் மக்கள் தொண்டன் பத்திரிகையை வாங்கிப் பிரிக்கிறான். பிரித்தவன் ஆச்சரியமுடன்)

ஒருவன் : அடடே! ஒரு செய்தி பார்த்தீர்களா?

மற்றவன் : என்ன? என்ன?....

ஒருவன்: (படிக்கிறான்) குருநாதர் மடாலயத்துக்கு முன்பு குழப்பம் செய்ய முயற்சி - குதிரைப் படைகள் கலகக்காரர்களை விரட்டியடித்தன. புதுமைப்பித்தன் என்னும் பெயருடைய ஒரு ஆள் மடாலயத்து பூஜைக்காகச் செல்லும் மக்களை வழிமறித்துக் குருநாதரும் நம்மைப்போல ஒரு மனிதர்தானே? அவர் காலில் எதற்காக விழுந்து காணிக்கை செலுத்த வேண்டும்? என்று தெய்வ நிந்தனையாகப் பேசியதின் விளைவாகச் சிறு குழப்பம் ஏற்பட்டது. அவனது பிரசங்கத்தைக் கேட்பதற்காக மடாலயத்துக்குச் சென்ற மக்கள் தேங்கி நின்றுவிட்டார்கள். அவர்களையெல்லாம் அவன்

தூண்டிவிட்டு குருநாதரை அவதூறாகப் பேசினான். அதனால் அரசாங்கக் குதிரைப் படைகள் அனுப்பப்பட்டு நிலைமை சமாளிக்கப் பட்டது.

மற்றவன்: இவன் யாருடா புது ஆளு? பெரிய ஆசாமிதான் போல இருக்கு! பொன்னழகனை விட இவன் தீவிரவாதியோ?

ஒரு : என்னடா பெரிய தீவிரவாதி? குருநாதரைப் போய்அவதூறாகப் பேசி, தெய்வ நிந்தனை செய்வதா தீவிரவாதிக்கு அழகு? நாஸ்திகப் பயல்!

(அப்போது கருப்பு ரோஜா கடையில் வந்து ஏதோ சாமான் வாங்குவது போல நின்று கொண்டு அந்த உரையாடலைக் கவனிக்கிறான். அவன் அவர்கள் பேச்சில் குறுக்கிட்டு)

க.ரோ.: யாரது? புதுமைப்பித்தன் குழப்பம் செய்தானா?

ஒரு: ஆமாம், இதோ பார்! (பத்திரிகையைக் கொடுத்தல்)

க.ரோ: (படித்துவிட்டு) அடப்பாவி; நான் கண்ணால நேர பார்த்தது - அச்சு எழுத்திலே அடியோடு மாறி வருகிறதே!

ஒரு: ஓகோ; நீ குழப்பத்தை நேரில் பார்த்தாயா?

க.ரோ: குழப்பமா?

ஒரு: பிறகு என்ன நடந்தது?

க.ரோ: புதுமைப்பித்தன் பிரசங்கம் நடந்தது.

ஒரு: குழப்பம் நடந்ததாகப் போட்டிருக்கிறதே?

க.ரோ: பிரசங்கத்துக்கு இந்தப் பத்திரிகையாசிரியரின் மொழிபெயர்ப்பு குழப்பம் என்பது?

ஒரு: மடாலயத்துக்குச் செல்லும் மக்களை வழிமறித்தது உண்மைதானே?

க.ரோ: நூற்றுக்கு நூறு பொய் - மடாலயத்துக்குச் சிறிது தூரத்தில் கூட்டம் நடந்தது உண்மை. மடாலயத்துக்குச் செல்ல வேண்டிய மக்கள் கூட்டம் கேட்க நின்று விட்டது உண்மை.

காணிக்கை செலுத்துவோர் வரவில்லையே என்று குருநாதர் காத்துக் கிடந்தது உண்மை...

ஒரு: குழப்பம் ஏற்பட்டுக் குதிரைப்படை வந்தது மட்டும் பொய்யாக்கும்?

க.ரோ: அதுவும் உண்மைதான்! ஆனால் செய்தியில் தான் சிறு மாறுதல், குழப்பம் ஏற்பட்டுக் குதிரைப்படை வரவில்லை. குதிரைப்படை வந்த பிறகே குழப்பம் ஏற்பட்டது!

ஒரு: மடாலயத்துக்கு முன்பு ஏனய்யா கூட்டம் போட வேண்டும்!

க.ரோ: புண் இருக்குமிடத்தில்தானே மருந்து போட வேண்டும்.

ஒரு: என்னமோ எனக்கு உன் பேச்சில் நம்பிக்கையில்லை, பத்தரிகையிலே பொய் போடுவானா?

க.ரோ: போய்யா! உன்னைப் போல ஆளை நம்பித்தானே அவன் பத்திரிகையே நடத்துகிறான்! அச்சிலே வருவது அவ்வளவும் உண்மை என்கிற ஆஷாடபூதிகள் அதிகமாகிவிட்டதால்தான்... அல்லித் தண்டுலே அனுமார் புகுந்தார் - ஆதிசேஷன் அகிலத்தைச் சுமக்கிறான் - ஆட்டுக் குட்டிப் பாட்டுப் பாடுது - அணிப்பிள்ளை பாலங் கட்டுது - நேற்றுப் பிறந்த குழந்தை கேட்ட வரங் கொடுக்குது - என்றெல்லாம் கயிறு திரித்து விட்டார்கள் - போய்யா... போ!

(என்று கூறிவிட்டு கருப்பு ரோஜா அதைவிட்டுப் போகிறான். பத்திரிகை படிப்பவன் (செய்தியைக் கண்டு) அடேடே! சீமான்கள் சபை இன்னைக்கு கூடப் போகுதாமே; வாங்கய்யா நாமும் போகலாம்)

காட்சி 6

(சீமான்கள் சபை கூடுகிறது. சீமான்களும் அமைச்சர் குணசீலரும் இருக்கிறார்கள். தனி அழைப்பின் பேரில் குரு

நாதரும், 'மக்கள் தொண்டன்' ஆசிரியர் அரிஹரநாதரும் அமர்ந்திருக்கிறார்கள். சபையை விட்டு சிறிது தூரத்தில் பொது மக்கள் அமர்ந்திருக்கிறார்கள். அங்கே - பொன்னழகன், புதுமைப் பித்தன், அல்லி முதலியோர் இருக்கிறார்கள்)

குணசீலர்: பெருமைக்குரிய சீமான்களே!... மணிமகுட புரியின் பிரதிநிதித்வம் வாய்ந்த இந்த சபை, இன்றைய தினம் செய்ய வேண்டிய தீர்மானங்களிலே மிக முக்கியமானது தேவாலயம் ஒன்று நிர்மாணிப்பதைப் பொறுத்த விஷயமாகும். மணிமகுடபுரியில் உலகம் கண்டு வியக்கக் கூடிய அளவுக்கு ஒரு அதிசயம் இருப்பது நமக்கெல்லாம் பெருமையாகும். அத்தகைய சிரஞ்சீவித் தன்மை வாய்ந்த அதிசயம் நாம் புதிதாகக் கட்ட இருக்கிற தேவாலயமாயிருக்கட்டும். நாம் நினைக்கிற அளவுக்கு பிரம்மாண்டமான முறையிலே ஆலயம் கட்ட - தலைநகரிலே இடவசதி இல்லை. அதைப் பொறுத்து - தலைநகரின் ஒரு பகுதியான கொடிக்கால் நகரை காலி செய்து விட்டு அங்கே கோயிலைக் கட்டலாம் என்று ஒரு யோசனையும் இருக்கிறது. இந்த யோசனை ஏழை பங்காளரான நமது குருநாதரின் யோசனையாகும்- கொடிக்கால் நகரில் கோயில் எழுப்புவது சம்பந்தமாக அனைவரும் தங்கள் யோசனைகளைக் கூறி தெய்வீகம் பொருந்திய இந்தத் தீர்மானத்தை விரைவில் நிறைவேற்ற வேண்டுகிறேன். இதுபற்றி நல்ல யோசனைகள் கூறுவதற்கு பொதுமக்களும் அனுமதிக்கப்படுவார்கள்.

(அமைச்சர் அமருகிறார்)

சீமான் 1: ஆண்டவனுக்கு ஆலயம் கட்ட யார் ஆக்ஷேபிக்கப் போகிறார்கள்- தாராளமாகச் செய்யலாம்.

சீமான் 2: யாரையும் யோசனை கேட்கத் தேவையில்லை. குருநாதர் இஷ்டம் போல் எங்கு வேண்டுமானாலும் எப்படி வேண்டுமானாலும் கோயில் அமைக்கலாம்.

சீமான் 3: ஆலயம் தொழுவது சாலவும் நன்று!- கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்.

குண: மகேசன் காரியத்திற்கு மறுப்பே இருக்காது என எண்ணுகிறேன். மிகவும் மகிழ்ச்சி.

(பொன்னழகன் எழுகிறான்)

பொன்: கொடிக்கால் நகரத்தில் கோயில் கட்டுவதை நான் எதிர்க்கிறேன்.

குண: ஏன்...?

பொன்: கொடிக்கால் நகரம் ஏழைகள் பகுதி -ஆயிரம் குடிசைகள் அழிக்கப்பட்டு, அங்கே ஆலயம் கட்டுவது அனுமதிக்க முடியாத செயல்! வெற்றிலை பயிரிட்டு வயிறு வளர்க்கும் ஏழைகள் எங்கே போவார்கள்? ஆயிரம் குடும்பங்களின் கதி என்ன? அந்தக் குடிசைகளுக்கு உயிரூட்டும் கொடிக்கால்கள் அழிக்கப்பட்டால் குமுறியெழும் வறுமைத் தீயை அணைப்பதற்கு யாராலும் இயலாது- குழந்தை குட்டிகளோடு ஏழைகள் தவிக்க - கொட்டு மேளத்தோடு தேவாலயத்துக் கும்பாபிஷேகம் நடைபெறுவதை மனித இருதயம் படைத்த யாரும் ஒப்புக் கொள்ள மாட்டார்கள். தேவனுக்கு ஒரு ஆலயம் தேவையானால், வேறிடத்தைத் தேர்ந்தெடுங்கள். குடிசை வாழ்வோரின் வயிற்றிலே மண்ணைப் போடாதீர்கள்.

குண: இவ்வளவு பெரிய நாட்டிலே அந்த ஆயிரம் குடிசைக்காரர்களும் வசிப்பதற்கா இடமில்லை?

பொன்: அதே கேள்வியைத் திருப்பிக் கேட்டால்? இவ்வளவு பெரிய தேசத்திலே - தேவனுக்கு ஆலயம் அமைக்கவா வேறு இடமில்லை? என்ன பதில் சபையோர்களே? இதற்கு என்ன பதில்? ஏன் - அந்த ஏழைப் பூச்சிகள் மீது உங்களுக்கு என்ன கோபம்? பருவத்தால் கெட்டாலும், செழிப்பின்றி செத்தாலும், கொடிக்கால் வரி கொடுத்துத்தான் தீரவேண்டுமென்று கட்டாயப்படுத்திப்

பெற்றுக் கொள்கிறீர்கள் வியர்வை கொட்டிப் பயிரிடும் வெற்றிலைக்கு முக்கால் பங்கு வரி செலுத்தி, கால் பங்கு வருமானத்திலே காலத்தை ஓட்டுகிறார்கள். அந்தக் கதியற்றவர்கள் - திடீரென்று திசைமாறி ஓடவேண்டும். அங்கே தேவாலயம் கட்டப் போகிறோம் என்று திடீர் உத்தரவு போடுவது இரக்கமற்ற செய்கை - ஆயிரம் குடும்பங்களை ஏக காலத்தில் சாக அடிக்கும் கொலைவெறிக் கொள்கை! தயவு செய்து கொடிக்காலை ஒழித்து கோயில் கட்டும் திட்டத்தைக் கைவிட வேண்டுகிறேன்.

குண: இதற்கு குருநாதர் அவர்களே பதில் சொல்வார்.

(குருநாதர் எழுகிறார்)

குரு: கொடிக்காலை அழிப்பது கூடாது என்று ஒரு குரல் கேட்கிறது! - கேலிக்குரிய குரல்! கோயில் தேவையில்லை என்று கூறுவதற்கு பயந்து கொண்டு, கொடிக்கால் நகரத்து மக்களை கேடயமாக்கிக் கொண்டு அலறிய கேலிக்குரிய குரல்! இதுபோன்ற நாத்தீகக் கொள்கை பரவி விட்டது என்பதற்காகத்தான் ஆலயம் அவசரமாகத் தேவைப்படுகிறது என்கிறேன் நான்! ஆயிரம் குடிசைகள் அழிந்து விடுமாம் - ஒரு ஆத்மா அங்கலாய்க்கிறது அதற்காக! அழியட்டுமே! ஒரு ஆலயம் கட்டுவதால் ஆயிரம் குடிசைகள் அழியலாம் - அதே நேரத்தில் மணிமகுட புரியின் லட்சோப லட்சம் மக்களுக்கு மோட்சப்பாதை திறக்கப்படுகிறது என்பதை மறந்து விடலாமா? பலர் வாழ சிலர் தங்கள் வாழ்வைத் தியாகம் செய்யத்தான் வேண்டும்! - தேவாலயம், கொடிக்கால் நகரில் அமைந்தே தீர வேண்டும்!

புது: மறுக்கிறேன் - மறுக்கிறேன்!

குண: என்ன? - கொடிக்கால் நகரில் தேவாலயம் அமையக் கூடாது என்றா?

புது: இல்லை - தேவாலயமே தேவையில்லை; என்கிறேன் நான்!

குரு: ஆ! - பச்சை நாத்திகம் படமெடுத்தாடுகிறது! -அவனை விட இவன் மோசம்! அவனாவது இடத்தை மறுத்தான்; இவன் இறைவனையே மறுக்கிறான்!

புது: குருநாதரே! ''இறைவன் மறுப்பு'' ''நாத்திகம்'' என்கிற சில சொற்களை வைத்துக் கொண்டு, அறிவியக்க வாதிகளை வேட்டையாடாதீர்! கோயில் தேவையில்லை என்பது நாத்தீகம் என்று யார் சொன்னது? கூறும் கேட்போம் - மணிமகுடபுரியின் கோயில் எண்ணிக்கை எவ்வளவு? புள்ளி விவரத்தோடு கூறட்டுமா? தலைநகரத்திலே மட்டும் - ஐநூறு ஆலயங்கள்! தேசம் முழுவதும் ஆறாயிரம் ஆலயங்கள்! இந்த ஆறாயிரம் ஆலயங்களுக்கு செலவிடப்படும் மொத்தத் தொகை அறுபது கோடி ரூபாய் ஆண்டு ஒன்றுக்கு! அந்த ஆலயங்களிலே - நிலமாக, அணிமணியாக, வைரக் கீரிடங்களாக முடங்கிக் கிடக்கும் பணம் எவ்வளவு - முன்னூறு கோடி ரூபாய் குருநாதரே! முன்னூறு கோடி ரூபாய்! பாலின்றித் தவிக்கும் பாலகர்க்குப் பலனில்லாமல் - வேலையின்றி வாடும் வாலிபர்க்கும் பலனில்லாமல் - எலும்பாய்த் தேய்ந்து, எறும்பாய் உழைத்து, இரும்பால் உள்ளங் கொண்ட சீமான்களிடம் சித்திரவதைப்படும் ஜீவன்களுக்கு உபயோகமில்லாமல் - தேர்களாய் தேவாலயக் கோபுரங்களாய் வெள்ளிக் கலசங்களாய், மேடிட்டுக் கிடக்கும் முன்னூறு கோடி ரூபாய்! மணிமகுடபுரியின் பொக்கிஷத்திலும் இல்லாத பணம்! இது போதாதென்று, இன்னும் ஒரு கோயிலா? - யார் கேட்டது? - யாருக்குத் தேவை புதிய கோயில்?

குரு: ஆண்டவனே கேட்டார்!

புது: ஆறாயிரம் கோயில் போதாதென்றா?

குரு: ஆமாம்!

புது: ஆயிரம் வீடுகளை அழித்துவிட்டு, தனக்கு ஒரு கோயில் கேட்டாரா?

குரு: ஆமாம்!

புது: அப்படிக் கேட்டவர் ஆண்டவனாக இருக்க மாட்டார். ஆண்டவனுக்குச் சொல்லப்படும் லக்ஷணப்படி அவருக்குத் தேவையானது ஆலயமல்ல! நல்லவர்களின் இருதயமே அவருக்கு ஆலயம்! அவருக்கு வீடு! அவருக்கு மாளிகை! ஆண்டவன் என்னமோ மணிமகுடபுரி முழுவதும் தேடிப் பார்த்து வாடகைக்கு கூட ஒருவீடு கிடைக்காமல் - குடும்பத்தோடு அலைவது போலவும் - அதற்காகக் கவலைப்பட்டு, அவசரமாக வீடுகட்ட குருநாதர் முன்வந்தது போலவும் இந்த சீமான் சபை கருதுவது - சிரிப்புக்குத் தான் இடமாகும் - தயவு செய்து இந்த எண்ணத்தை விட்டுவிட வேண்டுகிறேன்.

சீமான் 1: அவமதிப்பு! அவமதிப்பு! குருநாதரைக் கேலி பேசுகிறான் - உடனே வெளியேற்றுங்கள் அவனை!

குண: பொதுமக்கள் அபிப்பிராயம் வழங்குவது நிறுத்தப்பட்டது! இனி தீர்மானத்தின் மீது வாக்கெடுக்கப்படும்- இந்த சபையிலே சீமான்களைத் தவிர வேறு யாருக்கும் வாக்குரிமை இல்லையாததால்.... அனைவரும் அமைதியாயிருக்க வேண்டும்.

புது: அமைச்சர் அவர்களே! கொஞ்சம் யோசியுங்கள்! ஆயிரம் வீட்டுக்காரர்கள் நாதியற்றுப் போய்விடுவார்கள்! ஆண்டவனே விரும்பாத செயல் இது! அன்பைக் கொன்று புதைத்து, அங்கே எழுப்பும் ஆலயத்திலே 'அன்பே கடவுள்' என்று எழுதாதீர்கள்! எங்கள் வேண்டுகோளை ஏழைகளின் குரலை மதிக்காமல் தீர்மானம் நிறைவேறினால்...

குண: புரட்சி நடக்குமா?

புது: நடக்காது! ஆனால், புகையும் எரிமலை என்று பொங்குமோ அதுவும் தெரியாது! ஆயிரம் குடிசைகள் நிர்மூல மாக்கப்பட்டு, அங்கே ஆண்டவன் எழுந்தருளுவானேயானால் -

அதற்குப் பெயர் ஆலயமென்றா கூறுவார்கள், அறிவுடையோர்! ஆண்டவனுக்கு அர்ச்சிக்கப்படும் மலர்களிலே ஆயிரம் வீட்டுக்காரர்கள் சிந்திய ரத்தக்கறை படிந்திருக்கும்! அவனுக்குக் காட்டப்படும் தூப தீபங்களிலே தாய்மார்களின் துயர முகந்தான் தெரியும் - தூய ஜோதி தெரியாது! பச்சரிசிப் பொங்கலும், பாயசமும் படைப்பீர்களே ஆண்டவனுக்கு - அந்தப் பொங்கல் பச்சை சிசுக்களின் உடலைப் பொடியாக்கி செய்யப்படும் நைவேத்தியமாகத் தானிருக்கும்! ஆலயத்து மணியிலே தெய்வீக ஒலி கிளம்பாது அமைச்சரே! அனாதையாக விடப்பட்ட ஆயிரம் குடிசைகளின் சோகத் தொனிதான் கிளம்பும்! பக்தி ரசக்கீர்த்தனை கேட்காது பகவான் சன்னிதானத்திலே, வாழ்விழந்த பாட்டாளிகளின் ஒப்பாரி கேட்கும்! புலம்பல் கேட்கும்! அழுகுரல் கேட்கும்! தேவாலயம், தேம்பி அழுவோர் பெருகிவிட்ட பிணக்காடாகும் - சுடுகாடாக மாறும் - மயான பூமியாகத் திகழும்! வேண்டாம் - ஆண்டவன் கோயிலில் அழுக்கும் இழுக்கும் வேண்டாம் - ஆண்டவன் பெயரால் ஆண்டவனுக்குக் களங்கம் தேடாதீர்கள்!

குண: நிறுத்து! இனியும் பேசினால் - நிதானமிழப்போம்- கைது செய்ய வேண்டியநிலை பிறக்கும். தீர்மானம் நிறைவேறப் போகிறது. அமைதியாக இருக்க முடியுமானால் உள்ளே அனுமதிக்கிறேன், இல்லையானால்...

புது: நாங்கள் வெளியேறுகிறோம்! அமைச்சருக்கு சிரமம் வேண்டாம்! ஆண்டவனே! நீ இருந்தால் கேள் இந்த அக்கிரமக்காரர்களை! அய்யோ - ஆயிரம் வீடுகளை எரித்து விட்டு, இங்கே நீ இருந்து சிரிக்கப் போகிறாயாமே, அடுக்குமா, உனக்கு இந்த அநியாயச் செயல்? சிரி! நன்றாகச் சிரி! ஏழைகளின் கண்ணீரில் நீந்திக் கொண்டே சிரி! ஏழைகள் சமுதாயமே- நீ அழு! ஆண்டவன் சிரிக்கப்போகிறான்- அந்தரத்திலே, இருக்க இடமின்றி தொங்கும் அவனுக்கு அரசாங்கத்தார் ஆடம்பரமான ஆலயம்

அமைக்கப் போகிறார்கள்! ஆகவே எதிர்க்க முடியாத ஏழையே! ஏமாற்றப்பட்ட தோழனே! நீ அழு! அழு! இனி! அஞ்சு! குனி! பிதற்று! புலம்பு! ஒப்பாரி வை! கண்ணீர் உனக்கு மட்டும்தான்சொந்தம் - அதை யாரும் அபகரிக்க முடியாது. ஆகவே அழு நண்பா; அழு! உனக்கு விடுதலையே கிடையாது; இந்த சீமான்கள் இருக்கும் வரை - இந்த குருநாதர்கள் இருக்கும் வரை, உனக்கு விடுதலையே கிடையாது!

(புதுமைப்பித்தன் வெளியேறுகிறான்)

குண: பொதுமக்கள் அனைவருமே வெளியேற வேண்டும். உம்... உடனே!

(அனைவரும், பொன்னழகன், அல்லி உட்பட வெளியேற்றப்படுகிறார்கள்)

குண: (பத்திரிகை ஆசிரியரைப் பார்த்து) மக்கள் தொண்டன் பத்திரிகை ஆசிரியர் ஸ்ரீஜத் அரிஹரநாதரைக் கேட்டுக் கொள்கிறேன்... இங்கு நடந்த சம்பவங்கள் எதுவும்....

அரிஹரநாதர்: (குழைவோடு)... நிச்சயமாக பத்திரிகையில் வெளியிட மாட்டேன் என்று இந்த சீமான்கள் சபையில் உறுதிக் கூறுகிறேன். யாரும் கவலைப்படத் தேவையில்லை! ஹி..ஹி...ஹி.. (பல் இளித்தல்)

குரு: ம்... தீர்மானம் நிறைவேறட்டும்!

காட்சி 7

(மக்கள் மன்றம் - புதுமைப்பித்தன், பொன்னழகன், அல்லி மற்றும் தொண்டர்கள், கருப்பு ரோஜா - அல்லி பேசிக் கொண்டிருக்கிறாள்)

அல்லி: தீர்மானத்திலே அரசன் கையெழுத்திட்டு விட்டால், கொடிக்கால் நகரத்து மக்கள் இருக்க இடமின்றித் தவிக்கப் போகும்

தாங்கொணாத வேதனைக்காட்சிகளைத் தான் நாம் காண வேண்டும். கொடிக்காலை அழித்துக் கோயில் கட்டுவதும், குடிசைவாழ் தோழர்களின் குரல்வளையை நெறிப்பதும் ஒன்றுதான் - என்பதைக் கோலோச்சும் குணாளர்கள் இப்போதும் மறுப்பார்கள்; இனி எப்போதும் மறுப்பார்கள். அந்தக் கோணங்கிகள் வழிக்கு வர, நமது கண்டனக் கொடி நாடெங்கும் பறக்க வேண்டும்.

பொன்: கொடி பறந்து பயனில்லை. கண்டன முழக்கங்கள் கடல் அலைபோல் கொந்தளித்தும் பயனில்லை -நான் சொல்லுகிறேன்; வேந்தனுக்கு இப்போது ஓலை அனுப்பவேண்டும். ''கொடிக்கால் நகரை அழிக்கும் தீர்மானத்தில் நீர் கையெழுத்திடலாகாது! மீறி கையொப்பமிடுவீரேயானால், உமது உயிருக்கே ஆபத்து நேரிடும்!''என்பது போல் எச்சரிக்கை வேண்டும்!

புதுமை: நண்பர் தருவது பலாத்கார மார்க்கம். அமைதியான முறையிலேயே காரியம் சாதிப்பதையே நான் விரும்புகிறேன்.

பொன்: மயிலைப் போய் இறகு கேட்பது- மத யானையிடம் இதோபதேசம் செய்வது - மலைப்பாம்புக்கு மகுடி ஊதுவது இம் மாதிரி அமைதி இப்போது தேவையில்லை...

புதுமை: மயிலிடம் இறகுப் பிச்சை - மதயானையிடம் உபதேசம் - மலைப்பாம்பிடம் மகுடி - இவைகளை எல்லாம் நான் அமைதி என்று கூறவில்லையே - அறிவீனமான செய்கைகளுக்குத்தான் இவைகள் எடுத்துக் காட்டுகள். நான் கூறும் அமைதி அரசியல் நாகரீகத்தைப் பொறுத்தது! அரசியலிலே தலைவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய கண்யத்தைப் பொறுத்தது! தங்கள் முடிவுப்படி அரசனின் உயிருக்கு தீங்கு மூட்டி விட்டால், அரசன் கொல்லப்பட்டு விட்டால், நமது எண்ணங்கள் சுலபமாக ஏற்றம் பெற்று விடுமா? அப்போது தான் நம் மார்க்கத்திலே, மலைக்கத்தக்க தடை ஏற்படும்.

''கொள்கைக்கு விரோதமானவர்களையெல்லாம் கொன்று விடும் கோஷ்டியினர்'' என்ற பழிச் சொல், நமது தூய்மை சேர் நற்கொள்கைகளை நாட்டிலே பரவ விடாமல் தடுத்து விடும்; நான் கேட்கிறேன் கொல்லப்பட வேண்டியது அரசனா...

க.ரோ: இல்லை- அந்தக் குருநாதர்!

புதுமை: அவருமல்ல, ஆசிரியர் அரிஹரநாதருமல்ல! அமைச்சர் குணசீலருமில்லை! கொல்லப்பட வேண்டிவை குருட்டு எண்ணங்கள்! இருட்டு நினைவுகள்! புலியைக் கொல்லாவிட்டால், அதன் பாய்ச்சலைத் தடுக்க முடியுமா? பாம்பை அடிக்காவிட்டால், அதன் விஷப்பல்லிலேயிருந்து தப்ப முடியுமா? என்று கேட்பீர்கள்! புலியும் பாம்பும் வாழும் காட்டை, நாட்டுக்கு நடுவிலே வைத்துக் கொண்டு புலி - புலியென்று கிலி கொள்வதில்என்ன லாபம்? அதனால், முதலில் அழிக்கப்பட வேண்டியது காடு! இருட்டு உள்ளம்! குருட்டு எண்ணம்! அவை ஒழிக்கப்பட்டால் – காடு நாடானால் கவலை தொலையும் - புதூர் ஒழிந்தால், புலியும் பாம்பும் ஒழியும்! அந்த நிரந்தரமான நிம்மதிக்குப் போராட வேண்டுமென்பதுதான் என் கொள்கை!

அல்லி: ஆமாம் - அவர் கூறுவது உண்மை! ஒரு அரசனைக் கொன்று விட்டால் நாளை இன்னொரு அரசன் வரப் போகிறான்- அவனையும் கொன்று விட்டால், மறுநாள், மற்றொருவன் வரப் போகிறான். இப்படி நாம் கொலை செய்வதும், புதிய அரசர்கள் வருவதுமாக இருந்தால், கொலைவாளைக் கீழே வைக்க நமக்கும் நேரமிருக்காது; கொலுமண்டபமும் அரசனில்லாமல் காலியாக இருக்காது!

பொன்: அப்படியானால் மகுடமே ஆளட்டும்; மக்களாட்சி தேவையில்லை என்கிறீர்களா?

புது: இல்லை... இல்லை... ஒரு அரசனை ஒழித்துப் பயனில்லை... அரச பரம்பரையே ஒழிய வேண்டுமென்கிறேன்.

பரம்பரையை ஒழிப்பதென்றால், புராண காலத்து பரசுராமனைப் போல கையிலே கோடாரி தூக்கி, கண்ட அரசர்களையும் கொல்வதென்பதல்ல பொருள்! அரசனிடமிருந்து பெறுகிற உரிமையை மக்கள் காப்பாற்றக் கற்றுக் கொள்ளவேண்டும்! ஒரு அரசனை மிரட்டியோ, அல்லது பணிய வைத்தோ, அல்லது நம் கொள்கைக்குத் திருப்பியோ - அவனிடமிருந்து நாட்டாட்சி மக்கள் கைக்கு மாற்றப்பட்டு, சில நாட்களிலேயே மக்களாட்சியில் கோணல் ஏற்பட்டு, மீண்டும் - மன்னராட்சியே மேல் என்ற நிலைமை வந்துவிடக் கூடாது! நிரந்தரமான மக்களாட்சி ஏற்பட மக்கள் உள்ளம் பண்படுத்தப்பட வேண்டும்! உதாரணமாக மணிமகுடபுரி மக்களுக்கு, அரசன் மீதும், அரசாங்கத்தின் மீதும், சீமான்கள் சபை மீதும் இருக்கிற ஆத்திரம் - அந்த குருநாதர் மீது இல்லையே, ஏன்? - நம்பிக்கை! மனவளமில்லாத குறையால் மண்டிக் கிடக்கும் மூடநம்பிக்கை! மன்னன் சாய்க்கப்பட்டு, மக்களாட்சி மலரும் போது, இந்த குருநாதர்கள், மகேசனின் பிரதிநிதிகள் என்று கூறிக் கொண்டு மறுமலர்ச்சித் தோட்டத்திலே மாடுபோல் நுழைவார்களேயானால், மக்களாட்சி நீண்ட நாள் வாழுமென்றா நினைக்கிறீர்கள்? வாழாது நண்பரே, வாழாது! அந்த ஆட்சி அலி ஒருவனுக்கு அழகான பெண்ணை திருமணம் செய்து வைத்த கதையாக முடிந்து விடும்!

அல்லி: அழகானபேச்சு! அருமையான விளக்கம்! மக்கள் மன்றம், புதிய கருத்துக்களை இன்று பெற்றது! பொன்னழகரும் இதை மறுக்க மாட்டார் என்றே நம்புகிறேன்!

பொன்: (சிரித்தபடி) எப்போதும் உன் கட்சிதானே ஜெயிக்கும் அல்லி! அதோடு உனக்கு சரியான துணையும் கிடைத்துவிட்டது.

புது: சரி எனக்கு கொஞ்சம் வேலையிருக்கிறது... பிறகு வருகிறேன்... கருப்பு ரோஜா!, வா போகலாம்!

(அல்லி, புதுமைப்பித்தன் போவதையை பார்த்துக் கொண்டிருக்கிறாள் - இதுவரையில் ஒரு மூலையில் மௌனமாக உட்கார்ந்திருந்த கவிஞர் திடீரென உரக்கப் பாடுகிறார்)

"அணையுடைத்துவரும் ஆற்றையும் நம்பலாம்!
புயல் காற்றையும் நம்பலாம்!
சீறிவரும பாம்பையும, செந்தேளையும் நம்பலாம்
இந்த சங்கத்தில் நுழைந்து விட்ட புதுமைப்பித்தன்
என்னும் பொய்யனை நம்ப லாகாதே!

(மன்றத்தினர் திகைப்பு)

அல்லி: என்ன? (திகைப்பு)

பொன்: கவிஞரே! (ஆச்சரியம்)

கவிஞர்: நெருப்பிலே நீர் கொட்டினானே, அவன் நோ்மையின் திருவுருவம் என்று எண்ணாதீர்கள்!...

அல்லி: என்ன சொல்கிறீர்கள் - புதுமைப்பித்தனைப் பற்றி...

கவிஞர்:அமைதியின் வடிவமல்ல அவன்; ஆபத்தின் சொரூபம்! அரசாங்கத்து ஒற்றன்!

பொன்: ஆ.. அரசாங்கத்து ஒற்றன்.

கவிஞர்: ஆமாம்...நானே நேரில் பார்த்தேன்! அவன் மீது எனக்கேற்பட்ட சந்தேகம் தெளிவாயிற்று.. அரண்மனைப் பக்கம் அடிக்கடி போய் வருகிறான் என்று கேள்விப்பட்டேன். பின் தொடர்ந்தேன். நேற்றிரவு அவன் அரண்மனைக்குள் நுழைந்ததை நானே கண்டேன் - இதில் ஐயத்திற் கிடமேயில்லை!

பொன்: ஆகா! ஏமாந்து விட்டோம் - அவசரப்பட்டு மன்றத்திலும்அவனை உறுப்பினராக்கி விட்டோம்- நல்ல வேளை இப்போதாவது எச்சரிக்கை செய்தீரே! கவிஞரே மிக நன்றி! மிக நன்றி!

அல்லி: எனக்கென்னமோ புதுமைப்பித்தனை அரசாங்க ஒற்றன் என்று கூற முடியவில்லை!

கவிஞர்: அப்படியானால், ஐந்தாம் படைத் தலைவன் என்று கூறு! அல்லி! நீ புதுமைப் பித்தனை நம்புவது தவறு! அவன் வந்தது முதல் நீ பொன்னழகனைக் கூட அலட்சியப்படுத்தி விட்டாய்!

அல்லி: கவிஞரே! மன்னிக்க வேண்டும்.. புதுமைப் பித்தனை நான் மதிப்பது உண்மை. அதே நேரத்தில் பொன்னழகரை என் தலைவராக ஏற்றுக் கொண்டிருக்கிறேன் என்பதை மறந்து விடமாட்டேன். நான் இந்த மன்றத்தின் நிர்வாகத் தலைவியாகவும் இருக்கலாம் - ஆனால் பொன்னழகர் தான்... எனக்கு அன்றைக்கும் தலைவர்! இன்றைக்கும் தலைவர்! இனி என்றைக்கும் தலைவர்.

பொன்: அல்லி! புதுமைப் பித்தனைப் பற்றி சீக்கிரம் ஒரு முடிவுக்கு வர வேண்டும். நாளைய தினம் நமது மன்றத்தின் ரகசிய செயற்குழுக் கூட்டப்படவேண்டும். ஆக வேண்டியவைகளைக் கவனி - நான் கொடிக்கால் நகருக்கு போய் வருகிறேன்!

(பொன்னழகன் போகிறான்; அல்லி வாட்டம் அடைகிறாள்)

காட்சி 8

(அரசன் மாளிகை - வாயிற்புறத்தில் மெய்க்காப்பாளன் உலாவிக் கொண்டிருக்கிறான். குள்ளமான உருவமும், குறுகுறுப்பான பார்வையுமுடைய அவன், அங்கு யாரோ வருவதைக் கவனித்து விட்டு, உஷாராக நிற்கிறான். அமைச்சர் குணசீலர் வருகிறார். மெய்க்காப்பாளன் வருகிறான்)

குணசீலர்: அரசரைப் பார்க்க வேண்டும் என்று சொல்!

மெய்: அதிகாரப்பூர்வமாகவா... அல்லது...

குண: அதிகாரப்பூர்வமாகத்தான்...

மெய்: இதோ ஓடிப்போய் சொல்லுகிறேன்...

(உள்ளே போகிறான், மீண்டும் வெளியேவந்து)

மெய்: இதோ, இப்போதே வருவதாகச் சொல்லுகிறார் - தாங்கள் இங்கே அமர வேண்டுகிறேன்.

(அமைச்சர் உட்கார்கிறார்)

மெய்: என்ன புதிய விஷயமோ...?

குண: நீ அரசருக்கு மெய்க்காப்பாளன் தானே?

மெய்: ஆமாம்...

குண: அந்தக் காரியத்தோடு இரு! இதிலெல்லாம் தலையிட்டுக் கொண்டு தவிக்காதே! என்ன விஷயமாக நான் வந்தால் உனக்கென்ன?

மெய்: அபச்சாரம், மன்னிக்கவும் - க்ஷமிக்க வேண்டும்! இல்லை... அந்த தேவாலயம் கட்டுவதைப் பற்றி...

குண: ஆமாம் - அதைப் பற்றித்தான் - நீயா கட்டப் போகிறாய்... (கோபமாக)

மெய்: அய்யோ நானா! அதெல்லாம் கட்டுவதற்கு கொத்தனார்கள் இருக்கிறார்கள்; குடியேற குருநாதர்கள் இருக்கிறார்கள்!

குண: ஏய் உலகப்பா! நீ வரவர தலைகீழாய்த்தான் நிற்கிறாய்...மரியாதையாக இரு.

மெய்: அய்யோ - நான் தலைகீழாய் நிற்பதே இல்லிங்க பிரபு; சிரசாசனம் செய்கிற நேரத்தைத்தவிர!

குண: மரியாதையாக இரு!

மெய்: மண்டியிட்டு, அனுமார் போலவா?

(அதுபோல பாவனை செய்கிறான்)

குண: மன்னரிடம் பணி செய்கிறோம் என்ற மமதை - இரு இரு! அவரிடமே கூறி உனக்கு சரியான...

மெய்: வேண்டாம்... வேண்டாம்.. பிரபூ! என்னை மன்னித்து ஆட்கொள்ளுங்கள்... ஏதோ கிறுக்குத்தனமாக சொல்லி விட்டேன். அரசருக்கு இதுமாதிரி நான் செய்யும் வேடிக்கையெல்லாம் மிகவும் பிடிக்கும்.. உங்களுக்கும் ஏதோ பிடித்திருக்கிறது என்று நினைத்து.,..

குண: எனக்கென்னடா பிடித்திருக்கிறது பேயா? பிசாசா?

மெய்: இல்லீங்க.. நான் எது சொன்னாலும் தப்பு எடுக்கிறீங்களே; என்னை மன்னித்து விடுங்க பிரபு! என் வேலைக்கு வெடி வைத்து விடாதீர்கள் சாமி! அபச்சாரம்! அபச்சாரம்... அடியேன் சிறியேன் - இனி பிழை புரியேன்!

(கன்னத்தில்போட்டுக் கொள்கிறான்)

குண: உன்னை மன்னிக்கிறேன். போய்த் தொலை! இனிமேல் இப்படியெல்லாம் செய்யாதே! போய்ப் பார் அரசர் வருகிறாரா என்று!

மெய்: உத்திரவுங்க...

(என்று தனக்குள்ளாகவே அமைச்சரை கிண்டல் செய்து கொண்டே, உள்ளே போகிறான். அமைச்சர் காத்திருக்கிறார். மெய்க்காப்பாளன் வந்து)

மெய்: பிரபூ! அரசர் வருகிறார்!

(அமைச்சர் எழுந்து நிற்கிறார். அரசன் வருகிறான். அழகான அரும்பு மீசையும், கம்பீரமான உருவமும் கொண்ட அரசன் மணிமாறன். ஏறத்தாழ புதுமைப் பித்தனின் சாயல் பொருந்தியவனாகவே இருக்கிறான். பெருமிதத்தோடு நடந்து வரும் அரசனை அமைச்சர் வணங்குகிறார். அரசனும் வணங்கி விட்டு, ஆசனத்தில் அமருகிறான்)

அரசன்: குணசீலரே! என்ன விசேஷம்? எல்லாரும் நலம்தானே? கலாராணி சௌக்கியமா?

குண: சௌக்கியந்தான் அரசே! தங்களைப் பார்க்க வேண்டும் என்று துடிதுடித்துக் கொண்டேயிருந்தாள்.

அர: அப்படியா? ம்! ராஜரீகங்கள் எல்லாம் எவ்வாறு நடைபெறுகிறது... சீமான்கள் சபையில் ஏதாவது புதிய தீர்மானங்கள் உண்டா..?

குண: உண்டு! அதில் கையெழுத்து பெறுவதற்காகத்தான் வந்தேன்!

அர: என்ன தீர்மானம்?

குண: தேவாலயம் ஒன்று கட்டுவதற்காக...

அர: கட்டவேண்டியதுதான்! சிலாக்கியமான காரியம்... மக்களுக்கு உடனடியாக தேவை தேவாலயம்தான்! இந்த திவ்யமான யோசனைக்கு சொந்தக்காரர் யார்?

குண: குருநாதர்தான்!

அர: அதுதானே பார்த்தேன்; வேறு யாரும் ஆண்டவனுக்குத் தேவையான அவசிய விஷயங்களை உணர முடியாதே - சபாஷ்! தேவாலயம் கட்டுவதென்றால், திரவியம் அதிகம் வேண்டுமே!

குண: பொக்கிஷத்திலே கொஞ்சமிருக்கிறது; போதா விட்டால், தேவாலய வரி ஒன்று விதிக்கவும் உத்தேசம்!

அர: உத்தமம்!...அமைச்சரே!... ஏதோ ஒரு ஆற்றில் அணைக்கட்டு இல்லாத காரணத்தால் அடிக்கடி வெள்ளம் ஏற்பட்டு, ஜனங்களுக்கும், கிராமங்களுக்கும் சேதம் ஏற்படுவதாகச் சொல்லப்பட்டதே, அது கவனிக்கப்பட்டு விட்டதா?

குண: இல்லை.

அர: ஆமாம், அது இப்போது அவசரமில்லை - தேவாலயம் கட்டி, ஆண்டவனைத் திருப்திப் படுத்தினால் அவரே கூட வெள்ளத்தைத் தடுத்து, ஆற்றையும் வற்ற வைத்துவிடுவார்! சரி.. அமைச்சரே! தேவாலயம் எந்த இடத்திலே?

குண: கொடிக்கால் நகரத்திலே.

அர: அந்த நகர மக்கள்!

குண: நகரைக் காலி செய்து விட்டு, அங்கே ஆலயம் கட்டுவதாகத் தீர்மானம்!

அர: ஓகோ, மனிதர்களை விரட்டி விட்டு, மகேஸ்வரனுக்கு மாளிகை கட்டுவதாகத் தீர்மானம்!

குண: அரசே!.. (சற்று வியப்புடன்)

அரச: தீர்மானத்தில் நான் கையெழுத்துப் போட வேண்டுமாக்கும்?

குண: ஆமாம்! அதற்குத்தான் வந்தேன்... (புத்தகத்தை நீட்டுகிறார்)

அர: (வாங்கியபடி) நான் கையொப்பமிடா விட்டாலும் தீர்மானத்தை அமுலுக்குக் கொண்டுவர, அமைச்சருக்கு விசேஷ அதிகாரம் இருக்கிறதே!

குண: இருந்தாலும் - சீமான்கள் சபை, தங்கள் கையெழுத்தில்லா விட்டால்...

அரச: அமைச்சரே! குறிப்பிட்ட இந்த தீர்மானத்தில் என் கையெழுத்து வேண்டாம். முடியுமானால் இந்த தீர்மானத்தை திரும்பப் பெற முயலுங்கள்!

குண: சபை நிறைவேற்றி விட்டதே; திரும்பப் பெற்றால் அவமானமல்லவா அரசே!

அர: அப்படியானால் அமைச்சரின் விசேஷ அதிகாரம் பயன்படட்டும்... நான் கோயில் கட்டும் தீர்மானத்தில் மட்டும் கையெழுத்திட மாட்டேன்... மற்றவைகளில் கையெழுத்திடுகிறேன்.

(என்று கூறி மற்ற தீர்மானங்களில் கையெழுத்திடுகிறார்)

குண: தயவு செய்து இந்த தீர்மானத்திலும்...

அர: வேண்டாம்! என் கையெழுத்தை களங்கப்படுத்திக் கொள்ள மாட்டேன்... விளக்கம் கேட்காதீர்! விசேஷ அதிகாரத்தை உபயோகித்து, கோயிலைக் கட்ட முடியும்!

(அரசன் உள்ளே போய்விடுகிறான் - மெய்க் காப்பாளனும் போகிறான், அரசனுடன். அமைச்சர் ஆழ்ந்த யோசனையுடன் நிற்கிறார்)

குண: (தனக்குள்ளாக) ''கையெழுத்துப் போட வில்லை! விசேஷ அதிகாரத்தைப் பயன்படுத்து!'' இப்போது அரசனிடம் கோபித்துக் கொண்டால், கலாராணி விஷயம் வெற்றிகரமாக முடியாது! அதற்காக கோயில் தீர்மானத்தையும் கைவிட முடியாது!சரி, அரசன் கையெழுத்திட்டு விட்டதாகவே பொய்ப் பிரச்சாரம் செய்கிறேன். இருக்கவே இருக்கிறது - 'மக்கள் தொண்டன்' பத்திரிகை! வேறு வழி இல்லை..! வழியே இல்லை..!

(அப்போது மெய்க்காப்பாளன் வந்து)

மெய்: வழி ஏன் இல்லை? பிரபு இதோ இருக்கிறதே வழி - வெளியே போகத்தானே பிரபு?

குண: சீ.. முட்டாளே! வழி சொல்ல வந்துவிட்டான், வடிகட்டிய முட்டாள்!

(போகிறார் வேகமாக)

காட்சி 9

(மணிமகுடபுரி வீதிகளில் 'மக்கள் தொண்டன்' ஏடு விற்பனையாகிறது)

ஏடு விற்போன்: சீமான் சபை தீர்மானத்தில் அரசர் கையெழுத்துப் போட்டு விட்டார். தேவாயம் கட்ட தீவிர ஏற்பாடுகள் - அமைச்சர் அறிக்கை! தேவாலய வரி விதிக்கப்படும்! - குருநாதர் எழுதுகிற தெய்வீகக் கட்டுரையுடன், மக்கள் தொண்டன் விலை இரண்டு பணம்! மக்கள் தொண்டன் விலை இரண்டு பணம்!

(என்று கூவி விற்கிறான்) அப்போது அங்கு வந்த அல்லி, அந்த ஏட்டை வாங்கிப் படிக்கிறாள்; திடுக்கிடுகிறாள், வேகமாகத் திரும்புகிறாள்)

(பத்திரிகைச் செய்தி நாடெங்கும் பரவுகிறது)

காட்சி 10

(மக்கள் மன்றம் - பொன்னழகன், கவிஞர், அல்லி, முதலியோர்)

பொன்: அமைச்சன் தான் நினைத்ததையெல்லாம் சாதித்துக் கொள்கிறான். தீர்மானத்திலே அரசன் கையெழுத்து போட்டு விட்டான் - நாளை, அமைச்சன் மகளை திருமணம் செய்து கொள்ளப் போகிறான் - என்ற செய்தியும் வரப் போகிறது! அமைச்சனுக்கும் அரசனுக்கும் சம்மந்தி உறவும் ஏற்பட்டு விட்டால், பிறகு அமைச்சன் வைத்ததுதான் சட்டம்! மணிமகுடபுரி குணசீலனின் ஏகபோக சொத்தாகி விடும்!.... தேவாலயத் தீர்மானத்தை விட்டது போலில்லாமல், அந்தத் திருமணத்தையாவது உடனே தடுத்தாக வேண்டும்!

கவிஞர்: திருமணத்தைத் தடுக்க இரண்டே வழிதான் உண்டு! ஒன்று - அரசனை அபகரிக்க வேண்டும் - அல்லது அமைச்சன் மகள் கலாராணியை அபகரிக்க வேண்டும்.

பொன்: அரசனை மறைப்பதை விட, கலாராணியை மறைப்பது சுலபம்! - ஆம்! அதைத்தான் செய்ய வேண்டும். தோழர்களே! கலாராணியைத் தூக்கிவர யார் முன் வருகிறீர்கள்? நீங்களே சொல்லுகிறீர்களா - அல்லது வழக்கம் போல் சீட்டு குலுக்கிப் போடலாமா?

கவிஞர்: அதுவே நல்ல முறை! சீட்டே போடலாம் - சீட்டு எழுதுங்கள்!

(அப்போது புதுமைப் பித்தன் வருகிறான். மன்றத்தில் ஒரே அமைதி நிலவுகிறது - யாரும் அவனை வரவேற்கவில்லை. புதுமைப்பித்தனுடன் கருப்பு ரோஜாவும் வருகிறான். இருவரும் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டு விழித்து, கடைசியாக)

புது: என்ன, ஒரே அமைதி நிலவுகிறது? அரசன் கையெழுத்துப் போட்டு விட்டான், என்ற செய்தியை பார்த்து விட்டீர்களாக்கும்! எனக்கென்னமோ அந்த செய்தியில் நம்பிக்கையில்லை- செய்தியைப் படித்தீர்களா? இதோ - (பத்திரிகையைப் புரட்டி), ''சீமான்கள் சபைத் தீர்மானத்தில் அரசர் கையெழுத்துப் போட்டு விட்டார்'' என்று இருக்கிறதே தவிர கோயில் கட்டும் தீர்மானத்தில் கையெழுத்துப் போட்டார்ரா, இல்லையா என்று தெரியவில்லை - அமைச்சரும் குருநாதரும், ஆசிரியர் அரிஹரநாதரும் செய்த மோசடிதான் இது! இதை நம்ப வேண்டாம் - நம்மிடமும் இந்நேரம் ஒரு பத்திரிகை இருந்தால், இப்போதே மறுப்பு எழுதி உண்மையை நிலை நாட்டியிருக்கலாம் - என்ன அல்லி! மக்கள் மன்றத்தின் சார்பாக, 'மணிமகுடம்' என்று ஒரு தினசரி இதழ் துவங்கலாமா?

பொன்: ஏடு துவங்குவது பிறகு இருக்கட்டும் நண்பரே! நீர் முதலில் மக்கள் மன்றத்தின் அங்கத்தினர் பதவியை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டிய நெருக்கடியான நிலைமை வந்திருக்கிறது; இப்போது!

புது: என்ன?

பொன்: உம் மீது, மன்ற உறுப்பினர்களுக்கு சந்தேகம் பிறந்திருக்கிறது!

புது: சந்தேகமா? அய்யோ அது நமது சங்கத்தை பிளவுபடுத்திவிடுமே!

பொன்: சந்தேகத்தை விட சதிக் குணம் பயங்கரமானது! அது சங்கத்தின் பலத்தையே சல்லடைக் கண்களாகத் துளைத்துவிடும்!

புது: தவறான எண்ணம் - தகாது நண்பரே தகாது! நான் சந்தேகத்திற்குரியவனே அல்ல! சதிகாரனல்ல! மணிமகுடபுரி மக்களின் மேன்மைக்காக, என் உயிர் தரவும் தயாராயிருக்கிறேன், தாயின் மேல் ஆணை! தந்தை மேலாணை! தூய என் மொழியின் மீது ஆணை! - என்னை நம்புங்கள் -நான் குற்றமற்றவன்! கொள்கையிலே பற்றுக் கொண்டவன்! அதற்காக எதையும் தியாகம் செய்யக் கூடிய நெஞ்சு பெற்றவன்!

பொன்: மன்றத்தின் ரகசியக் கூட்டத்திலே தீர்மானமாகி விட்டது - நீர் சந்தேகத்திற்குரியர் என்று! ஆனால் ஒன்று - என் தனிப்பட்ட நிபந்தனையாக இருக்கட்டும். ஒரு கடுமையான பரீட்சை வைக்கிறேன் உமக்கு, அதில் நீர் தேறினால், சந்தேகத்திலிருந்து விடுபடலாம்.

புது: கடுமையான பரிட்சை!

பொன்: ஆம்... உமது நேர்மையை நிலைநாட்டிக் கொள்ள தேவைப்படுகிற பரீட்சை! மந்திரி குணசீலரின் மகள் கலாராணியை, யாருக்கும் தெரியாமல் ரகசியமாக இங்கு கொண்டு வரவேண்டும்.

புது: கலாராணியையா? ஏன்?

பொன்: நீர் அரசாங்க ஒற்றன் அல்ல என்பதை நிரூபித்துக் கொள்வதற்கும்,அதேசமயம் கலாராணிக்கும் அரசனுக்கும் நடக்க இருக்கும் திருமணத்தைத் தடுப்பதற்கும் மக்கள் மன்றத்தின் சார்பில் உமக்கு இந்த கட்டளை தரப்படுகிறது. அதுவும் எனக்கு உம்மீது உள்ள அன்பு இன்னும் அடியோடு குறையவில்லை என்பதின் அடையாளமாக!

கவிஞர்: சபாஷ்! சந்தேகமும் நிவர்த்தியாகும்! திருமணமும் தடைபடும்! ஒரே கல்லில் இரண்டு மாங்காய்!

புது: இல்லை கவிஞரே! ஒரு இருதயத்தில் இரண்டு வேல்கள்! சந்தேகம், சோதனை! இரண்டையும் தாங்க வேண்டும் நான் - முடியாத காரியம்!

பொன்: கட்டளையை நிறைவேற்றினால், மக்கள் மன்றத்தின் கதவு எப்போதும் திறந்திருக்கும் - இல்லாவிட்டால்...

புது: மூடப்படும் - என் ஆசைகளும் முடங்கி விடும்!

பொன்: நான் என்ன செய்ய? மன்றத்தின் ஆணைக்கு நானும் கட்டுப்படத்தானே வேண்டும் தோழரே! வெற்றியோடு திரும்புங்கள்! வருகிறேன்!

(பொன்னழகன் போக, மற்றவர்களும், அவன் பின்னே போகிறார்கள். புதுமைப்பித்தன், அல்லி, கருப்பு ரோஜா மூவரும் தனியே இருக்கிறார்கள்)

புது: அல்லி.. வருகிறேன்!

(அல்லி கலக்கத்தோடு நிற்கிறாள்)

அல்லி: சோதனையில் வெற்றி பெற்று விரைவில் திரும்புங்கள்.

புது: என் வெற்றியை நீ ஏன் விரும்புகிறாய்?

அல்லி: மக்கள் மன்றம் ஒரு நல்ல மேதையை இழந்து விடக் கூடாது என்றுதான்.

புது: மேதையா, நான்?

அல்லி: மேதை மட்டும் அல்ல - அறிஞர் - கவிஞர் - நாவலர் - சொல்லின் செல்வர் - சிந்தனைச் சிற்பி - எல்லாமே நீங்கள்தான்!

புது: சந்தேகத்துக்குரிய சதிகாரன் - நம்பிக்கைக்குப் பாத்திரமற்றவன்.

அல்லி: அப்படித்தான், இங்கே கருதுகிறார்கள், ஆனால் நான்...

புது: நீ கருதவில்லையா அல்லி?

அல்லி: இல்லை, உங்கள் முகத்திலே மோசத்தின் சாயல் சிறிதுமில்லை.

புது: அல்லி.. உன் வார்த்தைகள் போதும் எனக்கு. நீ உண்மையை உணர்ந்தால் போதும்... நான் சதிகாரனல்லவே, சொல் அல்லி! சொல்! உன் வாயால் இன்னொரு முறை சொல்!

அல்லி: இல்லை! நீங்கள் சதிகாரர் இல்லை! உத்தமர் உண்மையின் உருவம்! (விம்முகிறாள்)

புது: ஆகா... அல்லி! மணிமகுடபுரியே விடுதலை பெற்றது போன்ற மகிழ்ச்சி அடைகிறேன் - விடை கொடு, வருகிறேன்!

அல்லி: திரும்பி வருவதாக வாக்களித்தால் விடை கொடுப்பேன்.

புது: (வியப்புடன்) உன்னுடைய பேச்சில்...

அல்லி: என்ன கற்பனை செய்கிறீர்கள்?

புது: ஒன்றுமில்லை..

அல்லி: சொல்லுங்கள்!

புது: நெஞ்சு நடுக்கம் எடுக்கிறது.. வேண்டாம்...

அல்லி: என்னுடைய நெஞ்சும் நடுங்குகிறது.

க.ரோஜா: என்னுடைய உடம்பே நடுங்குகிறது. யாராவது வந்து விடப் போகிறார்கள் என்று! நான் போய் வெளியே காவல் இருக்கிறேன். (போகிறான்)

புது: அல்லி, நான் வருகிறேன்!

அல்லி: மந்திரி மகளைக் கொண்டு வரும் முயற்சியில்...

புது: நீயும் அப்படித்தான் கட்டளையிடுகிறாயா?

அல்லி: கட்டளை அல்ல; உங்களைத் திரும்பவும் பார்க்க வேண்டுமென்ற எண்ணத்தில் பிறக்கும் அன்புக் கோரிக்கை.

புது: அன்புக் கோரிக்கை... (இன்பமாக அந்த சொல்லை உச்சரித்தபடி) அல்லி!

(என்று அவளிடம் அவன் திரும்பி நெருங்குகிறான். அவள் முகத்தை மூடிக் கொண்டு சோகமயமாக வேறுபக்கம் போய்விடுகிறாள். புதுமைப்பித்தன் அதைவிட்டு வாட்டமுடன் நகருகிறான்)

காட்சி 11

(அமைச்சர் வீடு - கலாராணியின் அறை - கலாராணி நடனமாடிக் கொண்டிருக்கிறாள். இனிமையாகப் பாடிக் கொண்டு! அப்போது அங்கே வஞ்சி வருகிறாள்)

வஞ்சி: சபாஷ்.. சபாஷ்...

கலா: எப்படி நடனம்?

வஞ்சி: கலாராணியின் உடல் நெளிவது போல் கருநாகமும் நெளியாது.

கலா: போதுமடி, கவிதா சிரோண்மணி! உன் உதாரணங்களை மூட்டை கட்டிக் கொள்.. உளறாதே!

வஞ்சி: பிறகென்ன கலா! புதிய உதாரணமாக என்ன சொல்வது? எல்லாம் சொல்லிச் சொல்லி புளித்துப் போய்விட்டது.

கலா: அதற்காக, கரும்பாம்பு என்கிறாயா என்னை..?

வஞ்சி: நெளிவைச் சொல்லுகிறேன்.

கலா: ஏன் முல்லைக்கொடி என்று சொன்னால்...?

வஞ்: மூவாயிரம் வருஷமாக அதைத்தான் சொல்கிறார்கள்... அதுவுமல்லாமல் முல்லைக்கொடி ஒரே இடத்தில் நின்று தான் காற்றில் ஆடும். நெளியும்! பாம்போ பல இடங்களில் ஆடும் -நெளியும் நகரும்...

கலா: சீ!

வஞ்: சீறும்..!

கலா: (சிரித்தபடி) விஷமக்காரியடி நீ.. வஞ்சி! என்னுடைய ஆட்டத்தை அவர் பார்த்தால்...?

வஞ்: தன் தோட்டத்து மயிலாக்கிக் கொள்வார்!

கலா: ஆடல் பாடல்களில், அவர் ரசிகரோ இல்லையோ தெரியாது...

வஞ்சி: ரசிகர் இல்லாவிட்டால் ரசிகராக ஆக்குவது! அதோ தாமரைத் தடாகத்திலே இரண்டு மீன்கள் துள்ளுகின்றன. அவைகளுக்கு அவர் தூண்டில் போடாமல் இருப்பாரா?

கலா: என்னடி பிதற்றல்? தாமரைத் தடாகமாவது,.. இரண்டு மீனாவது?

வஞ்: ஆமாம் உன் முகத்தையும், முகத்திரண்டு கண்களை யும் சொன்னேன்... கவிதை நடையில்!

கலா: அடா அடா..ஏய் வஞ்சி! உன் கவிதைத் தலைவலியைக் கொஞ்சம் நிறுத்தேன்!

வஞ்சி: நிறுத்திவிட்டு, வேறு எதை ஆரம்பிப்பது?

கலா: வஞ்சீ! அவரும் நானும் சந்திக்கவே முடியாத தூரத்தில் இருக்கிறோம்; இருவரும் இரு துருவங்கள்...

வஞ்சி: சந்திப்பதா பெரிய காரியம்? இப்போது வந்தாலும் அவரை சந்திக்கலாம்.

கலா: எங்கேடி?

வஞ்: அரண்மனையில்...

கலா: அரசரைச் சொல்லுகிறாயா (கோபமாக)

வஞ்: நீ யாரைச் சொல்லுகிறாய்...

கலா: நான் அவரைச் சொல்லுகிறேன்...

வஞ்: அவர்.. அவர் நல்ல அவர்! 'கலாராணி! உன்னுடைய அந்த 'அவர்' யார் என்றுதான் என்னிடம் சொல்லேன்...

கலா: இன்று, அவர் யார் என்று உன்னிடம் சொல்லத்தான் போகிறேன்.

வஞ்: சொல்லு!

கலா: சொல்கிறேன்.. ஆனால் ஒரு நிபந்தனை - நான் அவர் யார் என்று சொன்ன பிறகு, நீ மறுபடியும் அரசரைப் பற்றிய பேச்சை என்னிடம் எடுக்கவே கூடாது! நான் நிச்சயமாகச் சொல்லுகிறேன்; எனக்கு அரசர் மீது சிறிதும் விருப்பமில்லை.

(அமைச்சர் குணசீலர் வந்து கொண்டே)

குண: ஏனம்மா, விருப்பமில்லை? அரசன் என்ன அவலக்ஷணமா? அலங்கோல புருஷனா?

கலா: அப்பா.. (ஏதோ சொல்ல முயல)

குண: நானும் எத்தனையோ நாட்களாக முயலுகிறேன் – முயலுகிறேன் – நீ என் ஆசையையே அலட்சியப்படுத்துகிறாய் கலாராணி! உன் தந்தையின் அதிகாரமும், இந்த மந்திரி பதவியும் நிலைக்க வேண்டுமானால் நீ அரசனைத் திருமணம் செய்து கொண்டே தீரவேண்டும்?

கலா: முடியாதப்பா...

குண: கட்டளையிடுகிறேன் அடங்கி நட! கலாராணி! வருத்தப்படாதே! இப்போது ஏற்பட்டிருக்கும் நெருக்கடியான நிலையில் நீ அரசனைத் திருமணம் செய்து கொண்டே தீர வேண்டும் - அரசன், என்னையும் மீறுகிற ஆபத்தான சூழ்நிலை உருவாகியிருக்கிறது. அரசனுக்கும் நமக்கும் உறவு ஏற்பட்டு விட்டால் - பிறகு யார் தயவும் எனக்குத் தேவையில்லை. இப்போது இந்த மந்திரி பதவியைக் காப்பாற்றிக்கொள்ள, சீமான்களுக்கு

தலையாட்ட வேண்டியிருக்கிறது - குருநாதருக்கு கொடிபிடிக்க வேண்டியிருக்கிறது - பத்திரிகாசிரியனிடம் பல் இளிக்க வேண்டியிருக்கிறது!

அரசன் என்னுடைய மருமகன் ஆகிவிட்டால் யாருக்கும் அஞ்சிடத் தேவையில்லையல்லவா நான்? பிறகு சீமான்களும் குருநாதரும் என் காலடியில்தானே கிடப்பார்கள்?

கலா: ஏன் அப்பா ஆயிரம் விளக்கம்? மக்களின் மதிப்பைப் பெற்று வாழ வழியில்லை; மகளை வைத்து மந்திரி பதவியை காப்பாற்றிக் கொள்ள திட்டம் போட்டு விட்டீர்கள்.. அவ்வளவுதான்!

குண: (கோபமாக) கலாராணி! என்ன சொன்னாய்...?

கலா: பாடையில் ஏறும் வரையில் தணியாத உங்கள் பதவி மோகத்துக்கு, நான் பலியாக வேண்டும் - சரி, நான் தயாராக இருக்கிறேன், அரசருக்கு சம்மதம்தானா?

குண: அவருக்கு எண்ணமில்லாமலா என்னைப் பார்க்கும் போதெல்லாம் 'கலாராணி சௌக்கியமா? கலாராணி சௌக்கியமா?' என்று கேட்டுக் கொண்டிருக்கிறார். நீ போய் அவரைப் பாரம்மா - எல்லாம் நன்மையாக முடியும்.

கலா: இதோ போகிறேன் - வஞ்சி நீயும் வா என்னோடு அரண்மனைக்கு! (படபடப்போடு அழைக்கிறாள்)

குண: போய்வா மகளே; பூரிப்போடு போய்வா!

காட்சி 12

(அரண்மனையின் பின்புறமுள்ள தோட்டம் - இரவு நேரம் - கலாராணியும் வஞ்சியும் அந்த வழியே வருதல்)

கலா: வஞ்சீ! நீ இங்கேயே இரு. நான் போய் அரசரைப் பார்த்துவிட்டு வருகிறேன்.

வஞ்சி: நான் காத்துக் கொண்டிருப்பேனே என்ற கவலையில், சீக்கிரம் ஓடிவர வேண்டாம், பேச்சைக் கூட முடிக்காமல்! நான், இங்கே - மயில், குயில், மாடப்புறா, மாமரம், பூஞ்செடி, இவைகளோடு பேசிக் கொண்டிருக்கிறேன்; நீ நிதானமாக நல்ல முடிவோடு வா!

கலா: நல்ல முடிவுடன்தான் போகிறேன் - நல்ல முடிவோடு வரமாட்டேனா?

வஞ்சி: ஆமாம் அதை மறந்து விடாதே! விசுவாமித்திரனை வென்ற மேனகையைப் போல நீயும் வெற்றிப் புன்னகையோடு திரும்பி வா - உனக்கு அணிவிக்க, நான் இங்கே மலர் பறித்து வெற்றிமாலை தயாரிக்கிறேன். நீ வரும் வரை எனக்கும் வேலை வேண்டுமே - கலா! போனவுடனே அரசரிடம் சகஜமாகப் பேசி விடாதே! முதலில் அரசருக்குரிய மரியாதையோடு வணங்கு! வணங்கும் போதே கண்களால் அவரை வளைத்து விடு! உன் காந்தள் விரல்களின் அழகு தெரியும்படி, கைகூப்பி வணங்கு! இரவு நேரம் முகந் தெரியாத மூலையில் நின்று விடாதே. முழுமதி போன்ற இந்த முகம் பிரகாசமாகத் தெரியக் கூடிய விளக்கின் அருகே நின்று கொண்டுபேசு!... இடையிடையே பார்வையை வீசு! பிறகு அரசர் உனக்குத் தூசு!

கலா: நீ, பாடம் சொல்லித் தருகிறாயா?

வஞ்சி: காதல் அரிச்சுவடி கலா! ஏன் சொல்லாமலே உனக்குத் தெரியுமா?

கலா: எனக்கு ஒரு சுவடியும் வேண்டாம் - நீ எங்கும் போய் விடாதே - இரு, இதோ வந்து விடுகிறேன்.

(கலா போகிறாள் - வஞ்சி, மலர் பறிக்கிறாள், மாலை தொடுக்க)

காட்சி 13

(அரசன் மாளிகை, மெய்க்காப்பாளன் உலவிக் கொண்டிருக்கிறான், அங்கே கலாராணி வருகிறாள்)

மெய்: வாருங்கள், என்ன வேண்டும்... தங்களுக்கு?

கலா: அரசரைப் பார்க்க வேண்டும்... இப்போது பார்க்க முடியுமா என்று...

மெய்: இருங்கள்.. போய் தெரிவிக்கிறேன்...

(கலாராணி உட்கார்ந்திருக்கிறாள்... அரசன் வர நேரமாகிறது - மெய்க்காப்பாளன் வருகிறான், திரை விலகுகிறது)

மெய்: சந்திக்க சம்மதம் தெரிவித்தார்... இப்போது வருவார்.

(மெய்க்காப்பாளன் உள்ளே போகிறான். கலாராணி நீண்ட நேரம் காத்திருக்கிறாள். எழுந்து உலாவுகிறாள். அங்குள்ள சித்திரங்களை ரசிக்கிறாள். அரசன் வரும் வாயிற் புரத்தின் திரையை நோக்கி நிற்கிறாள். மீண்டும் உட்காருகிறாள். கடைசியில் வாயிற்புரத்தில் திரை விலகுகிறது. அரசன் வருகிறான். கலாராணி மரியாதையுடன் வணங்கிநிற்கிறாள்)

அரசன்: கலாராணி, நலந்தானே?

கலா: தாங்கள் ஆசியால் நலமேதான்.

அரசன்: இந்த நேரத்தில் இவ்வளவு அவசரமாக என்னைப் பார்க்க வேண்டிய காரணம்?

கலா: தனித்து சில விஷயங்கள் பேச வேண்டும்.

அரசன்: (மெய்க்காப்பாளனைப் பார்த்து) உலகப்பா! நீ கொஞ்சம் ஒதுங்கி இரு!

(மெய்க்காப்பாளன் அகலுகிறான்)

அரசன்: கலாராணி! இனி தாராளமாகப் பேசலாம்!

கலா: என்னுடைய திருமணத்தைப் பற்றி ஒரு முடிவு செய்வதற்காக இங்கு வந்தேன்.

அரசன்: புரியும்படிச் சொல்!

கலா: ஒன்று கேட்கிறேன்; ஆத்திரப்படக் கூடாது!

அரசன்: கேள்!

கலா: தாங்கள் என்னை விரும்புகிறீர்களா?

அரசன்: விரும்புகிறேன்.

கலா: (திகைப்புடன்) உண்மையாகவா?

அரசன்: ஏன் சந்தேகம்?

கலா: நீங்கள் என்னை விரும்புகிறீர்களா?

அரசன்: ஆம்

கலா: (துடுப்புடன்) என்னை நேசிக்கிறீர்களா?

அரசன்: ஆமாம்.

கலா: நான் உங்களை விரும்பவில்லை.

அரசன்: கவலையில்லை! நான் விரும்புகிறேன், நேசிக்கிறேன்.

கலா: நான் மறுத்த பிறகுமா?

அரசன்: ஆமாம்.

கலா: நான் வேறு ஆடவரை நேசிக்கிறேன்.

அரசன்: என்னைப் போல் அவன் உன்னை நேசிக்க மாட்டான் - விரும்ப மாட்டான்.

கலா: நீங்கள் என்னை விரும்பவும் கூடாது - நேசிக்கவும் கூடாது!

அரசன்: பொங்கி வரும் வெள்ளமல்ல எண்ணம்; அணைபோட்டுத் தடுக்க! ஒரு அமைச்சரின் மகளை அரசன் ஏன் விரும்பக் கூடாது!

கலா: ஆ!.. (திகைப்பு)

அரசன்: ஒரு தங்கையை ஒரு அண்ணன், ஏன் சகோதர பாசத்தோடு நேசிக்கக் கூடாது!

கலா: (வியப்புடன்) அரசே!

அரசன்: கலாராணி, மணிமகுடபுரி மன்னவனின் தங்கை களில் ஒருத்தி!

கலா: அரசே! என்னை மன்னித்து விடுங்கள்!

(காலில் விழுகிறாள்)

அரசன்: எழுந்திரு! அமைச்சர்தான் அவசரக்காரர் என்றால், அவர் மகள் நீயும் அப்படியே இருக்கிறாய்!

கலா: தாங்கள் என்னைத் திருமணம் செய்து கொள்ள விரும்புவதாக அப்பாதான் என்னிடம் சொன்னார்.

அரசன்: எனக்கு ஏன் இப்போது திருமணம்? அதுவும் அமைச்சர் மகளை திருமணம் செய்து கொண்டால், வெறும் வாயை மெல்லும் புரட்சிக்காரர்களுக்கு கொஞ்சம் அவலும் அள்ளிப் போட்ட மாதிரிதான்!

கலா: நான் விடைபெற்றுக் கொள்கிறேன், மன்னவா!

அரசன்: நில் கலாராணி! வேறொருவனை விரும்புவதாகச் சொன்னாயே; யார் அவர்?

(கலாராணி தலை குனிந்து நிற்கிறாள்)

அரசன்: வெட்கம் தேவையில்லை. உன் விருப்பத்தை நிறைவேற்ற அரசாங்க ரீதியாகவும் அக்கரை காட்டப்படும்! அமைச்சர் புதல்வியல்லவா நீ! அவன் யார்?

கலா: அவர் பெயரைச் சொல்வதே பெரிய குற்றம்.

அரசன்: கணவன் பெயரைச் சொல்லக் கூடாது என்ற கருத்தின்படியா?

கலா: இல்லை. அவர் ஒருஅரசாங்க எதிரி! அவர் பெயரை இங்கு சொன்னால்...

அரசன்: பரவாயில்லை.. பயப்படாதே சொல்!

கலா: அவர்... (தயங்குகிறாள்)

அரசன்: சொல்! எதிரியாய் இருந்தால் என்ன? மாற்றான் தோட்டத்திலே கூட மனோரஞ்சிதம் இருக்கலாம்.

கலா: அந்த மனோரஞ்சிதத்தை நான் குறிப்பிட்டால், அதிலே பூநாகம் இருக்கிறது என்றுகூட தாங்கள் தடுக்கலாமல்லவா?

அரசன்: பூநாகம் இருந்தால் தடுக்க வேண்டியதுதான் முறை...

கலா: பூநாகமுள்ள மலரல்ல; நான் குறிப்பிடும் பொன்னழகன்...

அரசன்: (திடுக்கிட்டு திகைப்புடன்) பொன்னழகனா.... அவனையா நீ காதலிக்கிறாய்? எதிரிகளின் தலைவன்... எந்த நேரத்திலும் இந்த நாட்டு ஆட்சியைக் கவிழ்க்க வேண்டுமென்று கங்கணம் கட்டியிருப்பவன்! மக்கள் மன்றம் என்னும் ஆட்டு மந்தைக்கு அதிபதி! குருநாதர் - அமைச்சர் - கொலுமண்டபம் - அத்தனைக்கும் பகைவன்! - அந்தப் பகைவனின் பிரியை நீ! சட்டம் அனுமதிக்காது!

கலா: காதலைத் தீய்க்கவும் சட்டமா?

அரசன்: ஆமாம்!.. காதலால் சம உரிமை என்ற பயிருக்கு வித்திடப்படுகிறது! அந்தஸ்து மாளிகை, அனாதைக் குடிசையைக் காதலிப்பதால் - சமத்துவம் என்ற குழந்தை பிறந்துவிட ஏதுவாகிறது! சம உரிமை - சமத்துவம் இதுபோன்ற கொடிய சம்பவங்கள் எதுவும் நிகழா வண்ணம் சீமான் சபை சட்ட மூலம் கண்காணித்து வருகிறது - சம உரிமையும், சமத்துவமும் ஏற்பட்டு விட்டால், பிறகு குருநாதருக்கு வேலை என்ன? ஆயிரக்கணக்கான

பவுன்கள் செலவிடப்பட்டு அமைக்கப்பட்டுள்ள ராணுவப் படைக்குத்தான் வேலை என்ன இருக்கிறது? குருநாதர் மதிப்பிழப்பார் - கொலு மண்டபம் சோபை இழக்கும்!

கலா: அப்படியானால், என் வாழ்வு பாழாகத்தான் வேண்டுமா?

அரசன்: பரிதாபத்துக்குரிய சகோதரி... அந்தப் பொன்னழகனை நீ எங்கே பார்த்தாய்? எப்படி உங்களிடையே சந்திப்பு ஏற்பட்டது? (ஆச்சரியமாக)

கலா: அவரை நான் சந்தித்துப் பேசியதில்லை. அவர் என்னை விரும்புகிறாரா - அதுவும் தெரியாது! ஒருநாள் அவர், அப்பாவிடம் நாட்டு நிலை குறித்து விவாதிக்க வீட்டுக்கு வந்திருந்தார். நீண்ட நேரம் பேசிக் கொண்டிருந்தார் அப்பாவுடன்! அன்று கண்டேன் அவருடைய லட்சிய இருதயம் என்னைக் கவர்ந்து விட்டது!

அரசன்: லட்சிய இருதயம் - அரசாங்கத்திற்கு விரோதமாக அமைச்சர் வீட்டிலேயே ஆபத்து அரும்புகிறது! (உலவிக் கொண்டே சிந்திக்கிறான்.) இதை நான் அனுமதிக்க முடியாது!... உடனே தடுக்கிறேன்! (உலவுகிறான்)

கலா: அரசே...!

அரசன்: இங்கு நிற்காதே.. போய்விடு!

(அரசன் உள்ளே போய்விடவே கலாராணியும் வெளியேறுகிறாள், கலக்கத்துடன். மீண்டும் அரசன் வெளியே வந்து)

அரசன்: உலகப்பா!

உலக: (வந்தபடி) இதோ இருக்கிறேன்.

அரசன்: உலகம்! எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்தாயா?

உலக: ஆமாம்!

அரசன்: உடனே போ! கலாராணி... தோட்டத்து வழியாகத்தான் போவாள் - நமது ஆட்களை விட்டு அவளை தூக்கிவரச் சொல்!

உலக: உத்திரவு!

அரசன்: மயக்க மருந்தையும் எடுத்துப் போ! நந்தவனத்துப் பளிங்கு மண்டபத்திலே அவளை வைத்து விட்டு உடனே வந்து என்னிடம் சொல், ஓடு!

(உலகப்பன் ஓடுகிறான், அரசன் யோசித்தபடி உலவுகிறான்)

காட்சி 14

(தோட்டத்தில் வஞ்சி மாலை கட்டிக் கொண்டிருக்கிறாள்)

''யார் அது?''

(என்று கேட்டுக் கொண்டே, மெய்க்காப்பாளன் உலகப்பன் அங்கு வருகிறான். திடுக்கிட்ட வஞ்சி பேசாமலே நிற்க)

உலக: இந்த நேரத்திலே இங்கே யார் என்று கேட்டால் பதில் சொன்னால் என்ன? ஊமையா... செவிடா... பேயா... பிசாசா?

வஞ்சி: (கோபமாக) நிற்பது கண் தெரியவில்லையா?

உலக: நீ என்ன நிலவா... இருட்டிலேயும் தெரிவதற்கு?

வஞ்சி: சரிதான்... காக்கை, கருங்குயிலைப் பழித்த கதைதான் இது!... மழை காலத்து மேகம் மாதிரி இருந்து கொண்டு, நையாண்டி செய்ய வந்து விட்டார் என்னை!.... நீலமேக சாமளவர்ணரே!

உலக: ஆகா! என் நெருப்பில் குளித்த நீலோத்பல மலரே!

வஞ்சி: நிறுத்தும் நான் யார் தெரியுமா?

உலக: பேயுமல்ல - பிசாசுமல்ல - ஊமையுமல்ல - செவிடுமல்ல- உல்லாசி! ஊர்வசி!

வஞ்சி: மரியாதை வேண்டும். பேச்சில் - நான் மந்திரி குமாரியின் தோழி! நீர் மெய்க்காப்பாளன்!

உலக: மெய்க்காப்பாளன் என்றால் உனக்கு அர்த்தம் தெரியுமா? உண்மையைக் காப்பாற்றுகிறவன் - அதாவது அரசரிடம் உண்மையோடு பழகுகிறவன் - அந்தரங்க செயலாளன் - ரகசிய ஊழியன்.

வஞ்சி: அவ்வளவுதானா?

உலக: இன்னும் இருக்கிறது.. மெய் என்றால் உடல் என்றும் கூறுவார்கள்! உன்னைப் போன்ற அழகியின் உடலை பத்திரமாகக் காக்கக் கூடியவன்.

வஞ்சி: மெய்க்காப்பாளர் - நான் சொல்லட்டுமா புதுப் பொருள்?

உலக: சொல்லு!

வஞ்சி: ஆபத்து வரும் போது மெய்யைத் தான் காப்பாற்றிக் கொள்ள தெரியுமே, தவிர, உயிரைக் காப்பாற்றிக் கொள்ளத் தெரியாதவர், சரிதானா?

உலக: நீயும் ஒரு புலவிதான் போலும்!

வஞ்சி: அப்படியானால் நீர் புலவரோ?

உலக: ஆமாம், மூச்சு விடுவதற்குள் முன்னூறு கவிதை எழுதுவேன்!

வஞ்சி: எங்கே இப்போது எழுதும், மூச்சு விடுவதற்குள், முன்னூறு கவிதை...

உலக: அடடா... இது புரியவில்லையா? மூச்சு விடுவதற்குள் முன்னூறு கவிதை

வஞ்சி: ஆகா.. நல்ல கருத்து...குப்பை மேட்டிலே குண்டுமணிபோல! யாரும் இதுவரை சொன்னதேயில்லை.

உலக: இதுபோல இன்னும் பல குண்டுமணிகளை நீ பொறுக்க வேண்டுமானால்...

வஞ்சி: என்ன செய்ய வேண்டும்?

உலக: ஒரு தாலி செய்ய வேண்டும்.

வஞ்சி: என்னா, தாலியா?

உலக: என், இதுகூட வேண்டாமா? சரி...

வஞ்சி: ஓகோ! சரிதான்! அய்யா மெய்க்காப்பாளரே! இரவு நேரத்தில், ஒரு நந்தவனத்தில் ஒரு பெண்ணுடன் ஒரு ஆண் இப்படிப் பேசுவதுதான் முறையா?''

உலக: பிறகென்ன? பகல் நேரத்தில் ஒரு பாலைவனத்தில் ஒரு பெண்ணுடன் ஒரு ஆண் இப்படிப் பேசுவதுதான் முறை என்கிறாயா நீ?

வஞ்சி: உமது உள்ளம்; கண்ணாடி போல எனக்குத் தெரிகிறது...

உலக: (நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு) இந்தக் கண்ணாடியிலே உன் முகத்தைப் பார்த்துக் கொள் சீக்கிரம் சிங்காரித்துக் கொள் - கண்ணுக்கு மை எழுதிக் கொள்! பொட்டு வை! பொலிவு பெறும்!

(வஞ்சி அவன் நெஞ்சுக்கு நேரே முகத்தை நீட்டி, கண்ணாடியில் பார்ப்பது போல நடித்து விட்டு)

வஞ்சி: அடடே! இது ரசமில்லாத கண்ணாடி!

உலக: நீதானே காதல் ரசம் பூச வேண்டும்..

(வஞ்சி, வெட்கப்பட்டு சிரிக்கிறாள்)

உலக: ஆகா! இவைகள் என்ன முத்துப் பற்களா... முல்லைச் சரமா? (அவளைத் தொடுகிறான்)

வஞ்சி: இதோ பாருங்கள்...இது மாதிரி பழைய வர்ணனைகள் எனக்குப் பிடிக்காது...

உலக: வா...! எல்லாம் புதிதாகவே சொல்லுகிறேன்.

(இழுக்கிறான்)

வஞ்சி: எங்கே?

உலக: அதோ அந்த மேடைக்கு.. இங்கு யாராவது வருவார்கள்...

வஞ்சி: அய்யோ, கலாராணி தேடுவாளே..

உலக: தேடட்டுமே! நாமென்ன தேவலோகத்திற்கா போகிறோம். தேவலோகத்தைத்தான் இங்கு வரவழைக்கப் போகிறோம்.. வா..வா!

(இருவரும் போய்விடவே - சிறிது நேரத்திற்கெல்லாம் கலாராணி அங்கு வந்து!)

"வஞ்சீ! வஞ்சீ" (என்று கூப்பிடுகிறாள்)

(வஞ்சியைக் காணவில்லை. மீண்டும் 'வஞ்சி' என்று உரக்கக் கூப்பிடுகிறாள். அப்போது, இரண்டு மூன்று கரிய உருவங்கள், அவள் மீது பாய்ந்து - அவள் முகத்திலே மயக்க மருந்தைக் காட்டி அவளைத் தூக்கிக் கொண்டு போய் விடுகின்றன. அவள் கொண்டு செல்லப்படுவதை அங்கு வரும் வஞ்சி, பார்த்து விடுகிறாள். அலறுகிறாள் வஞ்சி)

("கலா! கலா!" என்று கத்துகிறாள். பலனில்லை. கலாராணி, வெகுதூரம் கொண்டு செல்லப்பட்டு விடுகிறாள்)

காட்சி 15

(அரசன் மாளிகை - அரசன், அங்குமிங்கும் உலாவிக் கொண்டிருக்கிறான், சிரித்தபடியே! உலகப்பன் ஓடிவந்து)

உலக: அரசே!

அரசன்: என்ன,முடிந்ததா? எங்கே கலாராணி?

உலக: வெற்றிகரமாக முடித்து விட்டேன்... அவளை மெதுவாக மயக்கி...

அரசன்: அடே! மயக்க மருந்தை அவளுக்குக் கொடுத்து விட்டாயா (கோபமாக)

உலக: இல்லை அரசே! அது வேறு, மயக்க மருந்து! (இளித்தபடி) உம் அவளைத் தந்திரமாக நான் அழைத்துக் கொண்டு போய் விடவே, நமது ஆட்கள் கலாராணிக்கு மயக்க மருந்து காட்டி, கலாராணியை பளிங்கு மண்டபத்தில் சேர்த்து விட்டார்கள்.. கலாராணிக்கு இன்னும் பிரக்ஞை வரவில்லை!

அரசன்: சரி, புறப்படு!.. உலகப்பா! உடைகளை மாற்றிக் கொள்.. நானும் இதோ வந்து விடுகிறேன்...

(என்று கூறிவிட்டு, அரசன் உள்ளே செல்லுகிறான். உலகப்பன், மெய்க்காப்பாளனாக உடைகளைக் கழற்றி விட்டு, வேறு உடைகளைப் போட்டுக் கொண்டு கருப்பு ரோஜாவாக மாறி நிற்கிறான். உள்ளே சென்ற அரசன், வெளியே வருகிறான், புதுமைப்பித்தனாக!)

புது: உலகப்பா...

க.ரோ: அரசே!

புது: இப்போது என்ன செய்யப் போகிறேன் தெரியுமா?

க.ரோ: எனக்கென்ன தெரியும்? நீங்கள் செய்வது எல்லாமே புதுமையாகத்தானே இருக்கிறது?

புது: அதனால்தான் புதுமைப்பித்தன் என்று பெயர் வைத்துக் கொண்டேன்.

க.ரோ: அதோட விட்டீங்களா? (தன்னைக் காட்டி இந்த உலகத்தையுமல்லவா கருப்பு ரோஜாவாக மாற்றி விட்டீர்கள்.)

புது: (சிரித்தபடி) கருப்பு ரோஜா! வா..வா!.. நேரமாகிறது. கலாராணி மயக்கம் தெளிவதற்குள், காரியம் நடக்க வேண்டும்.

(இருவரும் ஒளிந்து ஒளிந்து வெளியேறுகிறார்கள்.)

காட்சி 16

(மக்கள் மன்றம் - விளக்கு எரிந்து கொண்டிருக்கிறது. கவிஞர் எழுதிய மக்கள் விடுதலைப் பாட்டு ஒன்றை அல்லி பாடிக் கொண்டிருக்கிறாள், கவிஞர் அந்தப் பாடலை ரசிக்கிறார்)

புதியதோர் உலகம் செய்வோம்- கெட்ட
போரிடும் உலகத்தை வேரோடு சாய்ப்போம்
பொது உடைமைக் கொள்கை திசையெட்டும் சேர்ப்போம்
புனிதமோடதை எங்கள் உயிரென்று காப்போம்
இதயமெல்லாம் அன்பு நதியினில் நனைப்போம்
'இது எனதே'ன்னுமோர் கொடுமையை தவிர்ப்போம்
உணர்வெனும் கனவிடை அயர்வினை எரிப்போம்
'ஒரு பொருள் தனி' என்னும் மனிதரைச் சிரிப்போம்
இயல்பொருள் பயன்தர மறுத்திடில் பசிப்போம்
ஈவதுண்டாம் எனில் அனைவரும் புசிப்போம்'' (புதிய)

- பாரதிதாசன்

(பாட்டு முடிந்ததும்)

கவிஞர்: அல்லி!என்னதான் கருத்துக்களை அள்ளிக் கொட்டி கவிதை எழுதினாலும்; அது உணர்ச்சி வயப்பட்டவர்கள் வாயிலாக வெளிக் கிளம்பும்போது தான் எழுச்சி விருந்தாக, ஏழையர் நலிவு போக்கும் மருந்தாக பயன்பட முடிகிறது!

(அப்போது மன்றத்தின் கதவு தட்டப்படும் ஒலி கேட்கிறது)

கவி: யார் பொன்னழகனாயிருக்கும்...

அல்லி: இல்லையே, அவர் காலையில்தானே வருவார் - ஒரு வேளை, புதுமைப்பித்தனாக...

கவி: அவன் ஏன் இங்கு வருகிறான் - இனிமேல் இங்கு வர அவனுக்குப் பைத்தியமா?

(கதவு மீண்டும் தட்டப்படுகிறது.)

கவி: அல்லி கதவைத் திறக்காதே... ஒரு வேளை அரசாங்க ஆட்களாக இருந்தால்...

அல்லி: யாராயிருந்தால் என்ன.. அதையும் பார்த்து விடுவோமே..

(அல்லி, கதவைத் திறக்கிறாள். புதுமைப் பித்தனும், கருப்பு ரோஜாவும், கலாராணியைத் தூக்கிக் கொண்டு உள்ளே நுழைகிறார்கள். அல்லி, கவிஞர் இருவரும் திகைப்பு - புதுமைப்பித்தன் கலாராணியை அங்குள்ள ஒரு பலகையில் படுக்க வைக்கிறான். அவள் இன்னும் மயக்கம் தெளியவில்லை.)

கவி: யார் இது?

புது: கவிஞரே! இன்னுமா சந்தேகம் இவள்தான் மந்திரி குமாரி கலாராணி - நான் சதிகாரன் அல்ல என்று நிரூபிக்கப்பட அமைக்கப்பட்ட சோதனைக்குரிய பொருள்! அல்லி! இனியாவது என் மீது சுமத்தப்பட்ட பழி நீங்குமல்லவா?

அல்லி: மன்னித்து விடுங்கள்...நான் தங்களின் மீது சந்தேகப்பட்டேனா இல்லையா என்பது தங்களுக்கே தெரியும்.

கவி: புதுமைப் பித்தரே! மன்னிக்கப்பட வேண்டியது நான்தான்.

புது: உங்களை மன்னிக்க மாட்டேன் கவிஞரே - சரியான படி தண்டிக்கப் போகிறேன், நீங்கள்; இனிமேல் நாள் ஒன்றுக்கு இருபது கவிதையாவது எழுத வேண்டும்!

கவி: எழுச்சி மிகுந்த வாலிபரே! தூய்மையான செயலை, துரோகம் என்று கூறி விட்டேனே; அந்தக் கூற்று, என் இருதயத்தை துளைத்தபடியிருக்குமே - இனி எங்கே நான் கவிதை எழுதுவது...

புது: மக்கள் மன்றத்தின் நன்மைக்காக, நீங்கள் எச்சரிக்கையோடு நடந்து கொண்டதை நான் தவறு என்று கூற மாட்டேன்.ஆனால் எனக்குத் தரப்பட்ட சோதனைதான் மிகக் கடுமையானது! அதையும் நிறைவேற்றி விட்டேன்.என் மீது படிந்த மாசை அகற்றி விட்டேன் வருகிறேன்.

அல்லி: எங்கே போகிறீர்கள்?

புது: அல்லி! நான் எங்கே போவேன் - மணிமகுட புரியின் வாழ்வுக்காக எங்கெங்கு நின்று பணிபுரிய முடியுமோ - அங்கெல்லாம் போவேன் - மக்களுக்காக உழைப்பேன் - மதம், சமூகக் கட்டுப்பாடு, மன்னராட்சியின் கொடுமை, மந்திரியின் ஆதிபத்யம் - அத்தனையும் சாடுவேன்!

அல்லி: தனியொருவராக நின்றா?

புது: இல்லை - இந்த மக்கள் மன்றத்தின் கிளையாக நின்று! அல்லீ! முடியாது என்று கூறுகிறாயா? நான் எடுத்துக் கொண்டிருக்கிற வேலை, நானே தனியாக செய்து முடிக்கக் கூடிய வேலைதான் - முன்பு கூறினேனே, 'மணிமகுடம்' பத்திரிகை ஆரம்பிக்க வேண்டுமென்று; அந்த முயற்சியில் ஈடுபடப் போகிறேன். அந்த ஒரு ஏடு; நாடு முழுவதும் நமக்குத் தொண்டர்கள் இருப்பது போல! குருபீடம் - அதிகார பீடம் - அவைகளின் பிரச்சார பீடம் - இந்த மூன்று பீடங்களும் தூள் தூளாக நொறுங்கும் வரை, மணிமகுடபுரி மக்கள் கைக்கு மாறும்வரை, புதுமைப்பித்தன் மறைய மாட்டான்.

கவி: இதே வேலையைத்தானே மக்கள் மன்றமும் செய்கிறது. நீங்கள் மாத்திரம் பிரிந்து சென்று போராடுவானேன்?

புது: வேலை ஒன்றுதான் - ஆனால் முறை வேறு! இதோ இந்த மந்திரி குமாரி மயக்கம் தெளிந்தால்தான் எழுந்து நடமாடுவாள் என்கிறேன் நான்! ஆனால் மக்கள் மன்றமோ, மயக்கத்தைத் தெளிவிக்காமலே அவளைத் தூக்கி நிறுத்தினால் போதும் நடக்க ஆரம்பிப்பாள் என்கிறது!

கவி: புரியவில்லையே!

புது: மந்திரிகுமாரிக்குப் பதில் மணிமகுடபுரி என்று நினைத்துப் பாருங்கள்; புரியும்! மதவெறி, ஜாதிவெறி, கடவுள் வெறி, முதலிய மயக்கங்கள் தெளிந்த பிறகே, மக்களாட்சி நிலை பெறமுடியும். மணிமகுடத்தில் என்கிறேன் நான்.

கவி: நாங்களும் ஒத்துக் கொள்கிறோம்.

புது: ஆனால் சொல்வதில்லை- செயலில் காட்டுவதில்லை. நான் சொல்லப் போகிறேன். எழுதப் போகிறேன் - செயலில் காட்டப் போகிறேன் - மக்களை மக்களாட்சிக்குத் தயார் படுத்தப் போகிறேன். என் வேலைகளுக்கு மக்கள் மன்றத்தின் ஆதரவு இருந்தால் போதுமானது - வருகிறேன்.

அல்லி: நான் சொல்கிறேன் - தாங்கள் போகக் கூடாது. முடிவை மாற்றிக் கொள்ளுங்கள் - உங்களது கொள்கைகளை மக்கள் மன்றம் விரைவிலே ஏற்றுக் கொள்ள நான் பொறுப்பாளி!

புது: ஏற்றுக் கொண்டால் என்னைப்போல் மகிழ்ச்சி அடைகிறவர்கள் யாரும் இருக்க முடியாது... அல்லீ! மக்கள் மன்றத்திலே மாறுதல்களைச் செய்யுங்கள்..! அறிவு ஒளி பரப்புங்கள்! அறப்போர் நடத்துங்கள்! அத்தனைக்கும் நான் நடத்தும் 'மணிமகுடம்' பேராதரவு தரும்! என்னுடைய மணிமகுடம், மக்களுக்காகத்தான்! மக்களை திருத்துவதற்காகத்தான்! ஆனால் நான் இங்கு இருக்க வேண்டுமென்று மட்டும் விரும்பாதே அல்லி! ஒருமுறை சந்தேகத்திற்குரியவனாகி விட்டவன் நான் - இனியும் இங்கிருப்பது சரியல்ல...

அல்லி: எத்தனை முறை வேண்டுமானாலும் இதுதான் பதிலா?

புது: என்னை மன்னித்து விடு... நண்பர் பொன்னழகனிடம் என் முடிவுகளைச் சொல்லு - முடிந்தால் விரைவில் சந்திப்போம். கலாராணி, மயக்கம் தெளிந்து எழும்வரை யாரும் அவளை எழுப்ப

வேண்டாம் - இன்னொன்று கலாராணிக்கும் அரசனுக்கும் திருமணம் நடத்த மந்திரி முயல்வது உண்மைதான். அந்தத் திருமணத்தை நடைபெறாமல் செய்ய இவளை இங்கேயே ரகசியமாகப் பூட்டிவையுங்கள் - ஜாக்கிரதை கவிஞரே வணக்கம்! அல்லி.. கதவைத் தாளிட்டுக் கொள்!

(அல்லியின் வாட்டம், புதுமைப்பித்தன் பின்னாலேயே அல்லி கதவைத் தாளிடச் செல்லுகிறாள்.)

புது: ஏன் அல்லி, இவ்வளவு வாட்டம்?

அல்லி: அல்லி எப்போது வாடும் என்று கவிதை எழுதுபவர்களைக் கேட்டுப் பாருங்கள்.

புது: அல்லீ... (திரும்புகிறான்)

(அவள், சோகத்தோடு, முகத்தை மூடிக் கொண்டு திரும்பி வந்து விடுகிறாள். அவனும், கருப்பு ரோஜாவும் போய்விடுதல்.)

காட்சி 17

(வீதி - 'மணிமகுடம்' என்ற பத்திரிகையை ஒருவன் கூவி விற்றுக் கொண்டு போகிறான். மக்கள் பரபரப்போடு வாங்கு கிறார்கள்... கூடிக் கொண்டு ஒரு பத்திரிகையைப் படிக்கிறார்கள்)

ஒருவன் படிக்கிறான்.

''மணிமகுடம்''

''ஆசிரியர் - புதுமைப்பித்தன்''

''தின இதழ் - விலை ஒரு பணம்''

''கொடிக்காலை அழித்து கோயில் கட்ட கொற்றவன் கையெழுத்திட்டது உண்மைதானா?

ஆயிரம் குடிசைகளை அழித்து விட்டு, அங்கே ஆலயம் அமைக்கும் அக்கிரம திட்டத்திற்கு, அரசன் உடன்படவில்லை

என்றும், கையெழுத்திட்டு விட்டார் என்று செய்தி பிரசுரித்தது அரசாங்க பிரச்சார பீடத்தின் பகிரங்க மோசடி என்றும் மணிமகுடத்தின் ஒற்றன் கூறுவதை, மந்திரியோ, குருநாதரோ, சீமான் சபையோ மறுக்க முடியுமா?''

(இந்தச் செய்தி படிப்பதை, அல்லி அங்கு நின்று மகிழ்ச்சியோடு கேட்டுக் கொண்டிருக்கிறாள், அவளுக்கு ஒரே குதூகலம். அவர்களிடம் அல்லி, ஓடி வருதல்)

அல்லி: அய்யா.. அய்யா.. அந்தப் பத்திரிகையை எனக்குத் தருவீர்களா?

அவர்கள்: முடியாது.. முடியாது.. நாங்க படிக்கணும்.

(வேகமாகப் படித்தல்)

''குருநாதரின் கோரதாண்டவம் - ஒரு சிறு கதை''

(அல்லியைப் பார்க்காமலே, பதில் சொல்லி விட்டு, பத்திரிகையைப் படித்தவன், பிறகு அல்லியை நிமிர்ந்து பார்த்து விட்டு வியப்புடன்)

அவர்: அடடே-- நீங்களா... இந்தாங்க!

(பத்திரிகையைத் தருகிறான்.)

(தரும்போதே, படித்துக் கொண்டு தருகிறான்.)

''மந்திரிகுமாரி - ஒரு தொடர்கதை - மர்மங்கள் நிறைந்தது!''

அல்லி: சரி - சரி நீங்கள் படியுங்கள் - நான் வேறு வாங்கிக் கொள்கிறேன்.

(அவசரமாகச் செல்கிறாள் உற்சாகத்துடன்.)

காட்சி 18

(மக்கள் மன்றம் - ஒரு அறையில் பொன்னழகனும், கலாராணியும் இருக்கிறார்கள்.)

கலா: நான் இங்கிருந்து தப்பி ஓடிவிடுவேனா என்று சந்தேகப்படவே வேண்டாம். நான் இங்கிருக்கும் விஷயம் அப்பாவுக்குத் தெரிந்து அவர் என்னை மீட்டு விடுவாரோ என்று கவலைப்பட வேண்டாம் - நான் இங்கிருக்கவே விரும்புகிறேன்.

பொன்: நீ சொல்வது உண்மையாகவும் இருக்கலாம். ஆனால், இதை நம்புவதற்கு இன்னும் பல நாட்கள் நகர வேண்டும். மன்றத்தில் உறுப்பினராக விரும்புகிறவர்களையே நாங்கள் எளிதில் நம்புவதில்லை. ஒரு மந்திரி மகளை நம்புவதென்றால்...

கலா: எத்தனையோ முறை கேட்டு விட்டேன். சரியான பதில் இல்லை- இப்போதாவது சொல்லுங்கள்! என்னை அபகரித்த காரணம் என்ன?

பொன்: அதுதான் சொன்னேனே; அரசனுக்கும் உனக்கும் திருமணம் நடக்கக் கூடாது என்றுதான்!...

கலா: சரி! அரசனை மணக்கவில்லை -பிறகு என்கதி?

பொன்: இந்த அவசரத்தில் அதையும் தீர்மானித்து விட வேண்டுமா?

கலா: தீர்மானித்துக் கொள்வது, என் உள்ளத்திற்கு ஒரு திருப்தி.

பொன்: திருமண விஷயங்களைப் பெண்களே தீர்மானித்துக் கொள்ள வேண்டும்.

கலா: அதை ஆண்கள் எதிர்க்கக் கூடாது, இல்லையா?

பொன்: ஆமாம்!

கலா: ஒன்று கேட்கிறேன்... நான்இங்கேயே இருக்கிறேன்; திரும்ப அரண்மனைக்குப் போகவில்லை என்று சொல்கிறேன், அதற்கு என்ன காரணம்?

பொன்: மக்கள் இயக்கத்தின் மீது உனக்குப் பற்றுதல் இருப்பதாகச் சொன்னாயே; அதுதான் காரணம் - இன்னும் என்ன புதிய காரணம்?

கலா: தூரத்திலிருந்து பார்க்கும் போது சோலையின் பசுமை நிறைந்த அழகு, ஒரு இளம் பெண்ணை அருகே அழைக்கிறது - சோலைக்குள்ளே நுழைந்து விட்ட அந்தப் பெண்ணை அங்குள்ள ஒரு பொன்மலர் கவருகிறது! அந்த மலரை தன்னுடைய மெல்லிய கரங்களால் கொய்து, கூந்தலில் சூடிக் கொண்டு குதூகலம்டைகிறாள் அவள்! இதிலிருந்து என்ன தெரிகிறது?

பொன்: பெண்களுக்கு மலரின் மீது ஆசை என்று தெரிகிறது...

கலா: அய்யோ.. எவ்வளவு பெரிய உதாரணத்தை சாதாரணமாக்கி விட்டீர்கள். அதாவது அந்தப் பெண்ணை அந்த சோலையும் கவருகிறது - அந்த ஒரு மலரும் கவருகிறது.

பொன்: ஆமாம்

கலா: சோலைக்கு வந்தவள், அந்த மலரை மட்டும் பறிப்பானேன்?

பொன்: பிறகென்ன? இலை தழைகளையா பறிப்பாள்?

கலா: அதல்ல நான் சொல்வது.

பொன்: சொல்வதை சுற்றி வளைக்காமல் சொல்.

கலா: மக்கள் மன்றம் என்னைக் கவர்ந்த சோலை! அங்கே நான் சூடி மகிழ ஆசைப்படும் மலர்.. மலர்...

பொன்: (சந்தேகத்துடன் அவளைப் பார்த்துக் கொண்டே பேச்சை மாற்றும் எண்ணத்துடன்) கலாராணி! மக்கள் மன்றத்தை தோட்டமென்று எண்ணிக் கொண்டால்தானே மலரை நினைத்து வாட்டமடைய வேண்டியிருக்கிறது... மக்கள் மன்றம் ஒரு பாசறை என்று எண்ணிக் கொள்! பாடி வீடு என்று கற்பனை செய்துகொள்.

கலா: அங்கேயும் போர்வாள் உண்டே; வீரப் பெண்களைக் கவர அதுபோதாதா?

பொன்: நீ குறிப்பிடும் போர் வாள் - மலர் - இவைகளுக்கெல்லாம் பொருள் என்ன?

கலா: போர்வாளுக்கும் மலருக்கும் நீங்காத தொடர்பு இருக்கிறதல்லவா?

பொன்: வெற்றி பெற்ற வாளுக்கு மலர்மாலை சூட்டுவார்கள் வீரர்கள்! அதைத்தானே சொல்லுகிறாய்.

கலா: ஆமாம் நீங்கள் போர் வாள்! நான்...

பொன்: கலாராணி! (வியப்புடன் பார்க்கிறான்)

கலா: நான் மலர் என்கிறேன்.

பொன்: தவறான நினைவு - மிகத் தவறான நினைவு - உன் கருத்தை உடனடியாக மாற்றிக் கொள்!

கலா: மாற்றிக் கொள்ள முடியாது! என்றைக்கு என் வீட்டில் உங்களைப் பார்த்தேனோ; என்றைக்கு உங்கள் ஆவேசம் நிறைந்த அழகு மொழிகளைக் கேட்டேனோ; என்றைக்கு மக்களின் நலத்திற்காக ஒலித்த அந்த வீரக் குரலை ரசித்தேனோ; அன்றுமுதல் அடிமையாகி விட்டேன்! அமைச்சர் மகள் என்பதை மறந்து விட்டேன் - கனவிலே - நனவிலே - கண்ணைத் திறந்தால் காணும் பொருள்களிலே - மூடினால் - இமைக் கதவுகளின் உட்புறத்திலே - தங்களது திருவுருவத்தையே கண்டேன்! மீண்டும் சந்திப்போமா என்று ஏங்கினேன் - சந்தித்தேன் - சந்தோஷத்தின் சிகரத்தில் நின்றேன். ஆனால், இன்று தங்களின் சொற்கள், என்னைத் துன்பக் கடலில் ஆழ்த்தியே தள்ளி விடுகின்றன. தயவு செய்து என்னைத் தவறாக எண்ணாதீர்கள். மந்திரி மகள் என்பதற்காக மட்டும் என்னை வெறுத்து விடாதீர்கள். உப்புக் கடலிலேதான் ஒளி முத்தும் இருக்கிறது! அதை மறந்து விடாதீர்கள்!

பொன்: வேறு ஏதாவது பேசு!

கலா: எதைப் பேசினாலும், எதை நினைத்தாலும் - சுற்றிச் சுற்றி இங்கேதான் வருவேன். நீங்கள் ஒரு வார்த்தை கூறிவிடுங்கள் போதும், நீங்கள் போர் வாள் - நான் மலர்!

பொன்: என் மனதைக் கவர்ந்த மலர், இந்த மன்றத்திலேயே இருக்கிறது! நீ குறிப்பிட்டாயே, அந்த லக்ஷணங்கள் அத்தனையும் பொருந்திய புரட்சி மலர்!

கலா: அல்லி மலரா?

பொன்: ஆம் - அல்லிதான்!

(அப்போது அல்லி வருகிறாள். கையில் 'மணிமகுடம்' ஏட்டுடன்)

அல்லி: புதிய பத்திரிகை பார்த்தீர்களா? ''மணிமகுடம்'' ஆகா! மக்களின் குரல் இதுதான்! புதுமைப்பித்தனின் எழுத்தா? பொங்கி வரும் புது வெள்ளமா? கட்டுரையா? கடல் அலையா? சொற் கூட்டமா? சூறைக் காற்றா? என்றெல்லாம் புகழ்கிறார்கள், மக்கள் கூட்டம் கூட்டமாக நின்று!.. இனி குருநாதர் தொலைந்தார்! போலிப் பத்திரிகை தலையெடுக்க முடியாது! அமைச்சரின் அடக்கு முறை தூள்! தூள்!

பொன்: நீயே புகழ்ந்து கொண்டேயிருக்கிறாயே; இப்படிக் கொடேன் பத்திரிகையை!

அல்லி: (பத்திரிகையை கண்களில் ஒத்திக் கொண்டபடி) ஆகாகா! நாட்டையே ஒரு கலக்கு கலக்கி விட்டது இந்த லட்சிய ஏடு!

(என்றபடி பத்திரிகையை பொன்னழகனிடம் கொடுக்கிறாள், பின், கலாவைப் பார்த்து)

அல்லி: என்ன, கலாராணி! மன்றத்து வாசம் எப்படி இருக்கிறது? நீ இன்னும் உணவருந்தியிருக்க மாட்டாயே! வா! போகலாம்.

(கையைப்பிடித்து அழைக்கிறாள்)

கலா: இல்லை - பிறகு சாப்பிடுகிறேன் - நீ போ!

அல்லி: ஊஹூம் நீயும் வா!

(அழைத்துப் போகிறாள்.)

பொன்: (தனக்குள்ளாக) கிணறு வெட்ட பூதம் புறப்பட்டது என்பார்கள்... அரசனிடமிருந்து இவளைப் பிரித்தால் இவள் நம்மை விட்டுப் பிரிய மாட்டேன் - என்கிறாள்! வேடிக்கையான பெண்கள்!

('மணிமகுடம்' ஏட்டைப் புரட்டிப் படிக்கிறான்)

காட்சி 19

(குருநாதர் மடாலயம் - அமைச்சர், குருநாதர், அரிஹர நாதர் மூவரும் இருக்கிறார்கள்)

அரி: (கையிலே மணிமகுடம் ஏட்டுடன்) இந்த நிலைமைகளை வளரவிடக் கூடாது! யார்அந்தப் புதுமைப் பித்தன்? அவன் எங்கே இருக்கிறான் என்று கண்டுபிடிக்க வேண்டும். அரசன் கையெழுத்துப் போடாத செய்தி அவனுக்கு எப்படித் தெரியும்? அவசரமாகவும், அவசியமாகவும் கவனிக்க வேண்டும் அமைச்சரே! இல்லாவிட்டால், நாமெல்லாம் தற்கொலை செய்து கொள்ள வேண்டியதுதான்!

குரு: அரிஹரநாதரே! பதறாதீர் - ஒரு பத்திரிகை ஆசிரியர் இப்படிப் பதறலாமா? எத்தனையோ பொய்களை திரிக்கவும், உண்மைகளை மறைக்கவும் கற்றிருக்கிற நீர் இதற்குப் பயப்படலாமா?

அமைச்சரே! நான் சொல்லுகிறேன், உமது விசேஷ அதிகாரத்தை உபயோகித்து உடனே கொடிக்கால் நகரை காலி செய்ய வேண்டும்! கோயில் எழுப்பும் தீர்மானமும் அமுலுக்கு வரவேண்டும்.

அமை: சரியான யோசனைதான்! தீர்மானம் செயலுக்கு வராவிட்டால் 'மணிமகுடம்' பத்திரிகைச் செய்தியை மக்கள் உண்மை என்று நம்பிவிடுவார்கள். இப்போதே உத்தரவிடுகிறேன்.

கொடிக்கால் நகரம் காலி செய்யப்பட வேண்டும்- கோயிலுக்கான முன்னேற்பாடுகள் நடைபெறவேண்டும்.

அரி: சபாஷ்! சபாஷ்! மக்கள் தொண்டன் முன் பக்கத்திற்கு ஒரு முக்கியமான செய்தி கிடைத்தது.

காட்சி 20

(கொடிக்கால் நகரம் ஏழைகளின் குடிசைகளிலே அரசாங்க வீரர்கள் நுழைந்து கொடுமை புரிகிறார்கள்.வீடுகளின் கூரைகள் பிரிக்கப்படுகின்றன. சுவர்கள் இடிக்கப்படுகின்றன. குழந்தை குட்டிகளோடு நடுத் தெருவிலே நிற்கிறார்கள் கொடிக்கால் நகரத்து மக்கள்.)

கிழவன்: (தள்ளாடியபடி) இது என்னய்யா அக்கிரமம். முன் எச்சரிக்கை கூட செய்யாமல், இப்படி குழந்தை குட்டிகளோடு எங்களை நடுத்தெருவிலே விடுறீங்களே, இது கடவுளுக்கே அடுக்குமா?

தலைமை வீரன்: கடவுளுக்கு அடுக்கு மாளிகை கட்டத்தான், உங்களையெல்லாம் ஓடச் சொல்லுகிறோம். ஏ, கிழவா! எதிர்த்துப் பேசினால் என்ன நடக்கும் தெரியுமா?

கிழ: இதைவிட இன்னும் என்ன நடக்க வேண்டும்? அடப் பாவிகளே! நாங்க எங்க போயி சந்தியிலே நிற்போம்!

த.வீ: சீ, கிழட்டு நாயே! தள்ளிப் போ - வேலை நேரத்திலே குறுக்கே நின்று கொண்டு! போடா! போ..!

(ஒரு வாலிபன், அவன் மனைவி, குழந்தை மூவரும் ஒரு வீட்டிலிருந்து வெளியேற்றப்படுகிறார்கள். குழந்தையின் பொம்மையை ஒரு வீரன் தூக்கி எறிகிறான், மற்ற சாமான்களோடு.)

குழந்: அப்பா- அய்யோ என் பொம்மை!

(என்று அழுகிறது.)

அப்பா: சீ - குடும்பமே நாசமாகுது... உனக்கு பொம்மை வந்ததா பொம்மை...!

(என்று அடிக்கிறான்; குழந்தை அழுகிறது. இன்னொரு வீட்டுக்காரனை அடித்தபடி இழுத்து வருகிறார்கள். அவன் மனைவி பின்னால் அழுது கொண்டே வருகிறாள்.)

அ.மனைவி: அய்யா - அவரை விட்டு விடுங்கய்யா - உங்க உத்திரவுப்படி நாங்க இடத்தை காலி செய்து விடுகிறோம்.

த.வீ: சீ பேசிக் கொண்டே உயிரை வாங்காதே - இந்த தடியன் எங்களை எதிர்த்துப் பேசுகிறான்... அவ்வளவு திமிரா இவனுக்கு...?

(அடிக்கிறார்கள். அவன் உடம்பெல்லாம் ரத்தம் வழிகிறது.)

அடிபடும் மனிதன்: ஏனய்யா அடிக்கிறீர்கள்? எங்கள் பிழைப்பிலே மண்ணைப் போட்டு, இருக்கவும் இடமில்லாமல் வயிற்றிலே அடித்து விட்டீர்களே, இன்னுமா அடிக்க வேண்டும்! அய்யோ அம்மா!

(சவுக்கடிகள் விழுகின்றன. அவன் துவளுகிறான். அப்போது அல்லி - பொன்னழகன் தலைமையில் மக்கள் மன்றத் தொண்டர்கள் ஓடி வருகிறார்கள்)

அல்லி: நிறுத்துங்கள்! (அந்த மனிதனுக்கு நேராக நின்று சவுக்கைப் பிடித்துக் கொண்டு) எதிர்க்கத் தெரியாத ஏழைகள் மீது வெறியாட்டம் நடத்தும் கோழைகளே! - நிறுத்துங்கள்... ஏன் அடிக்கிறீர்கள் அவரை?

த.வீர: நீ யார் காரணம் கேட்க? மணிமகுடபுரியின் ஆட்சி பீடம் கட்டளையிட்டிருக்கிறது!

அல்லி: முடியாது - மூர்க்கனே! ஆயிரம் குடிசைகளுக்குத் தீயிட்டு விட்டு ஆலயம் அமைக்கும் அதிமேதாவிகளின் படைத் தலைவனே! இருதயத்தை எடுத்தெறிந்து விட்ட உன் போன்றவர்களுக்குத் தான் மணிமகுடபுரி ராணுவத்திலே உயர்ந்த வேலையா? நீங்கள் என்ன மனிதர்கள்தானா; இயந்திரங்களா?

ஏழைகளின் குடிசைகளைத்தான் காலி செய்ய வேண்டுமென்று உத்திரவே தவிர, அவர்களின் எலும்பு உடல்களையும் காலி செய்து, அந்த எலும்புக் கூட்டுக்குள்ளே ஆண்டவனுக்கு பூஜை விளக்கு ஏற்றி வைக்க வேண்டுமென்று, கூறியது யார்? யார் கூறியது?

த.வீர: குருநாதர் உத்திரவு! அமைச்சர் அங்கீகாரம்! அரசனின் ஒகையொப்பம்! எங்கள் சவுக்கு நுனிகளுக்கு சரியான வேட்டை!

அல்லி: வேட்டையாடுவீர்கள், வீரர்களே, வேட்டையாடு வீர்கள் மக்கள், மாக்களாய் உள்ளவரையில்! கோழையின் கண்களில் அனலுக்குப் பதில் புனல் கிளம்பும் வரையில்! வேட்டையாடப்படும் மனித சமுதாயத்தின் இரும்புக் கை உங்கள் ஏகாதிபத்தியத்துக்கு எதிராக உயரும் வரையில்! வேட்டையாடுவீர்கள்! நடமாடும் கோயில்களை அழித்து விட்டு, குருநாதனுக்காக ஒரு கோயில் கட்டும் குருடர்களே! குறைமதி கொண்ட வீணர்களே! நாட்டையாள வழியின்றி, மக்களை வேட்டையாடிய நாசகாலர்கள் எல்லாம், சரித்திரப் பள்ளத்தாக்குகளிலே, கள்ளிக்காடுகளாய், முளைத்துப் போய் கிடக்கிறார்கள் என்பதை நெஞ்சிலே நிறுத்துங்கள்!

த.வீர: என்ன? ஆண்மை கொண்டவீரர்களின் அணிவகுப் புக்கு எதிரே; ஒரு அற்பப் பெண்ணுக்கு இவ்வளவு நெஞ்சழுத்தம்?

அல்லி: (சிரித்து) தவறான கணக்கு ராணுவத் தலைவரே, மிகத் தவறான கணக்கு! பெண்கள் வெறும் மஞ்சத்து ராணிகள் மட்டுமல்ல; நெஞ்சத்தில் பழிஏற்று விட்டால், கொஞ்சத்தில் விடமாட்டோம்; உம்போன்றோர் அதிகாரம் பஞ்சாய்ப் பறக்கும்வரை! ஏணை ஆட்டமட்டும் கற்றதில்லை இந்தக் கை! வெறியர்களின் ஆணையை உடைக்கவும் கற்றிருக்கிறது! கலை காட்டி, நாட்டின் நிலை காட்டும் அழகு சுந்தரிகள் மட்டுமல்ல பெண்கள்; உன் போன்ற கொடியோர்கள் தலைகாட்டினால் அதை நொறுக்கி எறியவும் தெரிந்தவர்கள். ''வீரப் பெண்மணிகள் ஒரு நாட்டின் வெற்றித் திருவிளக்குகள்'' என்பதை பெண் என்றால் மாய மெனக் கூறும் பித்தனாம் உங்கள் குருநாதர்தான் மறுப்பார் - வாள் பிடிக்கத் தெரிந்தவரே! நீயுமா மறுக்கிறீர் ! வெட்கம்! வெட்கம்!

த.வீர: போதும் உன் பிரசங்கம்!

பொன்: நண்பனே - பிரசங்கமாகத்தான் தெரியும் - பின்னடைந்து போனவரின் புண்ணைடைந்த நெஞ்சிலிருந்து புறப்படும் அழுகுரல் - பிரசங்கமாகத்தான் தெரியும் - யாருக்கு? காதுகளின் கர்ண பேரிகை கிழிந்து விட்ட காட்டு ராஜாக்களுக்கு! கனகமணிக் கட்டிலையும், அமுதமொழி மாதரையுமட்டுமே கண்டு கண்டு கண்களிலே சதை வளர்த்து விட்ட சல்லாப சுந்தரர்களுக்கு - ஏழைகளின் ஆவேசக் குரல், வீழ்ந்து போனவர்களின் உரிமை முழக்கம், பிரசங்கமாகத்தான் தெரியும்.

1. வீர: இவன் என்ன உளறுகிறான்!

2. வீர: இல்லை கத்துகிறான்!

பொன்: கழுதைக்கு கற்பூர வாசனை தெரியாதுதான் அப்பனே! பிரசங்கம் - உளறல் - கத்தல் - தூஷணை - இந்தக் கேடயங்களால் விடுதலைக் கணைகளை அதிக நாள் தடுத்துக் கொண்டிருக்க முடியாது.

வீர: சரி இப்போது எங்கே வந்தீர்கள்? என்ன செய்வதாக உத்தேசம்?

அல்லி: எங்கள் சொந்தக்காரர்களை, அண்ணன், தம்பி, அக்காள், தங்கை, அப்பா, அம்மா அனைவரையும் காப்பாற்ற வந்தோம் - ஆயிரம் வீட்டுக்காரர்களை அவதியிலிருந்து விடுவிக்க வந்தோம் - சுருக்கமாகச் சொல்லட்டுமா? இந்த சுருண்டு போனவர் மீது பாயும் உங்களைப் போன்ற சூரப்புலிகளை தடுத்துநிறுத்த வந்தோம்.

வீர: அரசாங்கத்திற்கு எதிராக?

அல்லி: இல்லை.. அநியாயத்துக்கு எதிராக!

வீர: ஆண்டவனுக்கு விரோதமாக?

அல்லி: இல்லை..அன்புத் தோழர்களாக!

வீர: எம்மைத் தடுக்க முடியாது உங்களால்!உம்...நடக்கட்டும்!

அல்லி: அதையும் பார்ப்போம்.

(என்று அல்லி கைகளை விரித்தபடி எதிரே நின்று)

அல்லி: எங்களையெல்லாம் பிணமாக்கி விட்டு அந்த ஏழைகளைத் துரத்துங்கள். உம்! நடத்துங்கள், நீங்கள் கைக்கொண்ட நல்ல காரியத்தை-

பொன்: வீரர்களே! திரும்பி விடுங்கள் - மன்னனிடம் சொல்லுங்கள் - மக்கள் போக மறுக்கிறார்கள் என்று! கொடிக்காலை அழித்து கோயில் எழுப்புவது - எவ்வளவு எதிர்ப்புக்குரிய செய்தி என்பதை அரசன் உணரட்டும் - ஆட்சி பீடம் உணரட்டும்!

த.வீர: முடியாது - ஏனப்பா நிற்கிறீர்கள்? (மற்ற வீரர்களை நோக்கி) இவர்களையும் அடித்துத் துரத்துங்கள்.

(பொன்னழகன் அல்லி முதலியோர் அடி வாங்குகிறார்கள். அல்லிக்கு தலையிலே ரத்தம் வழிகிறது - இவைகளையெல்லாம் புதுமைப்பித்தன் ஒரு பக்கமிருந்து கவனிக்கிறான். அவன் கையிலே சிறிய துப்பாக்கி இருக்கிறது. ஒரு வீரன் பொன்னழகனை முதுகுப் பக்கமாக குத்த வருகிறான். அப்போது புதுமைப்பித்தன் அந்த வீரனைச் சுட்டு வீழ்த்தி பொன்னழகனைக் காப்பாற்றிவிட்டு மறைந்து விடுகிறான். வீரர்கள் அதிர்ச்சியடைந்து கீழே விழுந்த வீரனைத் தூக்குகிறார்கள். குழப்பம் அதிகமாகிறது. பொன்னழகனும், அல்லியும் வீரர்களால் அதிகமாகத் தாக்கப்பட்டு விழுகிறார்கள். குடிசைகள் நாசமாகின்றன. மக்கள் ஓட்டம், வீரர்களின் பயங்கரமான சிரிப்பு.)

காட்சி 21

(மந்திரி வீடு - மந்திரி குணசீலர் ஆயாசத்தோடு வஞ்சியிடம்)

குண: ஒரே குழப்பம் - ஒரே குழப்பம்! கலாராணி எங்கு போனாள்? என்ன ஆனாள்? யாரிடம் சிக்கினாள் எதுவுமே

தெரியவில்லை, இதுவரையில்! நான் அதற்காகக் கவலைப்படுவதா; அரசாங்கத்தை எதிர்த்து நாலாபுறங்களிலும் கிளம்பி விட்ட புரட்சி சக்திகளைப் பற்றிக் கவலைப்படுவதா? மக்கள் உள்ளத்தையே ஒரு எரிமலையாக மாற்றுகிறான், அந்த புதுமைப்பித்தன்! அந்த எரிமலை வெடிக்குமானால் அந்த நெருப்புக் குழம்பிலே உருகிப் போய், மறைந்து விடும் என் அதிகாரம் - அந்தஸ்து - அமைச்சர் பதவி - எல்லாமே!

வஞ்சி: பிரபூ - கடற்கரையில் இருந்து கொண்டு, உப்புக்கு அலையலாமா? தங்களின் கவலைகள் அத்தனைக்கும் மருந்தாக இருக்கிறார் குருநாதர். அவரால் முடியாததா கலாராணி இருக்குமிடத்தை கண்டுபிடிக்க! புதுமைப்பித்தன், பொன்னழகன் கூட்டத்தை சபித்தே பொசுக்கி விடலாமே, அவர் நினைத்தால்!

குண: சரிதான், நீ சொல்வதைப் போல் நான் அந்த குருநாதரிடம் சொன்னால், அவர் என்னைப் பார்த்து என்ன தெரியுமா கேட்பார்? புதுமைப்பித்தன் ஆவி, அமைச்சர் உருவத்திலே வந்திருக்கிறதா என்று கேட்பார்! இதுமாதிரி கேள்விகளை, புதுமைப்பித்தன் தான் கேட்கிறான், அவன் பத்திரிகையில்! நாமும் கேட்டால் குருநாதருக்குக் கோபம் தான் வரும்!

வஞ்சி: அப்படியானால் குருநாதர், சக்தியற்றவரா?

குண: சத்தம் போடாதே - யார் காதிலாவது விழப் போகிறது! என்னமோ ''நெய்க்குத் தொன்னை - தொன்னைக்கு நெய்'' என்பார்களே, பழமொழி - அதுபோல அவருக்கு நான் ஆதாரம் - எனக்கு அவர் ஆதாரம்!

வஞ்சி: இதுமாதிரி போலி ஆதாரங்களால் புரட்சியை அடக்க முடியாது பிரபு!

குண: வஞ்சீ! நீ ஒன்றும் ஜோசியம் சொல்ல வேண்டாம் - போ! போ! (போகிறாள்)

(ஒரு காவலன் வந்து)

காவலன்: பிரபூ! பத்திரிகையாசிரியரும், குருநாதரும் பல்லக்கில் வந்திருக்கிறார்கள். தங்களை அவசரமாகப் பேட்டி காண வேண்டுமாம்.

குண: அழைத்துவா! அழைத்துவா!

(குருநாதர், அரிஹரநாதர் இருவரும் வந்து அமருதல்)

குண: என்ன திடீரென்று?

அரி: சீமான்கள் சபை, அதிகாரப்பூர்வமில்லாமல் அவசர மாகக் கூடி, நாட்டில் ஏற்பட்டுள்ள குழப்பங்களை ஆராய்ந்தோம். கோயில் கட்டுவதற்கு, அரசன் சம்மதிக்க வில்லையென்ற செய்தியை வைத்து காரசாரமான விவாதம் நடைபெற்றதாம். கடைசியாக அரசனே சீமான்கள் சபைக்கு வரவேண்டுமென்றும், கோயில் கட்ட சம்மதித்து கையெழுத்திட வேண்டுமென்றும், அப்படிக் கையெழுத்திட்ட பிறகே சீமான்கள் சபை, மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்குமென்றும் தீர்மானித்திருக்கிறார்களாம்.

குண: இந்த முடிவுக்குக் காரணம்?

குரு: அந்த 'மணிமகுடம்' பத்திரிகைதான்.

குண: அய்யோ சீமான்கள் சபையிலும் நமக்கு எதிர்ப்பு ஏற்பட்டால் பிறகு சமாளிக்கவே முடியாதே!

அரி: கொடிக்கால் நகரத்திலே பொன்னழகன், அல்லி நடத்திய மறியலும், அங்கே அரசாங்கம் பெரிய அட்டூழியம் புரிந்ததாக, 'மணிமகுடம்' பத்திரிகையிலே வந்துள்ள செய்தியும் ஜனங்களிடம் பரபரப்பை உண்டு பண்ணியிருக்கின்றன. இந்த சமயம் அரசனும் சீமான்கள் சபையும் நம் பக்கம் இல்லாவிட்டால் நமது பதவிகளுக்கு ஆபத்துதான்!

குரு: ஆமாம். சீமான்கள் சபைக்கு அரசன் எப்படியும் வந்தாக வேண்டும். தேவாலயத் தீர்மானத்தில் கையெழுத்திட்டாக வேண்டும் - அதற்கு அமைச்சர்தான் பொறுப்பாளி!

(அந்த சமயத்தில் பைத்தியக்காரன் போன்ற ஒரு மனிதனை இரண்டு காவலர்கள் உள்ளே இழுத்து வருகிறார்கள். அடித்தபடியே! அந்த மனிதனின் கையில் நூற்றுக்கணக்கான 'மணிமகுடம்' பத்திரிகைகள் இருக்கின்றன. இழுத்து வரப்படும் அவனை, அமைச்சர், குரு, அரிஹர நாதர் மூவரும் ஆச்சரியமுடன் பார்த்து)

குண: யார் இவன்?

காவலன்: பிரபூ! 'மணிமகுடம்' விற்றுக் கொண்டு போனான். தங்கள் உத்திரவுப்படி இவனைப் பிடித்து வந்தோம்.

குண: சபாஷ்!.. குருநாதரே! 'மணிமகுடம்' எங்கெங்கே யார் யார் விற்கிறார்களோ, அவர்களையெல்லாம் கைது செய்ய ரகசிய உத்திரவு போட்டிருக்கிறேன். அப்படிக் கிடைத்தவர்களில் இவன் பத்தாவது ஆள்!

அரி: ஆளைப் பாருங்கள் - பைத்தியக்காரனைப் போல் இருக்கிறான் (அவனிடம் வந்து) ஏய்.. இந்தப் பத்திரிகைக்கும் உனக்கும் என்ன சம்பந்தம்?

அவன்: துட்டு கிடைக்கும் விற்றால்! அவ்வளவுதான் சம்பந்தம்!

குண: இதன் ஆசிரியர் புதுமைப்பித்தன் எங்கேயிருக்கிறான்.

அவன்: தெரியாதுங்க. தெருவிலே படுத்திருந்தேன். திடீர்னு ஒருஆள் வந்தார் - இந்தப் பத்திரிகைகளை விற்று துட்டுக்களை நீயே எடுத்துக்க - என்றார். விற்க வந்தேன் - வந்த சமயத்தில் இவர்கள் பிடித்துக் கொண்டார்கள் சாமி! என்னை விட்டுவிடுங்கள்! பிரபூ! நான் போகட்டுமா?

குண: சீ! எங்கேடா போகிறாய்? (கன்னத்தில் அறைகிறார். காவலாளனிடம்) ஏய் இவனைக் கைது செய்து பூட்டி வையுங்கள். இந்தப் பத்திரிகைகளுக்கு தீ வைக்கச் செய்யுங்கள்!

குரு: ஆமாம் - கண்குளிரப் பார்ப்போம்; இங்கேயே நடக்கட்டும்!

(காவலர் அவனிடமிருந்த பத்திரிகைகளை வாங்கி, கீழே போட்டு அவன் கையாலே தீ வைக்கச் சொல்லி, வற்புறுத்து கிறார்கள். அவன் தயங்கவே, காவலர்கள் அடிக்கிறார்கள். பிறகு, சிறு தீப்பந்தத்தால் அந்த ஏடுகளுக்கு அவனே தீயிடுகிறான். தீயிடும்போது - அவன் 'யானுமிட்ட தீ மூள்கவே மூள்கவே!' என்று கத்துகிறான். குருநாதர் வெறிச் சிரிப்புடன் பத்திரிகைகள் எரியும் காட்சியைப் பார்க்கிறார்... அப்போது அரண்மனை மெய்க்காப்பாளன் உலகப்பன் அங்கு வருகிறான். அவன் உடம்பெல்லாம் நடுங்குவது போல் தெரிகிறது. அவன் பரபரப்பைக் கண்டதும்)

குணசீலர்: உலகப்பா - என்ன நடந்தது?

உலக: ஆபத்து பிரபூ! ஆபத்து! அரசர் அரண்மனையை விட்டு வெளியேறி விட்டார்! அரச பதவியைத் துறந்து விட்டார்!

குண: என்ன?

உல: இதோ அவர் கொடுத்து விட்டுப்போன கடிதம்!

(குணசீலர் கடிதம் படித்தல்)

அன்புள்ள அமைச்சர் அவர்களுக்கு,

நாட்டிலே ஏற்பட்டிருக்கும் நெருக்கடிகள் என்னைப் பயமுறுத்துகின்றன. எந்த நேரத்திலும் புரட்சிக்காரர்கள் கையில் இந்த நாடு சிக்கி விடலாம். அந்த சமயம் அவர்களால் கைது செய்யப்பட்டு, அவமானப்படுவதை விட இப்போதே ஓடி விடலாம் என்று தீர்மானித்து அதன்படி வெளியேறி விட்டேன். அரச பதவியை மட்டுமல்ல; இந்த உலகத்தையே துறந்து நிம்மதியாக மேல் உலகு செல்ல முடிவு கட்டி விட்டேன். என் ஆத்மா சாந்தி அடைவதற்கான சடங்குகள் எல்லாம், குரு நாதரைக் கொண்டு நடத்தி வையுங்கள்! எனக்கு நீங்கள் செய்ய வேண்டிய உதவி அதுதான்! வருகிறேன்.

மணிமாறன்
மணிமகுடத்தின் மாஜி மன்னன்

அரி: நம்முடைய திட்டங்கள் எல்லாம் கவிழ்ந்தன - இந்தச் செய்தி வெளியே தெரிந்தால் போதும் - அடுத்த வினாடியே நமது ஆட்சி ஒழிந்து விடும் - நாமெல்லாம் சிறைக் கோட்டங்களைத் தான் அலங்கரிக்க வேண்டும்.

உல: அதற்கும் சிறையிலே இடமில்லை - ஆயிரம் பேரை அடைக்க வேண்டிய சிறையில் நாலாயிரம் பேரை அடைத்திருக்கிறோம், ஆடு மாடுகளைப் போல!

மணிமகுடம் விற்ற மனிதன்: (குறுக்கிட்டு) இவுங்க எல்லாம் உள்ளே போனா, அவுங்க எல்லாம் வெளியே வந்து விடுவாங்களே!

(காவலன், ஆத்திரத்தோடு அவனை அறைந்து 'பேசாதே' என்று எச்சரிக்கிறான்)

குரு: தெருவிலே போவோரும் வருவோரும், ஏழையும், மோழையும், இதுபோன்ற பத்திரிகை விற்கும் அனாதைகளும், கூலி கூட்டங்களும், அரசாங்கத்தைப் பற்றி பேச ஆரம்பித்தால் அது பெரிய ஆபத்துஅமைச்சரே! நான் வெளியிலே சொல்வதில்லையே தவிர, எனக்கு நன்றாய்த் தெரியும். ஒரு தேசத்திலே இதுபோன்ற தேய்ந்து போனதுகள் (பத்திரிகை விற்பவனைக் காட்டி) கொஞ்சம் தெளிவு பெற்றாலே, பிறகு எப்போப்பட்ட இரும்பு ஏகாதிபத்தியங்களும் தூள் தூளாகி விடும்!... இந்த நேரத்திலேதான், அமைச்சரே, எச்சரிக்கையாயிருக்க வேண்டும்...

குண: குருநாதரே! மேலும் மேலும் பயமுறுத்தாதீர்கள். அரசன் இல்லை என்ற செய்தி, தீ போல பரவுவதற்கு முன் ஒரு திட்டம் தீட்டுங்கள்!

குரு: திட்டம் – நான் தீட்ட வேண்டும்,

(என்று கூறியபடி, மணிமகுடப் பத்திரிகை வியாபாரியிடம் முன்னோக்கி நடக்கிறார்; அவன் முகத்தை உற்றுப் பார்க்கிறார்; அவன் மிரளுகிற அளவுக்கு, அங்குள்ளோர் அனைவரும்

வியப்படைகிற அளவுக்கு அவன் முகத்தையே பார்த்துக் கொண்டிருக்கிறார். பிறகு அங்கு மாட்டப்பட்டுள்ள அரசனுடைய படத்தையும் பார்க்கிறார். படத்தையும் அவனையும் மாறி மாறிப் பார்க்கிறார், திடீரென்று கூச்சலிடுகிறார்!)

குரு: அரசன் கிடைத்து விட்டான், அமைச்சரே - அரசன் கிடைத்து விட்டான்!

குணா: என்ன?

உல: எங்கே? எங்கே? எங்க ராஜா எங்கே?

குரு: அமைச்சரே? அரசன், மேல் உலகம் செல்லப் போவதாக ஓலையில் எழுதியிருக்கிறான் அல்லவா? சபாஷ்! சபாஷ்! அப்படியானால் இதோ அரசன் கிடைத்து விட்டான்.. நம் மனம் போல் ஆட்டி வைக்க ஒரு மன்னன் கிடைத்து விட்டான்! (அவனைப் பார்த்து) ஏ! நாடோடிப் பயலே! நீ நாடாளுகிறாயா?

அவன்: அப்படின்னா என்னங்க?

குரு: நாடு! நாடு - தேசத்தின் ராஜாவாக ஆகிறாயா என்றார்.

அவன்: ராஜாவா? ஐயையோ! வேண்டாங்க.. ராஜாவாக இருந்தா ஆபத்துங்க...

குரு: என்னடா ஆபத்து! குணசீலரே!... நமது அரசனைப் போலவே இருக்கிறான் ஏறத்தாழ! ராஜ உடைகளைப் போட்டால், அரசனாகவே தோற்றமளிப்பான்! இதுமாதிரி ஒரு பொம்மை, மணிமகுடத்தின் கொலுவை அலங்கரிக்கட்டுமே! அரசன் வெளியேறினான் என்ற செய்தியையே மூடி விடலாம் அல்லவா!

குணா: ஆமாம் - சரியான யோசனை!

அரி: யாருக்கும் தோன்ற முடியாத யோசனை... இவனே தான் இனி ராஜா...

உல: ஆகா! சுக்ரதிசை தான் - ஆளு பெரிய அதிர்ஷ்டசாலி!

அவன்: நான் ராஜாவாக இருக்க மாட்டேங்க - என்னை விட்டுடுங்க... ராஜான்னா சண்டைக்கு போகணும் - ஜனங்ககிட்ட

கெட்ட பேரு வாங்கணும் - எந்நேரமும் வாளும் கையுமா நிக்கணும் - யாரு படையெடுப்பானோ, எவன் கோட்டையை வளைப் பானோ, அப்படின்னு பயந்து சாகணும்! வேண்டாங்க, அந்த உயிர் கொடுக்கிற வேலை! வேணும்னா நான் குருநாதரா இருக்கிறேன்.

குணா: குருநாதராகவா?

அவன்: ஆமாங்க.. அதாங்க கஷ்டபடாம புகழ் வாங்குகிற வேலை! கத்தி க்படா தூக்காம வாழலாம். யார் ஆண்டா என்ன; யார் செத்தாஎன்ன? நம்ப வாழ்க்கை சுகமாயிருக்கும்! அந்த வேலையே கொடுங்க!

குணா: டே முட்டாள்!.. சொல்வதைக் கேள்! நீ ராஜாவாகவே இரு!... ஒரு ஆபத்தும் வராமல் நான் பார்த்துக் கொள்கிறேன். இதை மறுத்தாயானால் மரண தண்டனை கிடைக்கும் உனக்கு! இப்போது சொல்; நீ மறுத்து மரண தண்டனை அனுபவிக்கிறாயா? அல்லது, ஒப்புக் கொண்டு பலருக்கு மரண தண்டனை கொடுக்கிறாயா?

அவன்: ஒப்புக் கொள்கிறேன் - ஆனால் நான் எல்லாருக்கும் மரண தண்டனை தர மாட்டேன். இந்த நாட்டிலே மூணே பேருக்குத் தான் மரண தண்டனை கொடுப்பேன்.

அரி: யாரப்பா அது?

அவன்: அவங்க செத்துப் போயிட்டாங்க! சொன்னா உங்களுக்குத் தெரியாது.

உலகு: செத்துப் போனவுங்களுக்கு மரண தண்டனையா? சரிதான் - சரிதான்!

அவன்: உஸ்! வீரன் ஒரு தடவைதான் சாவான் - கோழை பலமுறை சாவான்னு - இந்த 'மணிமகுடம்' பத்திரிகையிலே தான் நான் ஒரு தரம் படிச்சேன்!

(சொல்லிக் கொண்டே பல் இளிக்கிறான்.)

குணா: ஏய் இனிமேல் 'மணிமகுடம்' பத்திரிகையைப் பற்றி பேசக் கூடாது.

அவன்: மணிமகுடம் நாட்டைப் பத்தியே பேசணும்! சரிங்க! ஆமாம் ஒண்ணு கேக்க மறந்துட்டேன் - நாடகம் எப்போது நடத்தப் போறீங்க.

குண: நாடகமா?

அவன்: நான் ராஜா வேஷம் போடணுமில்லே அது நாடகமில்லையா?

அரி: சரிதான் கொஞ்சம் பைத்தியங்கூட நமக்குச் சரியான ஆள்தான் ஏய்! நீ இங்கே நிரந்தர ராஜாவாக இருக்கணும் - எங்களைப் போல!

அவன்: அப்படிங்களா? சரிசரி! இப்ப நிரந்தரமா மந்திரி வேஷம் போட்டிருக்கிறது யாரு? குருநாதரு வேஷம் போட்டிருக்கிறது யாரு?.. இவர் என்னா வேஷம்?

(அரிஹரநாதரைக் காட்டி.)

குண: உலகப்பா! அவனைப் பேசவிடாதே! அவனை அரசனாக்க வேண்டியது உன் பொறுப்பு! பழையபடி நீயே! மெய்க்காப்பாளனாக இருக்க வேண்டும். இந்தப் புதிய அரசனுக்கு! பழைய அரசன் எப்படியெப்படி நடப்பானோ! எப்படி உட்காருவானோ, அப்படியெல்லாம் பழக்க வேண்டும். சீக்கிரம் - நாளைக்கே இவன் சீமான்கள் சபைக்கு வருவது போலத் தயார் பண்ணு!

அரி: ஆமாம் - சபையில் கையெழுத்துப் போட வேண்டுமே, அதற்கு என்ன செய்வது?

குண: ஆமாம் - என்ன செய்வது? (யோசித்து) சரி - அரசனுக்கு மூளைக் கோளாறாக இருக்கிறது - சபையோர் விருப்பத்தை முன்னிட்டு உடல் நிலையையும் பொருட்படுத்தாமல் அழைத்து வந்தோம். என்று கூறிவிடுவது! எப்படியோ; தற்காலிகமாகத் தப்பி விடலாமல்லவா? (அவனைப் பார்த்து)

ஏ, நாடோடி! நீ நாளைக்கு சீமான் சபையில் மூளைக் கோளாறுள்ள அரசனைப் போலவே நடிக்க வேண்டும்.

அவன்: ஓ! இரண்டு நடிப்பா? சரி - நாகடமே உலகம்!

(என்று உலகப்பனைப் பார்க்கிறான்.)

குண: உலகப்பா - அழைத்துப் போ!

உலக: வாங்க, ராஜாதி ராஜரே வாங்க!

அவன்: ஆகா - என் கருப்பு ரோஜாதி ரோஜரே போங்க.

(போகும்போது அவன், உலகப்பனைப் பார்த்து கண் சிமிட்ட இருவரும் ஒருவருக்கொருவர் புன்னகை புரிந்தபடி போகிறார்கள். மணிமாறனேதான், 'மணிமகுட' வியாபாரியாக வும், புதுமைப்பித்தனாகவும், இப்போது போலி அரசனாகவும் இருக்கிறான் என்பது உலகப்பனுக்குத் தெரியாதா என்ன?)

காட்சி 22

(வீதி 'மணிமகுடம்' ஏட்டை ஒருவன் கூவியபடி விற்கிறான். பலரும் வாங்குகிறார்கள்,படிக்கிறார்கள், சூழ்ந்து நின்று!)

'மணிமகுடம்' ஆசிரியர் புதுமைப்பித்தன் - கொடிக்கால் நகரில் பொன்னழகன் அல்லி அறப்போராட்டம் - பொன்னழகனைக் கொல்ல முயற்சி - கொடிக்கால் நகரில் அரண்மனைக் குதிரைப் படைகள் நடத்திய கொடுமைகளைக் கேட்டு, அரசர் மணிமாறனே மனம் நொந்து போயிருக்கிறாராம் - குருநாதர் மந்திரி அரசர் மூவரிடையே கலகம் நடந்து கொண்டிருப்பதாக செய்தி உலவுகிறது. இன்னும் பல உண்மைகள் விரைவில் வெடிக்க இருக்கின்றன.

தலைநகரத்திலே மாபெரும் பொதுக்கூட்டம் - புதுமைப் பித்தன் நீண்ட சொற்பொழிவு - குருநாதருக்கும், 'மக்கள் தொண்டன்' பத்திரிகைக்கும் எதிராக லட்சோப லட்சம் மக்கள் எழுப்பிய முழக்கம், வானை எட்டியது! ''மக்களாட்சி தேவை'' என்று கடல் அலைபோல் ஒலி எழுப்பினர் - கடவுள் பெயரால், மதத்தின் பெயரால் ஏமாற்றி வாழும் எத்தர்களுக்கு இனி வாழ்வில்லை!

வளமில்லை! நாட்டில் வேலையுமில்லை! எழுச்சியுற்ற மனிதன்தான் - இனி ஏறுநடை சிங்கந்தான் - கொழித்து விட்ட உமிகள்தான் இனிக் குள்ளநரிக் கூட்டத்தார் - பழித்து விட்டான் பகுத்தறிவால்.

இனி, பக்தி - மதம் - கடவுள் எல்லாம் பாழ்! பாழ்! பாழ்!

(அப்போது அரசாங்க வீரர்கள் படிப்பவர்களை மிரட்டி அவர்களிடமுள்ள ஏடுகளைப் பிடுங்கி எறிதல் - 'மணிமகுடம்' விற்கும் மனிதனையும் கைது செய்கிறார்கள்.)

(அதே வீதியில் 'மக்கள் தொண்டன்' ஏடு விற்பவன் கூவுகிறான். அதை யாரும் வாங்கவில்லை - கடைசியாக, வியாபாரியே ஒரு பத்திரிகையை எடுத்து உரக்கப் படிக்கிறான்.)

''மக்கள் தொண்டன் ஆசிரியர் அரிஹரநாதர் – நாளைய தினம் சீமான்கள் சபை கூடுகிறது. கோயில்கட்டுவது பற்றி நேரிலேயே தனது சம்மதத்தைத் தெரிவிக்க, மணிமகுட மன்னர் மணிமாற மகாராஜா சீமான் சபைக்கு விஜயம் செய்யப் போகிறார். மன்னருக்கு உடல் நலமில்லாமல் இருந்தாலுங் கூட, நாளைய தினம் சபைக்கு வந்த பிறகு மகாராஜா நீண்ட நாள் ஓய்வு எடுத்துக் கொண்டு உடல் நிலையை சரி செய்து கொள்வார்!''

(செய்தி கேட்டவர்கள் வியப்படைதல்)

ஒருவன்: ஏய் ராஜாவே வர்றாரு; சபைக்கு நாளைக்குப் போகலாண்டா!

காட்சி – 23

(சீமான்கள் சபை - பத்து சீமான்களும் அமர்ந்திருக்கிறார்கள். பொதுமக்களும் தனியிடத்தில் கூடியிருக்கிறார்கள். குரு நாதர், அரிஹரநாதர், அமைச்சர் ஆகியோர் இருக்கிறார்கள்)

அமை: (எழுந்து) பெருமைக்குரிய, மணிமகுடத்தின் பிரதிநிதிகளே! பொதுமக்களே! இன்றைய தினம் அரசர் பெருமான் மணிமாற ராஜன் அவர்கள், நமதுசபைக்கு விஜயம் செய்கிறார் - சீமான்கள் சபைக்கும் அரசருக்கும் கோயில் கட்டுதல் சம்பந்தமாக

ஏதோ மனவருத்தமிருப்பதாக வெளிவந்துள்ள செய்திகள் அனைத்தும் பொய் என்பதை நிரூபிப்பதற்காகவே உடல்நிலை சரியில்லாமலிருந்துங் கூட அரசர் அவர்கள் சபைக்கு வர இசைந்துள்ளார்கள். ஆண்டவன் ஆணையாக, இந்த சீமான்கள் சபையிலே பிளவு ஏதுமில்லை. அரசருக்கும்,அதிகார பீடத்திற்கும் எந்தவிதமான அபிப்பிராய பேதமுமில்லை. ஒரே ஒரு வருத்தமான செய்தி என்னவென்றால் நமது மாட்சிமை தங்கிய மன்னர் பிரானுக்கு சிறிது மூளைக் குழப்பம் ஏற்பட்டிருக்கிறது. சாம்ராஜ்ய சக்கரவர்த்திக்கு ஏற்பட்டுள்ள அந்த மூளை நோயையும், நமது சனாதன சக்கரவர்த்தி குருநாதர் அவர்கள் தீர்த்து வைப்பதாக உறுதி அளித்திருக்கிறார்கள். விரைவில் குணமாகிவிடும், குணமாக வேண்டும் என்று நாமெல்லாம், ஆண்டவனைப் பிரார்த்திப் போமாக! இப்போது அரசர் வரும் நேரமாகி விட்டது. நான் இத்துடன் என் முன்னுரையை முடித்துக் கொள்கிறேன்.

(அரசனும் உலகப்பனும் வருகிறார்கள்)

உலக: மணி மகுடபதி - மாட்சிமை தங்கிய மன்னர் பிரான் - மணிமாற ராஜன் - வருகை ! வருகை!

(அரசன் அங்கு வந்ததும், அனைவரும் எழுந்து வணங்குகிறார்கள். அரசன் கம்பீரத்தோடு அனைவரையும் பார்க்கிறான். அரச பீடத்தில் போய் அமருகிறான். சபையில் நிசப்தம் நிலவுகிறது. அரசன் எழுகிறான். சபையைப் பார்த்து பல் இளிக்கிறான்.'அமைச்சரே' என்று அழைக்கிறான்.)

அமை: அரசே! கொடிக்கால் நகரைப் பற்றிய தீர்மானம்...

அரசர்: கொடிக்கால்! கொடிக்கால்! கொடிக்கு கால் ஏதய்யா? கொடிக்காலாம் கொடிக்கால்! ஓ...! கொடிக்குக் கால் உண்டு! உண்டு! பெண்களைப் பூங்கொடி என்கிறார்கள். பெண்களுக்குக் கால் இருக்கிறது. ஆகையினாலே கொடிக்குக் கால் உண்டு. உம் சரி- அமைச்சரே! என்ன சொன்னீர்? கொடிக்காலை.. என்ன செய்ய வேண்டும்?

அமை: காலி செய்ய வேண்டுமென்று...

அர: அய்யோ! காலை காலி செய்து விட்டால், எப்படி நடப்பது? முடியாது முடியாது - நடக்க முடியாது... இப்படித்தான் நடக்க வேண்டும்.

(என்று நொண்டியைப் போல நடக்கிறான். அதைக் கண்ட சீமான்களும், மக்களும் பரிதாபப்படுகிறார்கள்.)

சீமான்: அமைச்சர் அவர்களே! அரசர் உடல்நல மில்லாமலிருப் பதால் அவரை அரண்மனைக்கு அழைத்துப்போவது நல்லது!

அர: அரண்மனை! அரண் என்றால் கோட்டை – மனை என்றால் வீடு - கோட்டை வீடு! கோட்டை வீடு! கோட்டை விடு!. எதைக் கோட்டை விடுவது?

அமை: அரசே! அரண்மனைக்குச் செல்லலாம்.

அர: முடியாது நான் ஆரண்யத்துக்குத்தான் செல்வேன் - நான் திரும்பி வர பதினாலு வருஷங்கள் பிடிக்கும்- அதுவரையில் இந்த நாட்டை என் கிரீடம் ஆளட்டும் - இந்தாரும் அமைச்சரே! இந்த கிரீடத்தின் மீது சிம்மாசனத்தை தூக்கி வைத்து, எனக்குப் பதிலாக நீர் ஆளும்;இல்லாவிட்டால் நெருப்பு ஆளட்டும்.

(என்று கிரீடத்தை அமைச்சர் கையில் கொடுக்கிறான் – பிறகு வெளியே போவது போல நடக்கிறான், பின் திரும்பி வந்து)

அடடே! அமைச்சரே! கிரீடத்தையா கொடுத்து விட்டேன்? இதை சிம்மாசனத்தில் வைக்கக் கூடாதே... பாபமாயிற்றே... சிம்மாசனம் அழுக்காகிவிடும்..இதோ இதை சிம்மாசனத்தில் வையும...

(என்று கிரீடத்தை வாங்கி கொண்டு தன் பாதரக்ஷைகளைக் கழற்றி, அமைச்சர் கையிலே கொடுக்கிறான். அவரும் அவைகளைத் தூக்கிக் கொண்டு நிற்கிறார்.)

அர: (கிரீடத்தைப் பார்த்தபடி) உன்னைக் கண்டு மயங்காத பேர்களுண்டோ, ராஜபோகத்திலே, அதிகாரத்திலே உன்னைக்

கண்டு மயங்காத பேர்களுண்டோ? (பாட்டை முடித்து) ஏ! கிரீடமே நவரத்தினங்களும், முத்துக்களும் வைத்து இழைக்கப்பட்ட தங்கக் கூரையே! என் தலைக்கு நீ ஒரு பாறையே!

(என்று கிரீடத்தை தன் தலையில் வைத்துக் கொள்கிறான்... அமைச்சர் கையிலே இருக்கும் பாதுகைகளைப் பார்க்கிறான்.)

அர: (அமைச்சரிடம்) இது என்ன அதிசயம்! மந்திரியாரே - பாதுகையை கையிலே போட்டுக் கொண்டு நிற்கிறீர்? ஓகோ! பாதுகை என்றதும், கையிலே மாட்டிக் கொண்டீரோ - மகா புத்திசாலி அய்யா நீர் - இது பாதக்கை! அதனால், பாதத்தில் மாட்டிக் கொள்ளும் - பாதுகையே - பாதுகையே!

(என்றுபாடுகிறான்)

குருநாதர்: (எழுந்து) அமைச்சரே!... அரசரின் நிலை எனக்கு மனக்கிலேசம் தருகிறது.. காணச் சகிக்கவில்லை. உடனே அழைத்துப் போக ஏற்பாடு செய்யுங்கள்!

அர: (அதைக் கேட்டு விட்டு) ஏ... உலகம்!

உலக: அரசே!

அர: யார் அது? அந்தப்பிராணி யார்?

உலக: அவர்தான்பிரபு, நமது குருநாதர்.

அர: குரு - நாதர் - ஓ - குரு என்ற பெண்மணிக்கு இவர் நாதரோ? - அது என்னடா, பெண்ணுக்குப் போய் குரு என்று பெயர் வைத்திருக்கிறார்கள்?

உல: இல்லை பிரபு - குருநாதர் என்றால் பெரிய மகான்!

அர: ஆங்! (ஆச்சரியமாக) யானை பெரிசு!

உல: இல்லை சிறந்த பக்திமான்!

அர: யாருடா இவன்? யானையா என்று கேட்டால் மான் என்கிறான் - மான்! ஏ மானே! (குருநாதரிடம் போய்) வள்ளிமானே! ஒரு புள்ளிமான் - (என்று கேலியாகப் பாடுதல்) ஆகா - அமைச்சரிடம் ராஜ்யத்தை ஒப்புவித்து விட்டு காட்டுக்கல்லவா

வந்திருக்கிறேன் - அப்படியானால் இந்த மான் - வள்ளி மானுமல்ல, புள்ளிமானுமல்ல, இது மாயமான் மாரீச மான்! இது ராமா! ராமா! என்று கத்தும்- (உலகப்பனைப் பார்த்து) ஏ லக்ஷ்மணா! பக்தியோடு கத்துகிறது என்று ஏமாந்து விடாதே! எடு வில்லை! தொடு கணையை!

(என்று வாளை உருவி உலகப்பனிடம் நீட்ட, உலகப்பன் வாளைத் தொடுகிறான்.)

ஏய் தொடு கணையை, என்றால், கணையைத் தொடுகிறாயா நீ! தொடுக்க வேண்டும், என்றுஅர்த்தமடா, முட்டாளே!

அரி: (தயவாக) அரசே! குருவைக் கேலி செய்யாதீர்கள்! அவாள் பெரியவாள்!

அர: என்னிடமிருப்பது என்ன; சின்ன வாளா? இதுவும் பெரிய வாள் தான்! அதுவும் போர்வாள்! யார் தடுத்தாலும் பாயக் கூடிய போர் வாள்! (வாளை சுழற்றிக் கொண்டே ஆடியபடி) 'கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்று வருகுது'' என்று பாடுகிறான்.

குரு: அமைச்சரே! மன்னர் பிரானை இப்படி வேடிக்கை பார்ப்பது வேதனையாக இல்லையா? உடனே அழைத்துச் செல்லுங்கள் - ஏய் உலகப்பா! என்ன செய்கிறாய்?

அர: உலகப்பனா ஆடுகின்றாய் உலகப்பா! ஆர்ப்பாட்டக்காரா இதை ஒப்பாரப்பா! (சீமான் சபையைப் பார்த்து) தேடப்பா ஒரு வழியை என்று சொன்னேன் - இந்த செகத்தப்பன் யோசித்து சித்தம் சோர்ந்தான்! கம்பீரமாக) இந்நிலையில் இருப்பதனால் உலகப்பா - நீ புதுக்கணக்குப் போட்டு விடு! பொருளையெல்லாம் பொதுவாக எல்லார்க்கும் குத்தகை செய்!

(இந்த சமயம் அமைச்சரும், குருநாதரும் அரசனை அழைத்துச் செல்லும்படி சைகை காண்பிக்கின்றனர்.)

உலக: வாருங்கள் பிரபோ - உடனே சென்று பொருளை யெல்லாம் பொதுவாக்க, குத்தகை செய்து விடுவோம்.

(அரசனை அழைத்துப் போக ஒரு வீரன் வணங்கி நிற்கிறான். அவனைப் பார்த்தவுடன் அரசன் நடுங்குகிறான்.)

உலக: பயப்படாதீர்கள் பிரபு! இவர் உங்கள் வீரன்!

அர: என்னது? பயமா? நானா பயப்படுகிறேன்? (குருநாதரை ஜாடை காட்டி) இந்த சிறு நரியைக் கண்டு இந்த சிங்கம் அஞ்சுவதா?

''அச்சமில்லை, அச்சமில்லை, அச்சமென்பதில்லையே
உச்சி மீது வானிடிந்து வீழ்ந்த போதும் அச்சமென்பதில்லையே!'

(என்று உரத்த குரலில் பாட, உலகப்பனும் வீரனும் அரசனை உள்ளே இழுத்துச் செல்கின்றனர். கூடியிருப்போரெல்லாம் 'இச்' சென்ற பரிதாப ஒலியை எழுப்புகின்றனர்.)

காட்சி 24

(பைத்தியம் போல நடித்து அரசன் உலகப்பனால் அழைத்துச் செல்லப்பட்டபின்)

குரு: மாண்புமிக்க சீமான்களே! பகவானின் அருள் பெற்ற செல்வர்களே! இந்த மணிமகுடபுரி சாம்ராஜ்யத்தில் பாவச் செயல்களின் தொகை பெருகி விட்டது! காவி அணிந்தோரைத் தூற்றி வாழும் கூட்டமும் அதிகரித்து விட்டது! அதன் பலனைத் தான் சற்று முன்னர் நாம் இந்தத் திருச்சபையிலே கண்ணால் கண்டோம்!

மக்கள் செய்யும் பாவம், மன்னவன் தலையில் விழுகிறது. மக்கள் தலைவனன்றோ, மன்னவன்! எம்பெருமானைப் பிடித்த கோபாக்கினி தான் கோவேந்தனின் பித்த முதிர்ச்சிக்குக் காரணம். இனியும் இந்த ராஜ்யத்தில் நாத்திகம் பேசுவோரையும் நாத்தழும்பேறியோரையும் அனுமதித்துக் கொண்டேயிருந்தால், இப்போது மன்னனைப் பிடித்திருக்கிற இந்த நோய் பின்னர் ஒவ்வொரு சீமானையும் பிடித்து வாட்டும் - அதன் பிறகு ஒவ்வொரு பிரஜையையும் பிடித்து வருத்தும்! அவ்வளவு ஏன்? ஆண்டவனே, திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுளாக மாறி மணிமகுடபுரி சாம்ராஜ்யத்தையே அழித்து விடுவார் - என்னைத் தவிர!

சீமான் 1: உண்மைதான் - குருநாதர் சொல்வது உண்மைதான்! கோயில் கட்ட உடனே கல் நாட்டு விழா செய்து, ஆண்டவன் கோபத்தை தணிக்க வேண்டும்!

சீமான் 2: ஆமாம்! அதை நான் ஆமோதிக்கிறேன்.

எல்லாச் சீமான்களும்: எல்லோருமே ஆமோதிக்கிறோம்!

குரு: மார்கழி ஏழாம் நாள் - என் மனதுக்குப் பிடித்தமான நல்ல நாள்! அன்றைய தினம் கோயில் திருப்பணிக்குக் கல் நாட்டு விழா!

சீமா: மிகவும் சரி! கல்நாட்டு விழாவை அரசரே வந்து நடத்தி வைக்க வேண்டும்.

குரு: சந்தோஷம் - அரசரையே கல் நாட்டு விழாவுக்கு அழைத்து வருகிறோம். ஆனால் அதற்குள் அவர் நோய் தீர வேண்டும்! சீமான்களே! இந்த நாடடுக்கு ஒரு குறையும் வராமல் காப்பதற்கு, இன்றிரவு நான் என் அந்தராத்மாவை ஆண்டவனுடன் பேச அனுமதிப்பதென்று முடிவு செய்து விட்டேன். ஆண்டவன் என்னுடன் விரைவில் வந்து பேசுவதற்காக மணிமகுடபுரியின் க்ஷேமலாபத்தில் அக்கரை கொண்ட நீங்கள் ஒவ்வொருவரும் இப்போது இச்சபையில் அவன் திருநாமத்தைத் தோத்திரம் செய்ய வேண்டுகிறேன்!

அமை: ஏகமனதாக எல்லாத் தீர்மானங்களும் நிறைவேறுகின்றன. இப்போது பிரார்த்தனை ஆரம்பமாகலாம்!

(எல்லா சீமான்களும் பஜனை செய்கிறார்கள்)

காட்சி 25

(அமைச்சர், அரிஹரநாதர், குருநாதர்-மூவரும் இருக்கிறார்கள்)

அமை: எப்படி என் யோசனை! அசல் பைத்தியம் போலவே நடிக்கச் செய்து விட்டேன், பார்த்தீர்களா!

குரு: அபாரம் அமைச்சரே! அவன் மாத்திரம் நமக்கு சமயத்தில் கிடைக்கா விட்டால், சீமான்கள் சபை நம் மூவர் மீதும் சந்தேகப்பட்டிருக்கும்!

அரி: ஆமாம் - சந்தேகம் வலுத்திருந்தால், மதபீடம்...

(குருவைக் காட்டி)

அதிகார பீடம்...

(மந்திரியைக் காட்டி)

பிரச்சார பீடம்!

(தன்னைக் காட்டி)

மூன்று பீடங்களும் ஆடிப் போயிருக்குமே!

அமை: இந்த மூன்று பீடங்களும் ஆடாமல் இருக்க என் மூளை இப்போது பலமாக வேலை செய்கிறது!

குரு: இந்தப் பொம்மை ராஜனையும் அதிக நாள் நம்ப முடியாது ஸ்வாமி! அவனை எப்படியாவது அரசனைப் போல் கையெழுத்துப் போட வைத்து, அதிகாரமனைத்தையும் என் பெயருக்கு மாற்றிக் கொள்ள வேண்டும்!

குரு: என்ன?

(மனக் குழப்பத்தை வெளிக்காட்டாமல்)

அமை: ஆமாம் - அப்போதுதான் நம் இஷ்டப்படி நடக்க முடியும். அதற்கு சரியான சந்தர்ப்பம் வாய்க்கப் போகிறது - அதாவது கல்நாட்டு விழாவுக்கு அரசன் வரப் போகிறான் என்று நாட்டு மக்கள் எல்லோரும் திரண்டு வருவார்கள். அவர்களுக்கு என்ன தெரியும் - இவன் பித்தன் என்று! அவர்களுக்கு நேராகவே, அதிகாரங்களை என் பெயருக்கு மாற்றித் தருவதாக,அவனைச் சொல்ல வைக்கப் போகிறேன் - எப்படி குருநாதரே, யோசனை?

குரு: பேஷான யோசனை!

(மனக்கசப்பை வெளியிடாமல்)

அமை: ஆகவே, அரிஹரநாதரே! நமது பத்திரிகையில் "அரசனின் பைத்தியம், குருநாதர் அருளால் நீங்கிவிட்டது" என்று ஒரு செய்தி போடும்! அப்போதுதான் அரசன் சுய சிந்தையோடு அதிகாரங்களை என் பெயருக்கு மாற்றுகிறான் என்று மக்கள் நம்புவார்கள்!

அரி: ஆமாம்! ஆமாம்!

(கசப்புடன்)

அமை: அப்படியானால் நான் ஆகவேண்டியதைக் கவனிக்கிறேன்! வருகிறேன் குருநாத்!

குரு: சரி, அமைச்சரே, சந்தோஷம் உண்டாகட்டும்!

(அமைச்சர் போகிறார். அமைச்சர் போனதும் குருநாதரும் அரிஹரநாதரும் ஒருவருக்கொருவர் பார்த்துக் கொள்கிறார்கள்.)

குரு: அரிஹரநாதரே - கேட்டீரா!

அரி: கேட்டேன், ஸ்வாமி! கேட்டேன்.

குரு: நமது ஆதரவையும் பெருமையையும் அஸ்திவாரமாக அமைத்து அதன் மீது அதிகார மாளிகையைக் கட்டப் போகிறானாம் அமைச்சன் - அனுமதிக்கலாமா நாம்?

அரி: கூடாது! கூடாது!!

குரு: அந்தப் பொம்மை ராஜாவை வைத்துக் கொண்டு நம் காலேந்திக் கிடந்த குணசீலன், கோலேந்தப் போகிறான்! இதைத் தடுக்க குறுக்கு வழி காண வேண்டும்?!

அரி: ஆமாம் ஸ்வாமி!

குரு: கொலை! கொலை!! கொலையைத் தவிர வேறு வழியில்லை! அந்தக் கோணங்கிப் பயல் ராஜா வேஷத்தோடு கோயில் கல் நாட்டு விழாவுக்கு வரும்போது - கொலை செய்துவிட வேண்டும் அவனை! எந்தப் போலி அரசனின் வாய் மூலம் அதிகாரத்தைக் கைப்பற்ற எண்ணுகிறானோ அமைச்சன், அந்தப்

போலி அரசனைக் கொலை செய்து விட வேண்டும் - என்ன சொல்லுகிறீர்?

அரி: அரசனைக் கொல்வது மட்டுமல்ல; அமைச்சர் குணசீலர்தான் அவனை அரசனாக நடிக்கச் செய்தார் என்ற குற்றச்சாட்டை குணசீலர் மீது சுமத்தி.அவரையும் ஒழித்து விட வேண்டும். பிறகு மணிமகுடத்தை மதபீடம் ஆளும்!

குரு: அதுவே சரி! அரசனைக் கொல்ல ஒரு ஆள் - ஒரு கூரிய வாள்! இரண்டும் தயார் செய்வோம்! குணசீலா! கூர்மை கெட்ட அமைச்சனே! என்னை ஏமாற்றி, நீ நாடாளப் பார்க்கிறாயா? எத்தனுக்கு எத்தன் - இடையே ஒருபித்தன்! பார்க்கிறேன், நீ ஜெயிக்கிறாயா - நான் ஜெயிக்கிறேனா என்று! ஹ.....! மதமென்னும் பேயிடம் வால் நீட்டும் வஞ்சகனே! மண்டை கனத்த மந்திரியே! பார்ப்போமடா யார் ஜெயிக்கப் போகிறார்கள் என்று பார்ப்போம்! யார் ஜெயிக்கிறார்கள் என்று!

அரி: ஜெபமாலை தோற்றதாக சரித்திரமே கிடையாது ஸ்வாமி!

குரு: ஜெபமாலை - தண்டு கமண்டலம் - பக்திப் பொருள்கள் மட்டுமல்ல, பத்திரிகாசிரியரே - இதோ பாரும்! அவை பழிவாங்கும் படைக்கலன்கள் கூட - இதோ பாரும்!

(தண்டுவைக் கழற்ற அதில் ஒரு கூரிய கத்தி இருக்கிறது.)

அரி: ஆகா - வாள் தயார்! இனி ஆள்தான் தேவை - நம் சதியை வெற்றிகரமாக முடிக்க!

குரு: ஹ..ஹ...ஹ! அதுவும் விரைவிலே தயார்!

காட்சி 26

(அரசன் தனியிடம்; அரசன் பணிவாக நிற்கிறான். அமைச்சர் உட்கார்ந்திருக்கிறான்.)

அமை: சொன்னதெல்லாம் ஞாபகமிருக்கட்டும். மார்கழி ஏழாம் நாள் - கல் நாட்டு விழா மறந்து விடாதே!

அர: சரி ப்ரபூ! நீங்கள் சொன்னபடியே, உங்ககிட்ட ஜனங்களுக்கு நேரா அதிகாரத்தை ஒப்புச்சி விடுறேனுங்க!

அமை: சரி! ஜாக்கிரதை!

(அமைச்சர் பேசிக் கொண்டிருந்து விட்டுப் போகிறார். போனதும் அரசன் கம்பீரமாக அமர்ந்தபடி, சிந்தனையில் ஆழ்ந்திருக்கிறான். உலகப்பன் பழரசம் கொண்டு வந்து தருகிறான்.)

அர: (அதை வாங்கியபடி) உம் நான் பழரசம் அருந்துகிறேன். அதோ கொடிக்கால் நகரத்து மக்கள் குழந்தை குட்டிகளோடு கஞ்சிகாய்ச்சி குடிப்பதற்கும் இடமில்லாமல் தவிக்கிற காட்சி தெரிகிறது!

உல: அந்தக் கஷ்டங்களைப் போக்கத்தானே இவ்வளவு கஷ்டப்படுகிறீர்கள்! களைப்பை நீக்கிக் கொள்ள, கொஞ்சம் சாப்பிடுங்கள் பிரபூ!

அர: (அருந்தி விட்டு) உலகப்பா - ஒரே உப்பாக இருக்கிறது பழரசம்!

உலக: உப்பா? அய்யோ! திராட்டை பழம் புளிக்குமே தவிர - உப்புக் கரிக்காதே!

அர: உப்புதாண்டா உலகப்பா இது! இது பழரசம் இல்லையடா! பதை பதைக்கும் ஏழைகள் வடித்த கண்ணீரடா! கண்ணீரைச் சுவைத்ததில்லை நீ; கல்யாணமாகாதவனல்லவா? சுவைத்திருக்க மாட்டாய்? கன்னத்தோடு கன்னம் வைத்து, காதலிகள் கட்டிலறையில் அழுதிடும் போது இதழோரத்தில் வழிந்தோடும் அந்தக் கண்ணீரே இனிக்காது, கரிக்கும் என்கிறபோது, கட்டாந்தரையிலே, தொட்டால் எலும்பு குத்தும் பிள்ளைகள் அணைத்தபடி, கிடக்கும் ஏழைத் தாய்கள் அழுத கண்ணீரா இனிக்கப் போகிறது? இல்லை - இல்லை - அதோ,

கொடிக்கால் நகரத்து மக்கள் கோவெனக் கதறுகிறார்கள்! என் கோட்டைச் சுவர்களைத் துளைக்கிறது அந்த ஒலி! அதோ கேட்கிறது - நீயும் கேள் அந்த ஒலியை! கேள், கேள், உலகப்பா கேள்!

(பழரசத்தை வீசுதல்)

உல: அரசே நிம்மதியாயிருங்கள்!

அர: நிம்மதி ஏதடா எனக்கு? ஏது எனக்கு நிம்மதி? ஒரு பக்கமா - இரு பக்கமா? எத்தனை பக்கத்திலிருந்து தாக்குதல்? தாக்குதல்என்றால், தரைப்படையும், கடற்படையும் கொண்டு தார் புனைந்த வேந்தர்கள் முடிபறிக்க முற்றுகையிட்டு விட்டார்கள்- என்ற சேதிகள் கோட்டைக்குப் பறந்து வருமே. அந்தத் தாக்குதலா? தாராளமாக வரவேற்றிருப்பேனே அந்தத் தாக்குதலை! வேலும், வாளுமில்லை, தோளும் தோளும் மோதிக் கொள்ள வேண்டும் என்று தூது விட்டானே; போர் முறையைக் கூறி - புலி நாட்டு வேந்தன் - கிலி கொண்டானா? எதிர்க்க வலிவுண்டு - வாராய் என வரவேற்பு இதழ் அனுப்பினே னேயல்லாமல், தாக்குதல் கேட்டுப் போக்கிடம் தேடவில்லையே நான்? உறங்கும் நேரம் ஊரம் அடங்கிய வேளை! உருவிய வாளுடன் ஓராயிரம் வீரர்கள் கோட்டைக்குள் நுழைந்தார்களே; கொடிமரத்தை நெருங்கினார்களே; அடியோடு அதைச் சாய்த்துவிட; அப்போதும் நூறு பேரோடு எதிர்த்து அவர்களைக் கூறு போடவில்லையா? அவையெல்லாம் தாக்குதல் அல்ல உலகப்பா - அவை எனக்கு வீர விளையாட்டுக்கள். வேலினும் கூர்மையுடைய - வாளினும் பளபளப்பு மிக்க - வேதம், சாஸ்திரம், புராணம், என்ற வேலிகளை அமைத்துக் கொண்டு, மதம் தாக்குகிறது என்னை? மண்டையைப் பிளக்கிறது உலகப்பா - மண்டையைப் பிளக்கிறது! மந்திரி பீடமோ, என்னை சாவுக்குழியிலே வைத்து, பூவும் பொரியும் தெளிக்க ஆசைப்படுகிறது. மக்களுக்காக உள்ள பிரச்சார சாதனம் 'மக்கள் தொண்டன்' மயக்கமூட்டும் திருநாமம் - மக்களை ஆடுகளாய் மாற்றி, என் மனப் புண்ணில் தணல் அள்ளிப் போடுகிறது! மதம் -

ஏடு - மமதை பிடித்த அதிகாரம் - இவை மூன்றினாலும் தாக்கப்படும் மக்களோ இத்தனைக்கும் காரணம் நான்தான் என்று சபிக்கிறார்கள்! சாம்பலாகப் போகட்டும் இந்த சாம்ராஜ்யம் என்று சாபமிடுகிறார்கள்! அவர்களின் குரலை எதிரொலிக்கும் மக்கள் மன்றத்தினரோ - அடிப்படைக் காரணங்களை அகற்றிவிட என்னாலால் சீமான் சபை சொன்னபடி நான் ஆட வேண்டியவன் என்பதையும் கருதாமல், சீறுகிறார்கள் - என்மீது பாய்கிறார்கள் - அந்த சினவேங்கைப் புலிக் கூட்டத்தின் தாக்குதலுக்கும் - இலக்கு நான்தான் உலகப்பா - இலக்கு நான்தான்! மக்களின் தொல்லை நீக்க - என் அதிகாரத்தைப் பயன்படுத்தி, மதவாதியாம் குருநாதரைக் கண்டிப்போமென்றால், அப்போதும் இந்த மக்கள் என்னை எதிர்த்தே தீருவார்கள்! ''அபச்சாரம் - ஆண்டவனின் பிரதிநிதியை அவமானப்படுத்தலாமா?'' என்று அலறுவார்கள்! என்னதான் செய்வேன் - உலகப்பா - இதற்கு என்னதான் செய்வேன்! மக்கள் மன்றத்தைத் தக்கதோர் புரட்சி மன்றமாக மாற்றிடச் சென்றேன். தோல்விதான் - அங்கும் எனக்குத் தோல்விதான் - தொல்லை மேல் - தொல்லை - தோல்வி மேல் தோல்வி - துரோகிகள் வாழுகிறார்கள். துன்பம் படரா வாழ்க்கையின் தொடர்ச்சி கெடாமல்! என் தூய நற்கொள்கைகள் வாழ இடமில்லை! இடமில்லாமலே போய்விடுமா? இந்த ஜகத்தில் கொள்கையுள்ள மனிதன் - குப்பை மேட்டிலும், கோணல் வழி செல்வோன் கோபுரத்திலுந்தான் இருக்க வேண்டுமா? இதை மாற்ற முடியாதா? ஏன் முடியாது? - மக்கள் சமுதாயத்திற்குத் தொண்டு செய்த எத்தனை எத்தனை மாணிக்கங்கள் புதைந்து கிடக்கின்றன- இந்த மண்ணில்! அந்த உத்தமர்களின் பெயரால் - அந்த தியாக சொரூபங்களின் பெயரால் - அந்த வீரத் திருவிளக்குகளின் பெயரால் - உலகப்பா, உனக்குச் சொல்லுகிறேன்; என் உள்ளத்திற்குச் சொல்லிக் கொள்கிறேன் - மணிமகுட புரியின் பிரஜைகளே - உங்களுக்கும் சொல்லுகிறேன் - என் உயிரைப் பணயமாக வைத்தாவது, உன்னத இலட்சியங்களை வெற்றி பெறச் செய்வேன் - வெற்றி - வெற்றி - வெற்றித்தான்!

வீழ்ந்தது மதகுருவின் அட்டகாசம்! அழிந்தது மமதையார் தர்பார்! இன்றோடு ஒழிந்தது இருட்டடிப்புப் பிரச்சார சாதனம்! வெற்றி! வெற்றி!வெற்றி! உலகப்பா...

உல: அரசே

அர: அமைச்சர் சொல்லி விட்டுப் போகிறார் - கொடிக்கால் நகரத்திலே கோயில் கட்ட நான் கல்நாட்டு விழா நடத்த வேண்டு மாம் - விழாவுக்குப் போகிறேன், வந்திருக்கும் மக்களிடத்தில் இந்த வஞ்சகரின் செயல்களை அம்பலப்படுத்துகிறேன்! மணிமகுட புரியை - மக்கள் வசம் ஒப்புவிக்கிறேன்! சரியான சந்தர்ப்பம் - ஜனங்களை சந்திக்கும் சந்தர்ப்பம்! அமைச்சர் நினைத்திருப்பார் - அவருக்கு அதிகாரத்தை ஒப்படைப்பேன் என்று! அல்ல! அல்ல!! நாட்டு மக்களிடத்திலே நாட்டை ஒப்படைக்கிறேன். இந்த நரிகளை நடுத்தெருவில் விரட்டுகிறேன்!! வெற்றி! வெற்றி! வெற்றிகரமான சந்தர்ப்பம்! இதைத் தவற விட்டால் வேறு சந்தர்ப்பம் கிடைக்காது! நடக்கப் போவது கல் நாட்டு விழா அல்ல! புதிய குடி அரசுக்குக் கொடி நாட்டு விழா! கொடி நாட்டு விழா!

காட்சி 27

(தெருவில் கல்நாட்டு விழா பற்றிய பாடலுடன் பக்திக் கூட்டம் போகிறது - அரசர் கல் நாட்டு விழாவுக்கு வரப் போகிறார் என்ற உற்சாகம் அந்தப் பாட்டிலே கலந்திருக்கிறது! கல்நாட்டு விழா பற்றிப் பல இடங்களில் பாடல்.. ஆடல்.. முதலிய உற்சாகக் காட்சிகள்!)

காட்சி 28

(கல்நாட்டு விழாப் பந்தல் - குருநாதர் வருகிறார் - அரிஹர நாதர் அவர் பின்னே வருகிறார். அரசனைக் கொல்ல ஏற்பாடு செய்த துரோகியின் கையிலே பளபளப்பான கத்தி மின்னிக் கொண்டிருக்கிறது - குருநாதர் அவனுக்கு கண்ஜாடை காட்டித்

தைரியமூட்டுகிறார். அவனும் அவரிடம், காரியத்தை வெற்றிகர மாக முடிப்பதாக தலையசைத்துச் சம்மதம் தெரிவிக்கிறான்.)

அப்போது,

''கொடிக்கால் நகரை''

''அழிக்காதே''

(என்ற கோஷமுடன் 'அல்லி, பொன்னழகன் முதலியோர் வருகிறார்கள், தொண்டர்களுடன்.)

குரு: இது என்ன புதிய கூச்சல்?

பொன்: கூச்சல் அல்ல; கொடிக்கால் நகரைப் பாதுகாக்க எழுந்த போர்க்கொடி!

குரு: ஆண்டவனே! உன் அருள்! சிறுவர்களே.. அரசன் கோபத்தைக் கிளறாதீர்கள். குதிரைப் பட்டாளம் அவிழ்த்து விடப்பட்டால்... தூள் தூளாகப் போய்விடுவீர்கள்.

அல்லி: கவலையில்லை.. சாவுக்குத் துணிந்தே வந்திருக்கிறோம்! இதோ-எங்களை சுட்டுக் கொன்று,எங்களது பிணத்தைத் தாண்டிக் கொண்டு பிறகு கல் நாட்டு விழா நடத்தட்டும் உங்கள் அரசன்... உம் தோழர்களே... மறியலைத் தொடங்குங்கள்!

(அனைவரும் படுக்கிறார்கள்.)

அரி: அய்யோ - இது அரசர் வரும் வழி - அநியாயமாய், சாகப் போகிறீர்கள்...

அல்லி: உம்மைப் போல் சாவுக்குப் பயப்படும் ஜாதி அல்ல இது... நீர் ஒதுங்கிக் கொள்ளும்! மணிமகுடபுரியிலே -கோயில் கொள்ளும் ஆண்டவன் அந்த நாட்டு மக்களுக்காக உழைக்கும் எங்களது பிணக் கொலுவைக் காணட்டும்! பிறகு நீங்கள் படைக்கும் பிரசாதத்தை அருந்தட்டும்.

(படுத்திருப்போரைப் பார்த்து - நின்றபடி)

தோழர்களே! அதோ துப்பாக்கி ஏந்திய பட்டாளம் புடைசூழ - துரோகிகள் ஆலவட்டம் சுழற்ற - தோகையர் நடனத்தோடு - தோடுடைய செவியனாம் மணிமாற மகாராஜா கல் நாட்டு விழா நடத்த வருகிறார். முழங்குங்கள் போர் முரசத்தை-

''கொடிக்கால் நகரை''

''அழிக்காதே!''

(கீழேயுள்ளவர் இதுபோல ஒலித்தல்.)

குரு: (அரிஹரநாதரிடம்) இதுவும் நல்லதுதான்! அரசன் செத்ததும், பழியை இவர்கள் மீது போட்டு விடலாம்.

அரி: ஆமாம்! ஆமாம்! எல்லாம் நன்மையாத்தான் முடியுது!

(அரசர் வருகிறார் - ஆடம்பரமாக - அப்போது,குருநாதர் துரோகியிடம் கண் காட்டுதல், அவன், அரசர் மீது பாய்தல், அப்போது அல்லி, அரசனைக் கண்டு, திடீரெனத் துரோகியின் கத்திக்கு நேரே பாய்கிறாள். அவளது தோளிலே பலத்த காயம் அதற்குள் துரோகி ஓடிவிடுகிறான். ஒரேகுழப்பம். அல்லி மயக்கமடைகிறாள். பொன்னழகன் முதலியோர் திடுக்கிடுதல் - குருநாதர் நழுவி விடுகிறார், அரிஹரநாதருடன் - குழப்பம் - துப்பாக்கிப் பிரயோகம் அதிகமாகவே மக்கள் ஓட்டம் - அமைச்சர் குணசீலரும் ஓடிவிடுகிறார்!)

அர: (காவலரிடம்) உம் இவளை என்னுடைய மாளிகைக்குத் தூக்கி வாருங்கள் - உம் உடனே!

(உலகப்பன், காவலர் - அல்லியை தூக்கி செல்லுதல்)

காட்சி 29

(அரசன் மாளிகை - கட்டிலில் அல்லி மயக்கத்தோடு படுத்திருக்கிறாள். கட்டுப் போடப்பட்டிருக்கிறது)

உல: (அரசனிடம்) நல்ல வேளை - காயம் அதிகமில்லை. இவுங்க மாத்திரம் குறுக்கே வராம இருந்திருந்தால் உங்களைக் கொன்றேயிருப்பான், அந்தப் பாவிப்பயல்!

அர: (மெதுவாக) சரி, உலகப்பா! நீ போ! அல்லி இங்கேயிருக்கிறவிஷயம் யாருக்கும் தெரிய வேண்டாம்! அமைச்சர் வந்தால், உடனே என்னிடம் ஓடி வந்து சொல்லு.

உல: அவர் எங்கே வரப் போகிறாரு - வெளியே கிளம்பினால், தன் உயிருக்கு வேட்டு வைத்து விடுவார்களோ என்று வெடவெடத்துப் போயி, வீட்டிலேயே இருப்பாரு!

அர: சரி எதற்கும் வெளியே இரு...

(வெளியே போதல்)

உல: அப்படிச் சொல்லுங்கள் - உங்களுக்கு இடைஞ்சலா நான் ஏன் இங்கு இருக்கப் போகிறேன்! ஆனால், ஒண்ணு மயக்கம் தெளிஞ்ச பிறகு எழுப்புங்க!

அர: குறும்புக்காரா போ.. போ...

(அரசன் உலவிக் கொண்டேயிருக்கிறான். அல்லியைப் பார்த்தபடி - பிறகு ஒரு ஆசனத்தில், யோசித்தபடி உட்காருகிறான். உட்கார்ந்து அவளையே பார்க்கிறான்... அவன், இதய ஒலி...)

அர: ''அல்லி, கண் நிறைந்த கனகவல்லி! மக்கள் மன்றமெனும் பொன் ஆரத்திலே மாணிக்கப் பதக்கமென ஒளிவிடும் புரட்சி ஓவியம், இந்த ஓவியத்தை என் இருதயச் சுவற்றிலே மாட்டி வைத்து அழகு பார்க்க முடியுமே தவிர, கண் பறிக்கும் இந்த சிங்காரச் சித்திரத்தை கன்னத்திலே ஒத்திக் களிப்படைய முடியாது - அவள் என்னைக் காதலிக்கிறாள் - மனப்பூர்வமாக என்னையல்ல -அரசன் மணிமாறனை அல்ல - அவன் கோட்டை கொத்தளங்களை அல்ல - அவள் காதலிப்பது கொள்கை முழங்கும் புதுமைப் பித்தனை; புயலில் சிக்கித் தவிக்கும் அந்த புது மனிதனை - மறைந்து வாழ வேண்டிய அந்த மர்ம ஜீவனை - அவள் காதலிக்கிறாள்... அரண்மனையிலே உலவும் அந்தஸ்து நிறைந்த ராணியாக வாழ விரும்பமாட்டாள். அல்லி - மக்களின் இதய ராணியாகவே வாழுவாள்! அதனால் தான் நானும் அந்தப் புரட்சிக்காரியைக் காதலிக்கிறேன்! அவள், அரசன்

மணிமாறனைக் காதலித்தால், புதுமைப் பித்தன் அவளைக் காதலிக்க மாட்டான், வெறுத்து விடுவான் - அல்லி மணிமாறனைக் காதலிக்க மாட்டாள் - அவள் புரட்சிக்காரி - புரட்சிக்காரி - மக்கள் தலைவி - அதே சமயத்தில் மணிமாறனின் காதலி-மன்னின் காதலி அவள் பகைவனை அவள் விரும்புகிறாள் - நேசிக்கிறாள் - காதலிக்கிறாள் - ஆகவே அவள் அரசனின் காதலி..அரசனின் காதலி... அரசனின் காதலி...

(அவளையே பார்த்து நிற்கிறான் - நினைவு அலைகள்- அரசன் அவளைத் தொட்டு)

அர: அல்லி.. கண்ணேஅல்லி.

(எழுகிறாள்)

அல்லி: யார்?

அர: என்னைத் தெரியவில்லையா அல்லி...?

அல்லி: நீங்களா?

அர: இதயராணி...

அல்லி: இதயராஜா...

அர: கண்மணி...

அல்லி: கண்ணாளா.

அர: அன்பே..

அல்லி: இன்பமே...

(நினைவு அலைகள் ஓய்கின்றன. அல்லி மயக்கம் தெளியாமலே படுத்திருக்கிறாள். அரசன் முன் அமர்ந்திருந்த ஆசனத்திலேயே அமர்ந்திருக்கிறான் - நினைவு அலை ஓய்ந்து எழுகிறான் - அவள் கட்டிலண்டை போகிறான் - அல்லி புரண்டு படுக்கிறாள். முகத்திலே தண்ணீர் தெளிக்கிறான். அல்லி எழுந்து

உட்கார்ந்து அரசனைத் திகைப்புடன் பார்த்து சுற்றும் முற்றும் பார்க்கிறாள்.)

அர: என்ன பார்க்கிறாய்? ஏன் திகைக்கிறாய்? 'கதைகளில் வரும் கதாநாயகிகள் திக்குத் தெரியாத இடத்தில் விடப்படும்போது - நான் எங்கேயிருக்கிறேன் - என்று வசனம் பேசுவார்களே; அதுபோலப் பேசத் தோன்றுகிறதா- நீ எங்கிருக்கிறாய், தெரிகிறதா? இதோ தகதகவென ஜொலிக்கும் மஞ்சள் நிறப்பட்டுத் திரைகள்! அதை அசைத்து விளையாடும் இளந்தென்றல் காற்றை வரவேற்பதற்கென அமைந்த வைரமிழைத்த பலகணி! பலகணி வழியே பார்வை செலுத்தினால் பால் நிலவிலே வர்ணங் காட்டி, சிரிக்கும் ரோஜாக் கொல்லை! முல்லைத் தோட்டம்! அவை தந்த மலர்மஞ்சம்! மயிலாசனம்! மாணிக்க நாற்காலி! மரகதச் சிலைகள்! பாதாமிட்ட பால்! பழம்! ரசம்! ஊண்! தேன்! இவைகளத்தனையும், இது மணிமாற ராஜனின் மாளிகை என்பதை உனக்குச் சொல்லவில்லையா?

அல்லி: அரசே நல்லவேளையாக... இங்கிருக்கும் அத்தனை பொருள்களுக்கும் பேசும் சக்தி கிடையாது...

அர: பேசும் சக்தி இருந்தால்?

அல்லி: விக்கிரமாதித்தன் சிம்மாசனத்துப் பதுமைகள் போல ஒவ்வொன்றும் ஒரு கதை சொல்லும்.

அர: உதாரணமாக...?

அல்லி: ஒன்றல்ல; ஓராயிரம் காட்டமுடியும். அதோ, செத்துப் போன யானையின் எலும்பு- சிலையாக மாறியிருக்கிறது? ஆனால், வர்ண விளக்குகளாய் - வைரப் பதுமைகளாய் சொர்ணச் சிம்மாசனங்களாய் மாறிக் கிடக்கும் இவைகள் எல்லாம் -சாகாத மனிதர்களின் எலும்பு என்பதை மறந்து விடக் கூடாது! மன்னர் பிரானே - யானையாவது தன்னுடைய தந்தத்தை அப்படியே தந்திருக்கிறது உமக்கு? மனிதனுடைய தந்தம் ஓடாகத்

தேய்க்கப்பட்டல்லவா, இந்த உப்பரிகை உயர்ந்திருக்கிறது!

அர: புரியவில்லை, ஒன்றும்!

அல்லி: மன்னிக்கவும் - இது செவிடன் காது சங்கு மகாராஜா! அதிருக்கட்டும் - என்னை இங்கு அழைத்துவர வேண்டிய காரணம்?

அர: மயக்கம்!

அல்லி: என்ன?

அர: எனக்கல்ல!

அல்லி: பிறகு யாருக்கு?

அர: கேட்பவருக்குத்தான்! கத்திக்குத்து - அதன் காரணமாய் மயக்கம் - நடந்ததெல்லாம் நினைவிருக்கிறதல்லவா?

அல்லி: நினைவிருக்கிறது - அதற்காக நான் இங்கு வர வேண்டிய அவசியம்?

அர: மணிமகுடத்தின் மன்னனையே காப்பாற்றியிருக்கிறாய் - அதற்கு நன்றி தெரிவிக்க வேண்டாமா?

அல்லி: தேவையில்லை நன்றி எனக்கு! விடை கொடுங்கள் வருகிறேன்!

அர: பெண்ணே!

அல்லி: என் பெயர் அல்லி!

(திடுக்கிட்டது போல் நடித்து)

அர: அல்லி - அல்லி- அடங்காப்பிடாரி அல்லி!

அல்லி: அவளல்ல - அது அர்ச்சுனன் மனைவி!

அர: தெரியும் - புரட்சிக்காரி அல்லி நீ - பொன்னழகன் கூட்டத்தைச் சேர்ந்தவள் - என்னைக் கொல்ல வந்த சதிக் கூட்டத்திலே ஒருத்தி!

அல்லி: புரட்சிக்காரிதான் - பொன்னழகன் கூட்டத்தைச் சேர்ந்தவள்தான் - ஆனால் சதிகாரி அல்ல!

அர: சதிக்கூட்டத்தின் தலைவி!

அல்: சதிக் கூட்டத் தலைவி, உம்மைச் சாவிலிருந்து மீட்டிருக்க மாட்டாள்!

அர: ஆமாம்! (குழப்பம்) பிறகு கொல்ல வந்தது யார்தான்? உங்கள் கூட்டத்திலே நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் விளைவல்லவா அது!

அல்லி: கொடிக்கால் நகரில் கோயில் கூடாது என்பதுதான் எங்கள் தீர்மானமே தவிர, கொலை வெறித்தாண்டவமல்ல!

அர: அப்படியானால் அரசன் சாகக் கூடாது, என்பதிலே ஏன் அவ்வளவு அக்கரை உனக்கு?

அல்லி: அதுவும் தவறு! அரசன்மீது ஆசையோ - அக்கரையோ அல்ல! அபவாதமும், வீண் பழியும் எங்கள் மன்றத்தைச் சேருமே என்ற அச்சம்தான்! அதனால்தான்!... அதனால்தான் மன்னவரே, பாய்ந்துவந்த கத்தியைத் தடுத்தேன். மணிமகுடம் ஒரு மாபெரிய உத்தமரை இழந்து விடுமே என்ற மனப்பதட்டமல்ல, அதற்குக் காரணம்!

அர: நான் நினைத்ததுதான் தவறு - இரக்க சிந்தை உள்ளவளாக்கும் - மனிதப் பண்புகற்றவளாக்கும் - தியாகப் பெண்களின் வழி நடப்பவளாக்கும் -தேசப்பிதாவுக்கு வந்த ஆபத்தை தடுக்க முனைந்திருக்கிறாள் தியாகவல்லி என்று மகிழ்ந்தேன்! மகிழ்ச்சி, மறைந்து விட்டது. மக்கள் மன்றத்தின் பெருமையை நிலைநிறுத்த, அதற்குக் களங்கம் வராமல் காப்பாற்ற, சுருக்கமாகச் சொன்னால் சுயநலத்தின் காரணமாக என்னைக் காப்பாற்றியிருக்கிறாய் நீ!

அல்லி: இல்லை.. இல்லை.. ராஜபக்தியின் காரணமாகத்தான் இந்தச் செயல் புரிந்தேன் என்று கூறி, செங்கோலேந்தியின் சிரிப்பைப் பரிசாகப் பெற நான் விரும்பவில்லை! எனக்குத் தேவை, மன்னரின் புன்னகை அல்ல! மாநிலத்து மக்கள் அழாமல் இருந்தால், அது ஒன்றே போதும்!

அர: மக்கள் அழாமலிருக்க பிரார்த்தனை செய்கிறாயா?

அல்லி: இல்லை முயற்சிக்கிறேன்!

அர: மனிதன் அழுது கொண்டுதான் பிறக்கிறான், ஏன் தெரியுமா?

அல்லி: சிரித்துக் கொண்டு வாழ்வதற்காக!

அர: எப்போதுமே சிரித்துக் கொண்டிருந்தால், இளிச்சவாயன் என்பார்கள்.

அல்லி: தங்களை யாரும் அதுபோல் சொல்வதில்லையே?

அர: அரசன் அழுவதே இல்லை என்று நினைத்துக் கொண்டிருக்கிறாயா? என் நெஞ்சிலே காதை வைத்துக் கேள் - ஒப்பாரி சத்தம் உன் காதைத் துளைக்கும்!

அல்லி: புது நாடுகள் கிடைக்கவில்லையே என்ற புலம்பலுக்கும் - பழைய கஞ்சிக்கும் வழியில்லையே என்ற கதறலுக்கும் வித்தியாசம் நிறையவுண்டு வேந்தரே!

அர: அதென்னமோ - எல்லோரும் எப்போதும் சிரித்துக் கொண்டேயிருக்க முடியாது என்பது என் சித்தாந்தம்!

அல்லி: நான் மனித சமுதாயம் முழுவதையும் குறிப்பிடுகிறேன்! எல்லாருக்கும் வாழ்வு கிடைத்தால் - வளம் பங்கிடப் பட்டால் - செழிப்பும், சிரிப்பும் ஜெகத்தின் சம சொத்தாகி விடும்!

அர: சம சொத்து - சமமாகப் பங்கிடுவது - இந்த அரண்மனையை இடித்து, ஆளுக்கு ஒரு கல் கொடுக்க வேண்டும் - இல்லையா?

அல்லி: ஏன் மரத்தடியிலே வைத்துக் கன்னத்தில் போட்டுக் கொள்ளவா? அரசே... உடைமை பொது என்றால் அரண்மனையை நொறுக்கி ஆளுக்கொரு கல் கொடுப்பதல்ல! அரண்மனை நிச்சயமாக இருக்கும்... ஆனால் ஒரு மன்னருக்கு மட்டும் நிழல் தரும் இடமாக இருக்காது! நாட்டின் எதிர்கால மன்னர்கள் அனைவருக்கும் பயிற்சியளிக்கும் அறிவுக் கலாசாலையாக இருக்கும்! அரசே.... இடித்து எடுக்க வேண்டிய கல், அரண்மனை!

சுவற்றிலே இல்லை.. அங்கு உலவும் அதிகாரிகளின் இருதயத்திலே இருக்கிறது! அது இடிக்கப்பட வேண்டும்... நொறுக்கப்பட வேண்டும்.. தூள் தூளாக்கப்படவேண்டும்.

(உலகப்பன், அரசனிடம் அமைச்சர் அழைப்பதாக ஜாடை காட்டவே, அரசன் புறப்பட்டு)

அர: சரி.. சரி... ! உன் கொள்கையை என்னுடைய அரச பதவி ஒப்புக் கொள்ளாது.. நான் வருகிறேன்!

அல்லி: நான்?

அர: நீ...?.. நீ இங்கேயே இருக்க வேண்டியது தான்! நாளைய தினம் அல்லது மறுநாள் விசாரணை இருக்கிறது; அது வரை, இது உனக்கு சிறைச்சாலை மாதிரிதான்!

அல்லி: இதுதான் நன்றி தெரிவிக்கும் அழகோ?

அர: அரண்மனைக்காரர்கள் அழகே தனி அழகுதான்! அல்லி - ஜாக்கிரதை கட்டுக்காவல் அதிகம் - தப்பி ஓட முயலாதே - தலைபோய்விடும்.

(அரசன் போகிறான். அல்லி, தனியாக - எதுவும் புரியாமல் உலவுகிறாள் - தரையில் படுக்கிறாள் - விளககை சிறிது அடக்கி விட்டு.)

காட்சி 30

(அரண்மனையில் வேறிடம் அரசன் உலகப்பன் இருவரும்)

அர: என்ன உலகப்பா... ஏன் அதற்குள் அழைத்தாய்; சுவையான கட்டத்தில்.

உல: சுவையான கட்டம் ஒன்றுமில்லையே பிரபு - எட்டி நின்று பேசிக் கொண்டுதானே இருந்தீர்கள்!

அர: எட்டி நின்று பேசினாலும் எட்டிப் பேச்சல்ல - வெட்டிப் பேச்சுமல்ல!

உல: வெல்லக்கட்டிப் பேச்சாக்கும்! அரசே! தாங்கள் இருக்கிறீர்களா, என்று பார்த்து வருமாறு, அமைச்சர் வேலைக்கார வஞ்சியை அனுப்பியிருக்கிறார்!

அர: அவளை ஏன் அனுப்பியிருக்கிறார்?

உல: ஊரிலே குழப்பமாயிருக்கும் போது மந்திரி வெளியே கிளம்புவாரா? அதனால் அவள் வந்திருக்கிறாள்; இவளிடம் முகத்தைக் காட்டுங்கள்! ஏ, வஞ்சி, வஞ்சி, இங்கே வா!

(அவள் வருதல்)

பார்த்துக்க இதோ இருக்காரு! பொம்மை ராஜா!

அர: எங்கம்மா வந்தே? மந்திரி எஜமான் பாத்துட்டு வரச் சொன்னாகளாக்கும்!

வஞ்சி: ஆமாம்!

அர: போய்ச் சொல்லு! இருக்கேன்னு - எஜமானை வெளியே கிளம்ப வேண்டான்னு சொல்லு - ஊர்ல ஏக ரகளையாயிருக்கு.

வஞ்சி: ஆகட்டும்.

அர: சரி நான் போய், தலையிலே ரெண்டு சொம்பு தண்ணி ஊத்திக்கிறேன் - குளிச்சி நாலு நாளாச்சு - உடம்பெல்லாம் அரிக்குது! உடையெல்லாம் மாத்திக்கணும் - இந்த உடை நமக்குலாயக்குப்படுமா?

உல: போயி, குளிங்க, குளிங்க!

(அரசன் போகிறான், உலகப்பன் வஞ்சியிடம் நெருங்குகிறான்.)

வஞ்சி: சரி, சரி? என்னைப் பார்த்து ஒன்றும் சிரிக்கவும் வேண்டாம்- என் மனதை எரிக்கவும் வேண்டாம்!

உல: உன் மனதை எரிக்கிறேனா? அது என்ன அடுப்பா? அல்லது விறகா? நான் எரிப்பதற்கு!

வஞ்சி: நான் எவ்வளவு கவலையோடு இருக்கிறேன்! அதைப்பற்றி அக்கரை கொஞ்சமாவது இருக்கிறதா?

உல: அக்கரையில்லாமலில்லை அழகீ - இக்கை யிலே சிறிது இடைஞ்சல் - அவ்வளவுதான்!

வஞ்சி: சக்கரை போலப் பேசி விட்டால் போதுமாக்கும்?

உல: சிக்கலை வளர்க்காதே - சீக்கிரம் செய்தியைச் சொல்...

வஞ்சி: நேற்று இரவு தோட்டத்து வாசலிலே காத்துக் காத்துக் காலும் ஒடிந்து விட்டது - கண்ணும் பூத்து விட்டது.

உல: ஆ - கால் ஒடிந்தது -கண் பூத்தது, ஐயோ அப்படியானால் நடக்கவும் முடியாது - பார்க்கவும் முடியாதே -வஞ்சீ கண்ணிலே பூ விழுகிற வியாதியை முற்றவிடக் கூடாது - பிறகு பார்வையே பட்டுப் போய்விடும்!

வஞ்சி: கேலி செய்கிறீர் - தாலி கட்டப் போகும் காதலனுக்காக, நான் அந்த வேலி ஓரத்திலே தவித்து நின்றது கடவுளுக்கு மட்டுந்தான் தெரியும்.

உல: அய்யோ - கடவுளுக்குத் தெரிந்தால் சும்மாயிருக்க மாட்டாரே! கண்ணன் அவதாரத்தில் அங்கு வந்திருப்பாரே?

வஞ்சி: அப்படி வந்திருந்தாலும் பரவாயில்லையே...

உல: என்ன?

வஞ்சி: அவரையே உம்மிடம் தூது அனுப்பியிருப்பேன்!

உல: அதானே பார்த்தேன்! அர்ச்சுனனுக்காகத் தூது சென்ற ஆபத்பாந்தவராயிற்றே... அவர்! கண்ணே வஞ்சி.. கவலையை விடு.. (அருகே சென்று)

வஞ்சி: ஊஹூம்... என்னைத் தொடவேண்டாம்?

உல: அடத் 'தேடி வந்த வஞ்சி மானே.. மோடி செய்யாதே வீணே' என்று பாடட்டுமா?

வஞ்சி: பாடலால் ஊடல் தீருமா?

உல: ஆடலால்?

வஞ்சி: ஊஹூம்

உல: கூடலால்

(வஞ்சி கண்ணை முடிக் கொண்டு சிரிக்கிறாள்.)

உல: ஆகா விரல் இடுக்கின் வழியே, விழியைச் செலுத்தும் வெண்முத்துச் சிரிப்புக்காரி, சிங்காரி- ஒய்யாரி எங்கே - செந்தாமரை போல் சிவந்திருக்கும் உன் உள்ளங்கைகளை என்னிடம் கொடு!

(கையை எடுத்தல், முகத்தை வேறு பக்கம் திருப்புகிறாள் வஞ்சி.)

உல: முகத்தைத் திருப்பு! (திரும்புகிறாள்) ஆகா கூந்தல் போன்ற கூந்தல்! புருவம் போன்ற புருவம்! கண் போன்ற கண்கள்! முகம் போன்ற முகம்!

வஞ்சி: இது என்ன புது வர்ணனை!

உல: இதுதான் இயற்கை வர்ணனை - வில் போன்ற புருவம் - அம்பு போன்ற கண்கள் - கேடயம் போன்ற முகம் - என்றெல்லாம் சொல்லி, முகத்தையே ஒரு ஆயுதச் சாலையாக வர்ணிக்கிற வேலை எனக்குப் பிடிக்காது!

வஞ்சி: இப்படியெல்லாம் பேசிப் பேசி- எனக்கு மயக்கத்தை அதிகமாக்குகிறாய்... உன்னைக் கண்டதும் உச்சந் தலையிலே பாம்பு கடித்ததுபோல் இருக்கிறது எனக்கு?

உல: அய்யோ! அவ்வளவு விஷமா?

வஞ்சி: இல்லை - அவ்வளவு மயக்கம் - நீ மயக்கமூட்டும் பாம்பாகவும் இருக்கிறாய் - விஷத்தை இறக்கும் மந்திரவாதி யாகவும் இருக்கிறாய்!

உல: ஆகா புதிய முறையில் காதல் பாஷை பேசும் என் கற்கண்டே! என் பூச்செண்டே!

வஞ்சி: பார்த்தாயா! கற்கண்டு, பூச்செண்டு - கரைவதைப் பற்றியும் கசங்குவதைப் பற்றியும் பேச ஆரம்பித்து விட்டாய்! பழைய வர்ணனை!

உல: சரி, கரையாத கற்கண்டே - கசங்காத பூச்செண்டே திருத்தம் போதுமா? தேனே! (பெருமூச்சுடன்)

வஞ்சி: (பெருமூச்சுடன்) என்னால் நிற்க முடியவில்லை. நான் எங்கேயோ போய்க் கொண்டிருக்கிறேன் கண்ணாளா!

உல: ஆங்.. எங்கே போகிறாய்? வஞ்சி! எங்கே போகிறாய்?

வஞ்சி: (மயங்கிச் சாய்ந்தபடி) இன்பலோகம் போகிறேன்!

உல: இதோ, நானும் வந்துவிட்டேன்! என்னையும் அழைத்துப்போ! ஆணோ, பெண்ணோ, தனியாப்போனால் - இன்பலோகத்துக்கு அனுமதிச் சீட்டு கிடைக்காது...

(அவள் விழுகிறாள் மயங்கி.)

உல: (தூக்கிக் கொண்டு) அய்யோ - இன்பலோகப் பிரயாணம் ரொம்ப கனமா இருக்கே!

காட்சி 31

(அரண்மனையில் அல்லி தூக்கம் வராமல் படுத்திருக்கிறாள். அப்போது புதுமைப்பித்தன் அங்கு வந்து, விளக்கை சிறிது தூண்டுதல் - அல்லி திடுக்கிட்டு எழுதல்.)

அல்லி: யார்?

(புதுமைப்பித்தன் ஓடி வந்து அவள் வாயைப் பொத்தி)

புது: ஸ்.. சப்தம் போடாதே..

(வாயைப் பொத்தியிருக்கும் அவன் கையை,அல்லி, மெதுவாக ரசித்தபடி எடுக்கிறாள்.)

புது: அல்லி- இதுதான் சமயம் - வா அரண்மனையை விட்டு ஓடிவிடலாம்.

அல்லி: நீங்கள் எப்படி வந்தீர்கள்?

புது: அதெல்லாம் பிறகு சொல்லுகிறேன்... புறப்படு!

அல்லி: காவலர்கள் அதிகமாயிற்றே?

புது: கவலைப்படாதே! அரசனும் தூங்குகிறான் - அரண்மனையும் தூங்குகிறது. விழித்துக்கொண்டிருப்பவர்கள் நாம் இருவரும்தான்! வா...வா!!

(அவள் கையைப்பிடித்து அழைத்துச் செல்லுதல்.)

அல்லி: தப்பி ஓடுவது...

புது: (சந்தேகமாய்) குற்றந்தான்! ஆனாலும் நாளைக்குக் கொலைக் குற்றத்திலிருந்து நீ தப்பிக்க வேண்டாமா? சீக்கிரம் வா.. உம்...

(இருவரும் வெளியேறுதல்.)

காட்சி 32

(தோட்டம் – அல்லியும் புதுமைப்பித்தனும் வருதல் - அல்லி தப்பி விட்டதை நினைத்துப் பெருமூச்சு விடுதல்)

அல்லி: அப்பாடா தப்பித்தோம்! யாருடைய கையிலாவது சிக்கியிருந்தால்...

புது: இதற்கெல்லாம் பயப்படலாமா? செம்படவர்கள் கடல் அலைக்குப் பயந்தால்?

அல்லி: என்ன இருந்தாலும் உங்களுக்குத் துணிவு அதிகம்! இரவு நேரத்தில் அரண்மனைக்குள்ளே நுழைந்து - அதிருக்கட்டும். நான் அங்கேயிருப்பது உங்களுக்கு எப்படித் தெரியும்?

புது: (சமாளித்து) தெரியாதா? நான்தானே உன்னை... ம்.. ம்.. தொடர்ந்து கொண்டேயிருக்கிறேன். கல் நாட்டு விழாவில் குழப்பம் ஏற்பட்டதும் மந்திரி முதலியோர் ஓடிவிட்டனர்! அரசன், உன்னைத் தூக்கிக் கொண்டு அரண்மனைக்கு வரச் சொன்னான் அதிருக்கட்டும்; அல்லி - நீ அரசனைக் காப்பாற்ற வேண்டிய அவசியம் என்ன வந்தது?

அல்லி: என்னமோ, எனக்கே தெரியவில்லை! அரசனது முகத்தைப் பார்த்ததுமே, எனக்கு ஏதோ ஒரு வித உணர்ச்சி

ஏற்பட்டது. மின்னல் போல மறுகணம் அவர் மீது கத்தி பாய்ந்தது; நான் என்னை அறியாமலே தடுத்து விட்டேன். அதுவும் நல்லதாய்த்தான் போயிற்று - அரசன் மாண்டிருந்தால் - பழி, மக்கள் மன்றத்தின் மீதல்லவா விழும்!

புது: ஆமாம்; ஆனால் ஒன்று! பொன்னழகன் முதலியோருக்கு நீ செய்த காரியம் பிடிக்காதென்றே நினைக்கிறேன்.

அல்லி: பிடிக்கா விட்டாலும் - மக்கள் மன்றத்திற்கு ஆபத்து வரக் கூடாது என்பதிலே அவர்களுக்கும் அக்கரை இருக்கிறதல்லவா? அதனால் என் மீது குற்றம் சாட்ட மாட்டார்கள்!

புது: சரி, அல்லி! நான் வருகிறேன்! நீயும் புறப்படு!

அல்லி: எங்கே போகிறீர்கள்? ஆமாம் நீங்க இப்போது எங்கேயிருக்கிறீர்கள்? என்ன செய்கிறீர்கள்?

புது: இப்போது, இங்கே- உன்னுடன் பேசிக் கொண்டிருக்கிறேன், இங்கிருந்து எங்கே போவேனோ தெரியாது?

அல்லி: நங்கள் எதிர்காலத் திட்டங்கள்...?

புது: எத்தனையோ உண்டு. மணிமகுடத்துக்கு நான் தான் சொந்தக்காரன் என்பது உனக்குத் தெரியுமா, அல்லி!

அல்லி: எந்த மணிமகுடத்துக்கு

புது: மணிமகுடம் பத்திரிகைக்கு! நாட்டுக்கு அல்ல! இப்போதைய எனது முயற்சி அதுதான்! ஏட்டின் மூலம் நாட்டு மக்களின் மனதைப் பண்படுத்தலாமென்ற நம்பிக்கை எனக்கு நிறைய இருக்கிறது - அல்லி! என்னைப் பற்றிப் பொன்னழகனுக்கு என்ன அபிப்ராயம்!

அல்லி: அவர், உங்கள் மீது அளவு கடந்த பிரியம் வைத்திருக்கிறார் - முதலில் சந்தேகப்பட்டதற்காக அடிக்கடி வருந்துகிறார் - உங்கள் பெயரைச் சொன்னாலே அவருக்குத் தனி ஆனந்தம்!

புது: அப்படியா மிகவும் நன்றி!

அல்லி: உங்களைப் பற்றி பொன்னழகரின் அபிப்பிராயத்தை மட்டும் கேட்டீர்களே; நான் என்ன அபிப்பிராயம் வைத்திருக்கிறேன் என்று கேட்டீர்களா?

புது: கேட்காமலே சில விஷயங்களைப் புரிந்து கொள்ளும் சக்தி உண்டு எனக்கு!

அல்லி: அப்படியானால் உங்களுக்கு மனம் இருக்கிறது!

புது: அது இருப்பதால்தான் மக்களைப் பற்றி நினைக்க முடிகிறது!

அல்லி: அந்த மனதில் - புயல், புகைச்சல், போர், பூகம்பம் இப்படி மாறி மாறி வேதனைகள் மட்டுமே வாட்டமிட்டுக் கொண்டி ராமல் - தீக்குப் பதிலாக தென்றலும் நுழைய வேண்டுமல்லவா?

புது: புரிகிறது எனக்கு! நீரின்றி வரண்டு கிடக்கும் நாக்கிலே ஒரு துளி தேன் விழுந்தால் - அதன் சுவையே வேறு தான் என்கிறாய், இல்லையா?

அல்லி: இருவர் எண்ணமும் ஒன்றாகத்தானிருக்கிறது! ஆனால்...?

புது: யார் முதலில் வெளியிடுவது என்பதிலே சிறிது வேறுபாடு இருக்கிறது!

அல்லி: 'இருந்தது' என்று சொல்லுங்கள்!

புது: அல்லீ!

அல்லி: ஆங்..!

(நாணங் கலந்த தீவிர உணர்ச்சி - புதுமைப் பித்தன் அவளைத் தொடுகிறான். அல்லியும் அவனை நெருங்குகிறாள். இருவரும் சிறிது நேர ஊடல் நிகழ்ச்சிகள்.)

புது: எங்கே, என்னைப் பார்! பாரேன்! ஆகா... கனல் மட்டுமே கிளம்பும் இந்தக் கண்ணிலே, என்று கருதியிருந்தேன்! என்னைக்

கவரும் காந்தமும் உண்டு என்று இப்போது தான் புரிந்து கொண்டேன் கண்ணழகி! அன்று, கொடிக்கால் நகரில் கோடையிடி யென வார்த்தைகளைக் கொட்டிய இந்த இதழ்களிலே, இவ்வளவு மென்மையிருக்கிறது என்று எனக்குத் தெரியாது மின்னலே...!

அல்லி: நீங்கள் மட்டும் என்னவாம்? எரிமலை என்று வர்ணித்தார்கள் உங்களை! எனக்கு நீங்கள் ஆனந்த அருவியாக அல்லவா இருக்கிறீர்கள்? கோடை வெய்யில் என்றார்கள்; குளிர் நிழலுங்கூட என்பதை இப்போதுதானே புரிந்து கொண்டேன்!

புது: அல்லி

அல்லி: என்ன?

புது: நம்முடைய போராட்டத்திற்கு இந்தக் காதல் முட்டுக்கட்டையாக இருந்து விடக் கூடாது!

அல்லி: இத்தனை நாள், நான் தயங்கியதும் அதற்காகத்தான்.

புது : கால் கொப்பளிக்கும் பாலைவனத்திலே பயணம் நடத்துகிறவனுக்கு இளைப்பாற ஒரு பேரீச்சைமர நிழல்- அது போலத்தான் நமக்கு இந்தக் காதல்! இனிமேல் நான் ஓடியாடி உழைக்கும் போதும், மேடையேறி முழங்கும் போதும் அடக்கு முறைகளை உடைக்கும் போதும் - எனக்காக ஒருத்தி இருக்கிறாள்; களைத்த நேரத்தில் களிப்பூட்டுவாள் - களம் சென்று திரும்பினால் காயத்திற்கு மருந்து கட்டுவாள்! கடையனே, மடையனே என்பர் தீயோர் - ''கண்ணாளா'' எனும் ஒரு சொல்லிலே அந்த சோகம் துடைப்பாள் - வேகம் தணிப்பாள் - என்கின்ற இதய எழுச்சி பிறக்கும் - இன்னும் புதிய உற்சாகத்தோடு பணிபுரிவேன்!

அல்லி: களைப்பு தீர்க்க மட்டுமல்ல கண்ணாளா! காயத்திற்கு மருந்து கட்டு மட்டுமல்ல இன்பமே! களத்திற்கு வழியனுப்பும் காரிகையாக இல்லாமல் - அந்தப் போர் முனையில் நீங்கள், இந்தப் போர் முனையில் நான் என்று திட்டம் தீட்டும் துணைவியாகவும் இருப்பேன்!

புது: அல்லி! நாம் இருவரும் புரட்சிக்காரர்களாக மட்டும் இல்லாவிட்டால், போர் முனையிலா இருப்போம் - அரண்மனையிலே நான் - அரிவாள் மனையிலே நீ?

அல்லி: நீங்கள் அரண்மனையிலா?

புது: ஆமாம், அரசனுக்குத் துதிபாடும் ஆஸ்தான கவிஞனாக - அமைச்சருக்குப் பணியாளாக - குருவுக்குச் சீடராக இப்படி ஏதோ ஒரு வேலை கிடைத்திருக்கும் இல்லையா?

(அப்போது காவலர்கள் வரும் ஓசை கேட்கிறது இருவரும் திகைப்பு.)

அல்லி: யாரோ வருகிறார்கள் போலிருக்கிறது?

புது: அரண்மனைக் காவலர்களாயிருக்கும்! சரி அதிக நேரம் தாமதிக்கக் கூடாது - புறப்படு, அல்லி!

அல்லி: நீங்கள்?

புது: நான்? நாளைக்கு சந்திக்கிறேன்!

அல்லி: எங்கே? எப்போது!

புது: இங்கேதான்! இதேநேரத்தில் தான்! உம் போய் விடு! காவலர்கள் வருவது போல் தெரிகிறது!

(இருவரும் தழுவிப் பிரிதல்.)

அல்லி: மறந்து விடாதீர்கள்!

புது: எப்படி மறப்பேன்.

அல்லி: வரட்டுமா?

(போகிறாள்.)

புது: ஆங் - ஒரு சேதி, மறந்து விட்டேனே - அந்தக் கலாராணி எப்படியிருக்கிறாள்?

அல்லி: (போனபடி) கலாராணியா? - நாளைக்குச் சொல்லுகிறேன்.

(புதுமைப் பித்தனும் சுற்றும்முற்றும் பார்க்க, உலகப்பன் வருதல்)

உல: போகலாமா பிரபு?

புது: போகலாம்!

உல: வேஷத்தைக் கலைங்க - இல்லேன்னா அரண்மனைக்குள்ளே நுழைய முடியாது!

(புதுமைப்பித்தனும் வேஷத்தைக் கலைத்தபடி, அரச உடையில் உலகப்பனுடன் புறப்படுகிறான் - அரசன், அல்லி போன பக்கம் திரும்பிப் பார்த்தல்)

உல: வாங்க வாங்க இன்றையோட உலகம் அழியவா போகிறது? வாங்க நாளைக்குப் பாத்துக்கலாம்!

காட்சி 33

(மக்கள் மன்றம் - அதே இரவு - பொன்னழகன் வருத்தமாக உட்கார்ந்திருக்கிறான் - அங்கே கலாராணி வருகிறாள்.)

கலா : இப்படித் தூங்காமல் வருத்தமாகவே உட்கார்ந்திருந்தால் அல்லி வந்து விடுவாளா?

பொன்: கலாராணி - நீ வேறு தொல்லை கொடுக்காதே போய்ப்படு!

கலா: உங்கள் துயரம் தீர்ப்பதையே கடமையாகக் கொண்டிருக்கிறேன் – தொல்லையென்கிறீர்களா?

பொன்: நேரம் தெரியாமல் தொந்தரவு செய்கிறாய்!

கலா: இரவு நேரம் இதைப் பொருத்தமற்ற நேரம் என்று யார்தான் கூறுவார்கள்?

பொன்: இப்போது நீ என்ன சொல்கிறாய்?

கலா: புதிதாக என்ன சொல்லப் போகிறேன்! நான் இங்கு வந்த நாள் முதல், என்னுடைய ஒவ்வொரு அசைவுகளும், உங்களிடம்

சொல்லியிருக்கின்றன - நான் என்ன நினைக்கிறேன் எதையெண்ணி ஏங்குகிறேன் என்பதை யெல்லாம் இன்னுமா சொல்லவேண்டும்?

பொன்: அரண்மனை ஜாதி என்பது சரியாக இருக்கிறது பார்! சேர்ந்து பழகிய ஒரு தோழியைக் காணவில்லை- என்ன ஆனாளோ தெரியவில்லை- நீ இப்போதுதான் காதல் கீதம் பாட வருகிறாய்.

கலா: அல்லிக்காக நான் கவலைப்படாமலா இருக்கிறேன்?

பொன்: உனக்கு எப்படியம்மா கவலை வரும்? அவள் தான் உனக்குப்போட்டி என்று கருதுகிறாயே.

கலா: இல்லையே! அவள் என்னோடு போட்டி போட்டுக் கொண்டு நான் காதலிக்கும் மனிதரையே அவளும் காதலிப்பதாகத் தெரியவில்லையே!

பொன்: உன்னிடம் சொன்னாளா அல்லி!

கலா: சொல்ல வேண்டுமா...? ஒரு பெண் இன்னொரு பெண்ணை சுலபத்தில் புரிந்து கொள்ள முடியும்!

பொன்: தப்புக் கணக்கு! அல்லி என்னுடையவள்! அதை மாற்ற யாராலும் இயலாது!

கலா: அப்படியானால் என்னை வெறுக்கிறீர்கள்! அதுதானே உண்மை!

பொன்: வெறுக்கவில்லை, கலாராணி! ஆனால் என் எண்ணம் முதலில் சென்றது அல்லியின் மீதுதான்! அதை மாற்ற இயலுமா? காதல் இலக்கணத்திலே அப்படி ஒரு விதிவிலக்கு இருக்கிறதா - தயவு செய்து என்னை மன்னித்து விடு. கலா.. போ.. போய்த் தூங்கு! நானும் தூங்கப் போகிறேன்!

(என்று விளக்கை அடக்கி விட்டுப் படுத்துக் கொள்கிறான். கலா போகிறாள். சிறிது நேரத்தில், அல்லிஉள்ளே வந்து விளக்கைத் தூண்டுதல் - பொன்னழகன் திடுக்கிட்டெழுந்து 'அல்லி' என அலறிடுதல்.)

பொன்: அல்லீ! வந்து சேர்ந்தாயா? என்ன நேர்ந்ததோ என்று துடித்துப் போனேன்! அய்யோ காயம் பலந்தானா?

(காயத்தைத் தொட்டுப் பார்க்கிறான் - சகஜமாக கையை அவள் மீது வைக்கிறான்.)

அல்லி: பலமொன்றுமில்லை - தப்பிவிட்டேன்!

பொன்: உன்னைத் தேடி நம் ஆட்களை எல்லாம் அனுப்பியிருக்கிறேன்! ஆமாம்,எங்கே ஒளிந்திருந்தாய்!

அல்லி: அரண்மனையில் அடைக்கப்பட்டேன்!

பொன்: என்ன?

அல்லி: ஆமாம், புதுமைப்பித்தன் வராவிட்டால் தப்பியிருக்க முடியாது!

பொன்: புதுமைப்பித்தனா?

அல்லி: ஆமாம் - அவர்தான் என்னை ரகசியமாகத் தப்ப வைத்தார்!

பொன்: அப்பா! இந்தப் புதுமைப்பித்தன் பெரிய திறமைசாலி தான்! எதிரிகளின் கோட்டைக்குள்ளேயே புகுந்து வெற்றிமாலை சூடுகிறான் மனிதன்.. அல்லி இப்போது புதுமைப்பித்தன் எங்கே? எனக்குப் பார்க்க வேண்டும் போல் இருக்கிறது.

அல்லி: அவருக்குத்தான் ஓய்வே இல்லையாம்! அதோடு நம் மீது ஏற்பட்ட மனச்சங்கடம் இன்னும் தீரவில்லையாம்!

பொன்: பாவம் - நாம் தான் தவறு செய்துவிட்டோம்! நல்ல மனிதனை சந்தேகித்து மக்கள் மன்றத்தின் பலத்தைக் குறைத்துக் கொண்டோம். புரட்சியின் உருவம் என்றால் அது புதுமைத் பித்தனுக்கே சாரும்!

அல்லி: அவர் உங்களையும் அப்படித்தான் சொல்லுகிறார்!

பொன்: அப்படியா? சந்தோஷம் உம் அல்லி மிகவும் களைத்துப் போயிருக்கிறாய், எல்லா விஷயங்களும் காலையில் பேசிக் கொள்வோம் - தூங்கு முதலில்!

அல்லி: உம் சரி! ஆமாம் நான் அரசனைக் காப்பாற்றினேன் என்று ஏதாவது... தவறாக யாராவது?

பொன்: சொன்னார்கள்! அதற்கெல்லாம் நான் சமாதானம் சொல்லி விட்டேன்! மக்கள் மன்றத்தின் மீது பழி வராமல் பாதுகாத்தாள் என்று நமது கவிஞர் ஒரு பிரசங்கமே செய்து விட்டார்!

அல்லி: கவிஞர் எங்கே?

பொன்: அவர் வழக்கம் போல உளவறியப் போயிருக்கிறார்! மீதியைக் காலையில் பேசிக் கொள்ளலாம், தூங்கு அல்லி..! ஏன் இங்கேயே படுக்கையிருக்கிறது... தூங்கேன் நான் வெளியில் படுக்கிறேன் காற்றோட்டமாக..!

(அல்லி படுக்கையில் படுக்கிறாள்)

பொன்: அலட்டிக் கொள்ளாதே! கையை அதிகமாகவும் அசைக்கக் கூடாது! ஓய்வு நிறையத் தேவை...

(என்று கூறியபடி போர்வையை காலில் போட்டு மூடுகிறான் அவளுக்கு.)

பொன்: முகமே வாட்டமாயிருக்கிறது... தலைவலி எதுவும் இல்லையே?

(தொட்டுப் பார்த்தல்)

அல்லி: ஊஹூம்!

பொன்: ம் தூங்கு பேசாமல் தூங்கு!

(அவள் தலைமயிரைக் கோதி விடுகிறான் - இதுபோல் சில அசம்பாவிதங்களான நிகழ்ச்சிகளைக் கண்ட அல்லி எழுந்து)

அல்லி: நான் உள்ளே போய்க் கலாராணிக்கு துணையாகப் படுக்கிறேன், அவள் தனியாக இருப்பாள்...

(என எழுதல்)

பொன்: ஏன் அல்லி... ஏன்?

அல்லி: ஒன்றுமில்லை..நீங்கள் தூங்குங்கள்...

பொன்: அல்லீ (கையைப் பிடித்தல்)

அல்லி: விடுங்கள் என்னை!

(போய்விடுகிறாள்! பொன்னழகன் குழப்பம் - கலாராணி இவைகளையெல்லாம் மறைந்து கவனித்தல்.)

பொன்: (தனக்குள்)சே! அவசரப்பட்டு விட்டேன், மிகவும் அவசரப்பட்டு விட்டேன்!

காட்சி 34

(தெருவில் 'மணிமகுடம்' விற்பனை - மக்கள் வாங்குதல் - 'அரசனைக் கொல்ல முயற்சி - குருநாதரின் சதி - பலிக்கவில்லை' என்று விற்பனையாளன் கூவி விற்கிறான். விற்பவனையும், வாங்குகிறவர்களையும், அரண்மனை அதிகாரிகள் கைதுசெய்கிறார்கள் - அடிக்கிறார்கள்.)

காட்சி 35

(அமைச்சர் வீடு - அரிஹரநாதர், அமைச்சர், குருநாதர் மூவரும்)

அமை: என் மகளை அபகரித்துச் சென்றதும் அந்தக் கூட்டம்தான் - அரசனைக் கொல்ல முயன்றதும் அந்தக் கூட்டம்தான் - அவர்களைச் சும்மா விடக் கூடாது!

அரி: இவ்வளவும் செய்து விட்டு, சதி செய்தது குருநாதர் என்றல்லவா பத்திரிகை வெளியிடுகிறார்கள் - அந்தப் புதுமைப்பித்தனையும் விடக் கூடாது அமைச்சரே!

குரு: நாட்டுக்கும் நமக்கும் கேடு வந்து விட்டது! அப்பனே! ஆண்டவனே!

அமை: அச்சமில்லை! அச்சம் தேவையே இல்லை! நாட்டு அதிகாரத்தை என் கையில் மாற்றுவதற்கு முன்பாக இந்தப் புரட்சிக் கூட்டத்தைப் பொசுக்கியாக வேண்டும்! பொன்னழகன் கூட்டத்தைக் கூண்டோடு கைது செய்ய வேண்டும்! அந்தப் புதுமைப்பித்தனை சுட்டுத் தள்ள வேண்டும்! சீமான் சபையை உடனே கூட்டி அவசர உத்தரவு பிறப்பிக்கிறேன்.

குரு: சந்தோஷம்! நன்றே செய்க! அதுவும் இன்றே செய்க, அமைச்சரே!

அரி: நானும் நமது பத்திரிகையில் எழுதிவிடுகிறேன். புதுமைப்பித்தன் ஒரு பலாத்காரப் பிரியன் என்று கொட்டை எழுத்தில் போடுகிறேன்! அவன் தான் அரசரைக் கொல்ல முயற்சித்தான் என்ற உண்மையை ஊரறிய எழுதுகிறேன்!

அமை: ஆகவேண்டியவைகளைக் கவனிப்போம் - முதலில் சீமான்கள் சபை கூடட்டும்!

குரு: சந்தோஷம்! சந்தோஷம்!

காட்சி 36

(மக்கள் மன்றம். அல்லியிருக்கிறாள் தனியாக. கருப்பு ரோஜா வந்து அவளிடம் ஒரு கடிதத்தைக் கொடுக்கிறான்.)

அல்லி: யார் கொடுத்தது?

க.ரோ: புதுமைப்பித்தன்.

அல்லி: கையெழுத்தைக் காணோம்?

க.ரோ: இதையெல்லாம் அவரை நேரில் பார்க்கும் போது கேட்டுக் கொள்ளுங்கள், நான் சாதாரண தூதன், அவ்வளவுதான்!

அல்லி: என்ன, கருப்பு ரோஜா - என்ன ஒரு மாதிரியா பேசுகிறாய்?

க.ரோ: அப்புறம் என்னாங்க! என்னைத்தான் உங்க சங்கத்திலே சேர்க்க மறுத்துவிட்டீர்களே!

அல்லி: ஓ அந்தக் கோபமா? சரி, சரி போ! சீக்கிரம் சேர்த்துக் கொள்கிறேன்!

க.ரோ: தயவு இருந்தால் சரி... ம்... கடிதம் காத்துக் கொண்டிருக்கிறது – படிங்க -- நான் இருந்தால் வெட்கமாக இருக்கும் நான் போகிறேன்!

(போகிறான். அல்லி கடிதத்தைப் படிக்கிறாள். படித்து முடிக்கும்போது அங்கு வந்த கலாராணி கவனித்து, மறைந்திருந்து பார்க்கிறாள் - அல்லி, கடிதத்தை இடுப்பில் சொருகிக் கொண்டு, வெளியே போகிறாள். கடிதம் அவளை அறியாமல் கீழே விழுகிறது - அதைக் கலாராணி பார்த்து விடுகிறாள். படித்து விட்டு பத்திரமாக வைத்துக் கொள்கிறாள். அங்கே அப்போது பொன்னழகன் வருகிறான்.)

பொன்: கலாராணி அல்லி எங்கே?

கலா: சதா அல்லி அல்லி அல்லி... நானிருப்பது தெரியவில்லையா?

பொன்: இப்போது நீ என்ன சொல்கிறாய்?

கலா: தொட்டால் துவள நான் இருக்கிறேன் நீங்களோ எட்டாத கனிக்கு ஏணி வைக்கிறீர்கள் என்கிறேன்!

பொன்: இப்படி மனந்திறந்து பேசும் பெண்ணை நான் பார்த்ததேயில்லையம்மா! மாளிகை ஜாதி என்றாலே தனி வகை தான் போலும்! ஒரு ஆடவனோடு பேசும் பண்பு தெரிய வேண்டாம்?

கலா: அதுபோல் ஆடவருக்கு பெண்ணோடு பேசும் பண்பு வேண்டும்! அவசரப்பட்டு தலையில் கை வைப்பது - காய்ச்சலா என்று தொட்டு பார்ப்பது – கூந்தலைக் கோதி விடுவது - ஓடும் போது கையை பிடித்திழுப்பது இது போன்ற செயல்களில் ஈடுபடக் கூடாது!

பொன்: இதெல்லாம் உனக்கு எப்படித் தெரியும்? அல்லி சொன்னாளா?

கலா: நானே பார்த்தேன்! ரசித்தேன்! சிரித்தேன்!

பொன்: சரி சரி! உன்னை இங்கிருந்து அனுப்பிவிட வேண்டியதுதான்!

கலா: சாவூரைத் தவிர என்னை வேறூருக்கு அனுப்பாதீர்கள்!

பொன்: கலாராணி! எத்தனை முறை சொன்னாலும் உனக்குத் தெரியவில்லையே! நீயே ஒரு வழி சொல் - அல்லியை மறப்பதற்கு!

கலா: என்னை நினைத்துக் கொள்வது...

பொன்: அவளை மறந்தல்லவா - உன்னை நினைக்க வேண்டும்!

கலா: அவள் உங்களை நினைக்கவேயில்லையே!

பொன்: அதற்குள் முடிவு கட்ட முடியுமா? அழியாத சித்திரமாக அல்லவா பதிந்துவிட்டாள் அல்லி என் மனதில்! அவளை மறக்க முடியுமா? முடியாது! முடியாது!

கலா: மறக்க முடியுமா - முடியாதா என்பதை முடிவு கட்ட நான் ஒரு யோசனை சொல்லுகிறேன்! இப்போதே நீங்கள், அரண்மனைப் பக்கமுள்ள தோட்டத்திற்குப் புறப்படுங்கள் - அங்கே அல்லியைப் பார்ப்பீர்கள்!

பொன்: என்ன சொல்கிறாய் கலாராணி!

கலா: அல்லியை அள்ளிப் பருக அங்கே ஒருவன் காத்திருக்கிறான் - அல்லி, அங்கே போயிருக்கிறாள்!

பொன்: உண்மையாகவா?

கலா: ஏன் சந்தேகம்? போனால் தெரிகிறது?

பொன்: இப்போதே போகிறேன். அல்லி யாருக்குச் சொந்தமுடையவள் என்பதை அறிந்துவருகிறேன். கலா ராணி! இதுமட்டும் பொய்யாக இருந்தால், பிறகு பொன்னழகன் உன் வரையில் புலியாக மாறிடுவான் ஜாக்கிரதை!

கலா: புலியாக மாறுவது பிறகு முதலில் புள்ளிமான் சங்கதி என்னவென்று தெரிந்து வாருங்கள்!

பொன்: ம் ... இதோ இப்போதே!

(போகிறான், கலாராணி பெருமூச்சு விடுதல்.)

காட்சி 37

(தோட்டம் அல்லி - புதுமைப்பித்தன் காதல் கீதம்.)

அல்லி: நேரமாகிறது கண்ணே நான் புறப்பட்டுமா?

புதுமை: நேரம் போனது உனக்கு எப்படித் தெரிந்தது?

அல்லி: பார்த்தீர்களா? 'காதல் கடலிலேயே மூழ்கி விடக் கூடாது கடமையை மறந்து' என்று உறுதி எடுத்துக் கொண்டோமே அதையெல்லாம் காற்றில் பறக்க விட்டு விட்டீர்களே!

புது: இல்லை இன்பமே! காதலும் கடமையும் ஒன்றையொன்று பின்னிக் கிடப்பதையே நானும் விரும்புகிறேன். மறக்கவில்லை!

அல்லி: நாமிருவரும் - வெளிப்படையாக - கணவன் மனைவியாக - கடமை புரியும் தம்பதிகளாக வாழும் நாள் எப்போதோ?

புது: விரைவிலே கிடைக்கும் அந்த பாக்யம்!

அல்லி: கண்ணாளா!

புது: அல்லி – இதயராணி!

அல்லி: என் ராஜா... இதயராஜா! புறப்படட்டுமா?

புது: உயிரை எடுத்துக் கொண்டு செல்லட்டுமா என்று கேள்!

அல்லி: உயிரை இங்கே விட்டு விட்டு செல்லட்டுமா?

(இருவரும் 'கண்ணே, மணியே' என்று தழுவியபடி பிரிதல் – அல்லி வர பொன்னழகன் பதுங்கிப் பார்த்தல்)

பொன்: (முணுமுணுத்தபடி) அல்லி தான் அல்லியே தான்.

(அல்லி போய்விடல்.)

பொன்: அவன் யார்? அந்தப் புது மனிதன் யார்? ராஜா என்று கூப்பிட்டாளே - அந்தக் காதல் ராஜா யார்? தெரிந்து கொள்ளாமல் திரும்ப மாட்டேன்...

(அவன் புதுமைப்பித்தனை தொடருகிறான்.)

காட்சி 38

(புதுமைப் பித்தன் - உலகப்பன் சந்திப்பு - உடை மாற்றிக் கொண்டு அரசனாவது – இருவரும் போதல் - போன பிறகு பொன்னழகன், இருவரையும் தொடர்ந்து செல்கிறான்.)

காட்சி 39

(அரண்மனைப் பின்புறத்தில் நுழைகிறான் அரசன் - அவனைத் தொடர்ந்து வந்தபடியிருக்கிறான் பொன்னழகன்)

அர: (உலகப்பனிடம்) உலகப்பா - அல்லியிடம் நாளைக்கு எப்போது சந்திப்பு என்று சொல்ல மறந்து விட்டேன்!

உல: அதனால் என்ன பிரபூ! அல்லியம்மாளே தேடிக் கொண்டு வந்துவிடுவார்கள்! நீங்கள் இருவரும் இப்படி தோட்டம் துரவில் சந்திப்பதை விட, அல்லியம்மாளை நமது அந்தப்புரத்திற்கே அழைத்து வந்து விடலாம்!

அர: உம்...நானும் அல்லியும் இணை பிரியாது வாழப் போகிற காலம் வராமலே போய்விடுமா என்ன? வரத்தான் போகிறது!

(பேசிக் கொண்டே போகிறார்கள், பொன்னழகன் கவனித்து நிற்கிறான்.)

பொன்: (தனக்குள்) அரசன் - மணிமாறன்! மணி மகுடத்தின் அதிபதி. அவனது காதலி அல்லி! விரோதியின் காதலி! பகைவனின் வெள்ளாட்டி! துரோக சொரூபம்! பெண் வடிவத்திலே வந்த ஐந்தாம்படை! மக்கள் மன்றத்திலே ஒரு சூன்யக்காரி! சூழ்ச்சியின் உருவமா? என்னையே என்னால் நம்ப முடியவில்லையே! வேவு பார்த்து வருவதாக வெளியே கிளம்புகிறாள் - இங்கே வேந்தனோடு குலவுகிறாள்! வெள்ளாட்டுத் தோலிலே வேங்கை!

விபரீதம்! விபரீதம்! தவிர்க்க முடியாத விபரீதம்! மக்கள் மன்றம் அழிந்தது! மணிமாறன் வென்றான்! மணி மாறன் வென்றான்! பொன்னழகா! உன் புரட்சி முழக்கமெல்லாம் பொடிப் பொடியாகி விட்டது! புயலாக நுழைந்து விட்ட பொல்லாதவனை நம்பிக் கெட்டேன்! நாட்டைக் காட்டிக் கொடுக்கும் நாசகாரியிடம் ஏமாந்தேன்! ஏமாந்தேன்! இனி என்ன செய்வேன்? என் லட்சியமெல்லாம் மண் தானா? ஈடேற முடியாத கொள்கைதானா மக்கள் மன்றத்தின் கொள்கை? இல்லை.. இல்லை? இப்போதே இதற்கு முடிவு காணுகிறேன்! அல்லீ; சூழ்ச்சியை சூழ்ச்சியால் வெல்லுகிறேன்! சூதுக்காரி! உன்னை சுக்கல் சுக்கலாக ஆக்குகிறேன்! பொறுத்திரு பொன்னழகா பொருத்திரு!

(போகிறான்.)

காட்சி 40

(சீமான்கள் சபை, அரசன், குருநாதர், அரிஹரநாதர், அமைச்சர்மற்றும் மக்கள் ஓர் புறத்தில் கவிஞர் - குருநாதர் பேசுகிறார்.)

குரு: அரசனைக் கொல்ல முயன்றது அந்தப் புதுமைப் பித்தன் - பொன்னழகன் கூட்டமேதான்! பொன்னழகனை விட புதுமைப் பித்தன் பயங்கரவாதி! அரசாங்கத்தின் கண்களையே ஏமாற்றிக் கொண்டு, அரசாங்கத்திற்கு எதிராக பெரியதோர் பிரச்சார சக்தியை உண்டு பண்ணியிருப்பது மட்டுமல்லாமல், இந்த அரசையும்

அடியோடு கவிழ்ப்பதற்கான திட்டங்களை வகுத்து வருகிறான்! 'மணிமகுடம்' பத்திரிகை, மாயமாக வருகிறது – மாயமாக விற்பனையாகிறது! கண்ணனையும் தோற்கடிக்கும் தந்திரசாலி யார்? மணிமகுட புரியை நாஸ்திக பூமியாக ஆக்க வந்த நாசகாரன் யார்? பக்தர்களைக் கிண்டல் செய்யும் பாவி - மதத்தைக் கேலி புரியும் மண்டூகம் – கடவுள் கட்டளைகளுக்குக் காரணம் கேட்கும் கயவன் - பகுத்தறிவுக்கு மிஞ்சியது எதுவுமில்லை என்று கதையளக்கும் பாதகன் - புதுமை - புரட்சி - பொதுவுடைமை - என்றெல்லாம் பொதுமக்களைத் தூண்டிவிடும் பொல்லாத ஜந்து - புதுமைப்பித்தன்! புதுமைப்பித்தன்!! பயங்கரவாதி புதுமைப்பித்தன்! பட்டத்தரசைக் கொல்ல முயன்ற புதுமைப்பித்தன் உடனடியாகச் சுட்டுத் தள்ளப்பட வேண்டும்! கண்ட இடத்திலே அவன் சுடப்பட வேண்டும்! அந்தப் படுநாஸ்திகனின் பிணத்தைக் கொண்டு வருகிறவர்களுக்குப் பத்தாயிரம் மோகராக்கள் பரிசு தரப்படும் என்று பறை அறிவிக்க வேண்டும். தெய்வீக அவதாரம் - தேசம் புகழ் மன்னன் மணிமாற வேந்தனையல்லவா மரணக்குழியிலே தள்ளப் பார்த்தார்கள், மாதேன்மத்தர்கள்! ஆண்டவன் அரசனைக் காப்பாற்றினான்! நாம் அக்ரமக்காரர்களை அழித்துத் தீரவேண்டும். இல்லாவிட்டால், அடிக்கடி அரசனைக் காக்க வேண்டிய அவசர வேலை ஆண்டவனுக்கு ஏற்பட்டுக் கொண்டே இருக்கும். இந்தச் சங்கடத்தை அடக்குவோம் மதிப்பு வாய்ந்த இந்த சீமான்கள் சபை, உடனே பொன்னழகன் கூட்டத்தாரைக் கைது செய்யவும் - புதுமைப்பித்தனைக் கண்ட இடத்தில் சுட்டுக் கொல்லவும் உத்திரவு பிறப்பிக்க வேண்டுமென்கிறேன்! இது தெய்வத்தின் கட்டளை - ஆண்டவனின் விருப்பம்!

அமைச்: சீமான்களே! குருநாதர் கூறியதனைத்தும் கேட்டீர்கள்! மணிமகுடபுரியின் க்ஷேமலாபங்களைக் கருதியும் மன்னரின் பாதுகாப்புக் கருதியும் - பொன்னழகன் கும்பலைக் கைது செய்யும்படியும் மக்கள் மன்றத்தைத் தடை செய்யும் படியும் ஒரு தீர்மானம் நிறைவேற்ற வேண்டுகிறேன்.

சீமான்: சீமான்கள் சார்பில் அதை நான் வரவேற்கிறேன்!

(சீமான்கள் கோஷம்)

அமை: சந்தோஷம் - பொன்னழகன் கூட்டத்தைத் தடை செய்து, அவர்களைக் கைது செய்யும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேறி விட்டது? ஒருவனைச் சுட்டுக் கொல்வதற்கு உத்தரவளிக்கும் உரிமை அரசரைச் சார்ந்ததாகும். ஆகவே புதுமைப்பித்தனைப் பற்றிய உத்திரவை அரசரே வெளியிட வேண்டுகிறேன்!

குரு: அரசர் மறுக்கப் போகிறாரா என்ன? அரசே தயக்கமின்றிச் சொல்லுங்கள் - அந்தக் தலைகனத்தவர்களைத் துப்பாக்கி முனையில் நிறுத்தச் சொல்லுங்கள்!

அரி: ஆமாம் - அதுதான்சரி!

அமை: உண்மைதான்! அவன் ஒழிக்கப்பட வேண்டியது நியாயந்தான்! அரசனை ஒழிக்க வந்தவனை, அரசாங்க சட்டம் ஒழித்தே தீரவேண்டும்! அரசர் ஆணைக்குச் சபை காத்திருக்கிறது!

அர: சீமான்களே - உங்கள் விருப்பம் போலவும் - குரு நாதர், அமைச்சர் ஆகியோரின் விருப்பம் போலவும் - புதுமைப்பித்தனை சுட்டுக் கொல்ல உத்தரவிடுகிறேன்.

(சீமான்கள் கரகோஷம், கவிஞர் ஆவேசத்தோடு அதை விட்டு அகலுகிறார்.)

அர: புதுமைப்பித்தன் பிணத்தைக் கொண்டு வருகிறவர்களுக்கு - குருநாதர் கூறியது போல - பத்தாயிரம் மோகராக்கள் பரிசளிக்கப்படும் என்று பறை மூலம் தெரிவிக்கவும் உத்தரவிடுகிறேன்!

(சீமான்களின் கரகோஷம்.)

குரு: சபாஷ், சபாஷ்! மணிமகுடம் பிழைத்தது! மன்னர் பிழைத்தார்! மத எதிரிகள் அழிந்தனர்! ஒழிந்தனர்! மதம் வாழ்க! கடவுள் வாழ்க! நீடூழி வாழ்க!

(அப்போது உலகப்பன் ஓடி வருகிறான் சில வீரருடன்)

உல: அரசரைக் கொல்ல வந்த சதிகாரன் அகப்பட்டு விட்டான்.

அமை: என்ன?

உல: கவ்நாட்டு விழாவின் போது கத்தி வீசினானே அரசர் மீது! அந்தக் காதகனைப் பிடித்து விட்டோம் - காராக்கிரகத்தில் அடைத்து விட்டோம்!

குரு: பிடிபட்டானா சண்டாளன்? (வியப்பு, பயம்)

உல: ஆம் ஸ்வாமி - பிடிபட்டான், சிறையிலே அடைக்கப்பட்டான்.

குரு: சபையோர்களே - பார்த்தீர்களா? அவன் புதுமைப் பித்தன் ஆளாகத்தான் இருக்க வேண்டும் - இருங்கள்; இப்போதே போய் அவன் யார் - யாருடைய தூண்டுதலால் அரசனைக் கொல்ல வந்தான் - என்ற விவரங்களை, தெய்வீக சக்தியால் அந்தப் பயலிடமிருந்து கிரகித்து வருகிறேன்! ஒரு நொடியில் வருகிறேன்!

(குருநாதர் போகிறார் - சபை அமைதியாக இருக்கிறது. அரசன், ஆசனத்தை விட்டு எழுந்து, அமைச்சரைப் பார்த்து...)

அர: அமைச்சரே தாங்களும், இன்னும் இரண்டு சீமான்களும் மட்டும் தயவு செய்து என்னோடு வரவேண்டும்.

அமை: அரசே! (புரியாமல் திகைத்து, அதே சமயம் அலட்சிய பாவத்துடன்) என்ன சொல்கிறீர்கள்?

அர: தயவு செய்து எதையும் கேட்காதீர்கள் - நீங்களும் சீமான்களும் என்னைத் தொடர்ந்து வாருங்கள். (போய்க் கொண்டே அரசன்) சபை கலைய வேண்டாம் - நான் வரும் வரையில் சபை நடந்து கொண்டிருக்கட்டும்.

(அரசன் போகிறான். எதுவும் புரியாது அமைச்சரும் இரு சீமான்களும் தொடர்ந்து போகின்றனர்.)

காட்சி 41

(சிறைச்சாலை, குருநாதரின் ஆள் சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறான் - அங்கே குருநாதர் வருகிறார்.)

கையாள்: சாமீ! என்னை காப்பாத்துங்க சாமீ!

குரு: அடே மடையா! ஏண்டா சிக்கிக் கொண்டாய்?

கை: நான் என்னங்க பண்ணட்டும்! அந்த உலகப்பன் என்னை ஓட ஓட விரட்டி, கடைசியிலே கைது செய்துட்டான். எப்படியாவது என்னைக் காப்பாற்றுங்க சாமி!

குரு: உன்னைக் காப்பாற்றுகிறேன், பயப்படாதே! ஆனால் ஒன்று! குறுக்கு விசாரணையின் போது, நான் சொல்லுகிறபடி நடந்து கொள்ள வேண்டும்.

கை: சரிங்க!

குரு: அரசனை நீ தான் குத்த வந்தாய் என்பதை ஒப்புக்கொள்!

கை: அய்யய்யோ!

குரு: கேண்டா! அதோடு, புதுமைப்பித்தன் தான் அரசனைக் கொல்லும்படி சொலலி அனுப்பினான் என்று கூறிவிடு!

கை: ''முடியாது - முடியாது! யார் சொன்னால் என்னடா நீ ஏண்டா அரசனைக் கொல்லப் பாய்ந்தாய்?'' என்று கேட்டுஎன்னைத் தூக்கிலே போட்டு விடுவார்கள்!''

குரு: நான் சொன்னபடி கேள் - இல்லாவிடால் தொலைந்து போவாய்!

கை: குருநாதரே! நீர் தப்பித்துக் கொள்ளத் தந்திரம் செய்கிறீர்! நான் ஒத்துக் கொள்ள மாட்டேன்!

குரு: அடே, மரியாதை கெட்ட பதரே! வீணே சாகாதே! நான் சொல்லுகிறபடி சொல்! புதுமைப் பித்தன் மீது பழியைப் போடு - அவனுடைய ஆள்தான் நீ என்று ஒத்துக் கொள்!

கை: அதைச் சொன்னாலும் போதாதா! என் தலை தப்புமா பிறகு? நீர் தான் அரசனைக் கொல்லும்படி கட்டளையிட்டதாக நான் சொல்லப் போகிறேன்! சரிதானா?

(அரசன், அமைச்சர், சீமான்கள், உலகப்பன் ஒதுங்கி கவனித்தல்.)

குரு: அடப்பாவி - என்ன காரியம் செய்தாய்? எவ்வளவு பணங்கொடுத்தேண்டா - உனக்கு! ஏய், இதைக் கேள்! குற்றத்தை நீயே ஒத்துக் கொள்! அப்படியே உனக்கு ஏதாவது பயங்கர தண்டனை விதிக்கப்பட்டாலும், நானிருக்கிறேன் உன் குடும்பதைக் காப்பாற்ற!

கை: என் கதி என்னாவது, குருநாதரே?

குரு: நான் சொன்னபடி சொல்! உன்னையும் காப்பாற்றுகிறேன்!

கை: நீர் சொன்னபடி சொன்னால் - நீரல்ல உன் தாத்தாவே வந்தாலும் என்னைக் காப்பாற்ற முடியாது!

(குருநாதர் யோசனை - தன் ருத்ராக்ஷ மாலையில் உள்ள பதக்கம் போன்ற டப்பாவைத் திறந்து.)

குரு: சரி- இந்தா - ஆபத்துக் காலத்தில் உபயோகிக்கும் ஆயுதம். ஆண்டவனின் விபூதிப் பிரசாதம் - இதைச் சாப்பிடு - எந்த தண்டனையும் உன்னை ஒன்றும் செய்யாது!

கை: உண்மைதானா? அப்படியானால் கொடுங்கள் சாமி, அந்த அதிசய விபூதியை!

(கொடுக்கிறார்.)

குரு: அப்படியே வாயில் கொட்டிக் கொள்!

(கையாள் அதை முகர்ந்து பார்க்கிறான் - சந்தேகம் ஏற்படுகிறது.)

கை: விபூதியா இது? இல்லை - விஷம்! விஷம்!! அடப்பாவி! என்னை விஷத்தைக் கொடுத்துக் கொல்லவா பார்க்கிறாய்? இந்தா நீயே சாப்பிடு! (குருநாதர் வாங்குகிறார்.) இரு, இரு! நாளைக்கு உன் சதிகளையெல்லாம் சக்கரவர்த்திக்கு நேராக அம்பலப்படுத்துகிறேன்!

குரு: அப்படியானால், நீ என்னைக் காட்டிக் கொடுக்கப் போகிறாய்?

கை: ஆமாம்! ஆமாம்!

குரு: என்ன?

(அவன் கழுத்தை நெறிக்கிறார். அப்போது அரசன் முதலியோர் அங்கு வருதல்.)

அர: குருநாதரே, நில்லும், நில்லும்!

குரு: ஆ, யார்?

சீமான்கள்: யாரா? தெரியவில்லை? முழுவதுமே கேட்டுக் கொண்டுதானிருந்தோம்! அரசனைக் கொல்லத் திட்டம் வகுத்தது யார்? என்று புரிந்து கொண்டோம்! (காவலரை நோக்கி) உம் - உடனே இந்தப் போலி வேடதாரியைக் கைது செய்யுங்கள்!

குரு: என்னையா கைது செய்யப் போகிறீர்கள்? அதுதான் என் அப்பன் ஆண்டவன் இருக்கும் வரையில் நடக்காது! நடக்காது!

(கையிலுள்ள விஷத்தை வாயில் கொட்டிக் கொள்கிறார்.)

குரு: ஹா..ஹா..ஹா! என்னை யாராலும் கைது செய்ய முடியாது! என்னை என்பது யாரை? - இந்த உடலையா? ஹா..ஹா..ஹா.. அதுதான் இல்லை! இந்த ஆத்மாவை! இதைத் தான் உங்களால் கைது செய்ய முடியாது என்கிறேன்! வெறுங் கூடு விட்டு ஆவி போவதற்கு முன்பு - இந்த குரு நாதர் செய்ய வேண்டிய வேலையை முடித்து விட்டுத்தான் போவார்! என்னைப் போலி வேடதாரி என்று குறிப்பிட்டீரே! - சீமானே! நான் போலி வேடதாரிதான்! நான் மட்டும் போலி வேடதாரி இல்லை- இதோ இதோ.. இந்த (வாய் குளறுகிறது) இதோ நிற்கிறானே இந்த அரசன்

- இவன்... இவன் (கையைக் காட்டிக் கொண்டே நெளிகிறார் - நிற்க முடியவில்லை) மணி மகுடத்தை மதம் ஆளும் - மதம் ஆள வேண்டும் - என்று கனவு கண்டேன்... அந்தக் கனவு பலிக்கவில்லை! இன்றில்லா விட்டால் நாளை.. என்போல் ஒருவன் தோன்றத்தான் போகிறான்! என்போன்ற மத குருமார்களை அழித்து விடலாமென்று யாரும் கருதாதீர்கள்! அழிக்க அழிக்க முளைத்துக் கொண்டுதானிருப்போம்! முளைத்துக் கொண்டு தானிருப்போம்!! போவதற்குள் ஒரு வார்த்தை! போலி வேடதாரி.... போலி வேடதாரி.. சீமானே - நான் மட்டுமல்ல போலி வேடதாரி! இதோ இந்த அமைச்சர் ஆட்டி வைக்கும் போலி வேடதாரி... என்ன திகைப்பு? ஹா..ஹா... என்ன நகைப்பு? வேடதாரி. ஹா..ஹா.. .. என்ன சிரிப்பு? ஹா..ஹா..ஹா.. என்ன பழிப்பு? விவரமாகச் சொல்லட்டுமா? இவன்.. இவன் அரசனல்ல! இவன் யார் தெரியுமா...? இவன் ஒரு நாள் மணிமகுடம்.. மணிமகுடம்....

(கீழே வீழ்கிறார் - சாகிறார் - சீமான்கள் அமைச்சரைப் பார்க்கிறார்கள் - அமைச்சர், அரசனைப் பார்க்கிறார்.)

அர: சாகிற காலத்தில் கூட இந்தச் சண்டாளர்கள் வாயில் நல்ல வார்த்தைகள் வருவதில்லை! ம்- அமைச்சரே - சீமான்களே... வாருங்கள், சபைக்குப் போகலாம். இவனும் வரட்டும்... சபைக்கு.. (கைதியைக் காட்டி) ம் உலகப்பா... இந்தப் பிரேதத்தை...

உல: கடலில் எறிந்து விடுகிறேன்!

அர: ஏய்...! (அதட்டி) நாளைக்கு, காட்சிக்கு வைக்க வேண்டும்!

உல: ஏங்க? காக்கா கழுகு கூட வந்து எட்டிப் பார்க்காதுங்க!

அர: ம்... சொன்னதைச் செய்!..

உல: சரிங்க!

(அரசன் முதலியோர் போகிறார்கள்.)

காட்சி 42

(மக்கள் மன்றம் -எல்லாரும் இருக்கிறார்கள், கலாராணி தவிர. பொன்னழகன் குழப்பத்துடன் பேசிக் கொண்டிருக்கிறான்.)

பொன்: மாற்றாரும் மலைத்திடும் அளவுக்கு மகோன்னத வளர்ச்சி பெற்றிருக்கிறது நமது மக்கள் மன்றம் என மகிழ்ந்திருந்தேன்! இந்த மன்றத்தை அழித்திட யாருக்கும் துணிவு பிறக்காது என இறுமாந்திருந்தேன்! மகிழ்ச்சி - இறுமாப்பு - பெருமிதம் - அத்தனையும் தூள் தூளாகப் போய் விடக் கூடிய சூழ்நிலைகள் உருவாகிக் கொண்டிருக்கின்றன! எதிர் தரப்பிலே இருந்து அல்ல! நமக்குள்ளேயே நாச எண்ணங்கள் தலைதூக்குகின்றன. கோட்டைக்குள்ளேயே குத்தும் வெட்டும் உருவாகக் கூடிய சந்தர்ப்பங்கள் நம்மை நோக்கி வந்து கொண்டிருக்கின்றன! அணைபோட்டுத் தடுக்க முடியாத துரோக வெள்ளம்! ஆம், தோழர்களே! ஐந்தாம் படைகள் இங்கேயே இருக்கின்றன! எந்த நேரத்திலும் இந்த மன்றத்தின் வாழ்வை தீர்த்துக் கட்டக் கூடிய அரசனுடையய் கையாட்கள் நமக்குள்ளேயே உலவுகிறார்கள்!

(அல்லி எதுவும் புரியாமல்)

அல்லி: ஐந்தாம் படை? அரசனின் கையாள்? யார் அவர்கள்? பெயரைக் குறிப்பிட்டுச் சொல்லுங்கள்! இப்போதே நடவடிக்கை எடுப்போம்!

பொன்: நான் யாரைச் சொல்வது அல்லி? என்னையே நான் நம்பமுடியவில்லை! நீ கூட துரோகியாக இருக்கலாம்!

அல்லி: ஆ!

பொன்: உதாரணத்துக்குச் சொல்கிறேன்! என்னைக் கூட அரசன் தன்னுடைய கங்காணியாக ஆக்கிவிடக் கூடும்! ஆக்கி யிருக்கலாம்! நீ கூட அரசனுடைய அழகில் மயங்கியிருக்கலாம்! அவனது அரண்மனை - ஆடம்பரம் - அந்தஸ்து இவைகளில்

இருதயத்தைப் பறிகொடுத்திருக்கலாம்! அதன் காரணமாகவே, அவனது உயிரைக் கூட நீ காப்பாற்றியிருக்கலாம்?

அல்லி: என்ன சொல்லுகிறீர்கள்?

பொன்: முன்பே சென்னேனே, உதாரணம் என்று! யாரை யார் நம்ப முடிகிறது அல்லி? - கண்களைக் கூட எவ்வளவோ பாதுகாப்பாகத்தான் வைத்திருக்கிறோம் - அவயவங்களிலேயே முதலிடம் அதற்குத்தான் தருகிறோம் -தூங்கும் போது கூட இமைக் கதவால் மூடி, துரும்பு விழுந்து துன்பத்தைக் கூட அதற்குத் தர மனமின்றி அவ்வளவு அருமை பெருமையாக அரவணைத்துக் காப்பாற்றுகிறோம்! ஆனாலும் அந்தக் கண்ணிலே- உள்ளுக்குள்ளே ஒரு சிறு கோளாறு ஏற்பட்டாலும் போதும்! அப்பப்பா! உபத்திரவம் தாங்க முடிகிறதா? மனிதன் தப்புவதுதான் சாமான்யமாயிருக்கிறதா? அதனால்தான் போலும் கண்களையும் பெண்களையும் ஒப்பிட்டுக் கூறுகிறார்கள்? இரண்டும் அழகானவை! அதுபோல இரண்டும் ஆபத்து நிறைந்தவை!

அல்லி: உங்கள் பேச்சு அர்த்தமற்றது என்று நான் கூற மாட்டேன்? 'உதாரணத்திற்காக' - என்பதையும் நான் நம்பத் தயாராயில்லை! எதையோ மறைக்கிறீர்கள்! மறைக்காமல் சொல்லுங்கள்!

பொன்: நான் ஏன் மறைக்க வேண்டும்? மங்கையராகப் பிறந்து மன்னனைக் காதலித்தால் அல்லவா - மக்கள் மன்றத்திலே விசாரணையின் போது மறைக்க வேண்டும்!

அல்லி: ஓகோ! கலாராணியைப் பற்றிப் பேசுகிறீர்களா? ஆமாம் - அவளை நாமென்ன மன்ற உறுப்பினராகவா ஆக்கியிருக்கிறோம்? நம் மன்றத்திலே ஒரு கைதி அல்லவா அவள்? ஐந்தாம் படை - துரோகி என்பதெல்லாம் அவளுக்கு எப்படிப் பொருந்தும்?

பொன்: என்னமோ சொன்னேன்! யாருக்குப் பொருந்துகிறதோ அவர்கள் அதைப் பொருத்திப் பார்த்துக் கொள்ளட்டும்! ஆனால் ஒன்று! அல்லி! ஐந்தாம்படை

வேலையினால் இந்த மன்றத்தை அழித்து விடலாம் என்று மட்டும் யாரும் கனவு காண வேண்டியதில்லை! மக்கள் மன்றம், இன்று அழியலாம்! பொன்னழகனும் அவன் தோழர்களும் தூக்கு மேடையிலே உரிமைக்குரல் எழுப்பியபடி ஊசலாட நேரிடலாம். ஆனால், நாளை மறுநாள் - அதற்குப் பிறகு - மக்கள் மன்றமே தோன்றாது என்று எந்த ஆதிக்க வெறியனாவது மனக்கோட்டை கட்டினால் நிச்சயம் ஏமாந்தே போவான்! அல்லி! இனியொரு முறை பேச சந்தர்ப்பம் கிடைத்தால், அந்த முட்டாள் அரசனிடம் இதை ஞாபகப்படுத்த மறந்து விடாதே!

அல்லி: என்ன? அரசனை நான் சந்திப்பதா?

பொன்: ஆமாம்! நீதானே சொன்னாய்? - அவனைக் காப்பாற்றிய அன்றைய தினம் அவன் உன்னோடு பேசிக் கொண்டிருந்தான் என்று!

அல்லி: அரசனைக் காப்பாற்றியதைப் பற்றி அடிக்கடி நினைவூட்டுகிறீர்கள்! அதை ஒரு பெரிய குற்றமாகக் கருதுகிறீர்கள் போலும்! அது தவறானால், மன்றத்தின் தீர்ப்புக்கும், தண்டனைக்கும் தலைவணங்கத் தயாராயிருக்கிறேன்!

பொன்: அதை நானும் தவறாகக் கருதவில்லை - மன்றமும் கருதவில்லை! அரசனைக் காப்பாற்றியதென்ன? நீ அவனோடு காதல் கீதம் பாடினாய் என்று யாராவது சொன்னால் கூட நான் தவறாகக் கருத மாட்டேன்!

அல்லி: புரிகிறது தலைவரே -புரிகிறது! உங்கள் புதுமையான போக்கிற்குக் காரணம் புரிகிறது! தனிப்பட்ட கோபத்தைத் தங்களைப் போன்ற தலைவர்கள், இப்படிப் பொதுவான இடங்களில் தணித்துக் கொள்ளக் கூடாது என்பதை தயவாகக் கேட்டுக் கொள்கிறேன்!

பொன்: என்னம்மா பேசுகிறாய்...? மக்கள் மன்றத்துத் தலைவனிடம் பேசுகிறோம் என்பதை மறந்து விடாதே! மன்னனிடமல்ல; ஞாபகமிருக்கட்டும்!

அல்லி: ஞாபகமிருக்கிறது! நன்றாக ஞாபகமிருக்கிறது. தலைவரே! தங்கள் சகோதரி போல் பாவித்த என் மீது சதிப் பேச்சுக்களை வீசுவதின் மர்மம் என்ன? நான் என்ன குற்றம் செய்தேன்? அதைச் சொல்லுங்கள்! மக்களின் நல் வாழ்வுக்காக - பொன்னழகரின் தலைமையிலே அணிவகுத்து நடப்பது என்ற உறுதியிலே யிருந்து எள்ளவும் தவறியவளல்லவே இந்த அல்லி! மரண மேடையா? மன்னன் ஆணையா? - எதுவாயினும் தகர்த்தெறிந்து போர்க்கொடி உயர்த்தும் புரட்சிக் கொள்கையிலே யிருந்து அணுவும் பின்வாங்கியதில்லையே இந்த அல்லி! பிறகேன் தலைவரே - என் மீது இந்த அபாண்டமான குற்றச் சாட்டுகள்? அக்கிரமமான பழிகள்? வேண்டாம்- இப்படியெல்லாம் பேசாதீர்கள்! (அழுகிறாள்) உங்கள் தங்கை - இதுபோன்ற தாக்குதல்களைத் தாங்க மாட்டாள், தலைவரே - தாங்க மாட்டாள்!

பொன்: உன் மீது நம்பிக்கை வைக்கச் சொல்லுகிறாயா அல்லி? நம்பித்தான் இருந்தேன்! இந்த உலகத்திலே யாரையும் விட அதிகமாக உன்னைத்தான் நம்பியிருந்தேன். நம்பியவனைத்தான் நட்டாற்றில் விட்டு விட்டாய் அல்லி!

அல்லி: எதைப்பற்றி பேசுகிறீர்கள் என்று புரிகிறது - தலைவரே! உங்களை நான் சந்தித்த நாள் முதல் சகோதரனாகவே, கருதுகிறேன்!

பொன்: ஆமாம்! எனக்கு அது தெரியாமல்தான் போய்விட்டது! பொன்னழகனைச் சகோதரனாகவும், புவியாளும் மன்னனைக் காதலனாகவும் எண்ணுகிற ஒரு சதிகாரி எனக்குத் தங்கையாக வந்திருக்கிறாள் என்பது தெரியாமல்தான் போய்விட்டது!

அல்லி: ஆ! அய்யோ! அரசனின் காதலியா நான்! அக்கிரமமான குற்றச்சாட்டு! இந்த வார்த்தைகளை உடனே திரும்பப் பெற்றுக் கொள்ளுங்கள்...!

பொன்: முடியாது!

அல்லி: ஏன் முடியாது? என்னையும் அரசனையும் தொடர்புபடுத்தி அநியாயமான பொய்யைச் சொல்வதற்கு என்ன ஆதாரமிருக்கிறது?

தோழர்கள்: ஆமாம், அல்லி குற்றவாளி என்பதற்கு தலைவர் என்ன ஆதாரங் காட்டுகிறார்?

பொன்: நானே நேரில் கண்டேன்!

தோழ : அதற்கு சாட்சி?

பொன்: நானேதான்!

தோழ: வாதியே சாட்சியாக வரும் விசித்திரம் எந்த வழக்கு மன்றத்திலும் கிடையாது! அல்லியம்மாள் மீது வேண்டுமென்றே சாட்டுகிற குற்றச்சாட்டை நாங்கள் மறுக்கிறோம்!

தோ. அனைவரும்: ஆமாம், சரியான சாட்சியமில்லாமல், சதிக் குற்றம் சாட்டுவதை அனுமதிக்க முடியாது! முன்பொரு முறை இப்படித்தான், புதுமைப்பித்தனை சந்தேகப்பட்டு அவனது நெருங்கிய தொடர்பையே நமது மன்றம் இழந்து விட்டது என்பதை இப்போது ஞாபகப்படுத்துகிறோம்!

அல்லி: தலைவரே!, அல்லி ஒரு அசட்டுப் பெண் என்று கூறுங்கள்; கேட்டுக் கொள்கிறேன்! அகம்பாவக்காரி என்று அழையுங்கள்; ஆத்திரப்படவில்லை! பிடிவாதக்காரி என்று பேசுங்கள்; பெரிதுபடுத்திக் கொண்டிருக்க மாட்டேன்! பேதை - முட்டாள் - பேய்க்குணம் படைத்தவள் - பெண்ணல்ல, பிசாசு - இப்படியெல்லாம் பேசுங்கள்; ஆனால், இந்த மன்றத்திலே நாய் போல பணியாற்றிய என்னை - நம்பிக்கைக்குப் பாத்திரமில்லாதவள் என்று மட்டும் கூறாதீர்கள்! துரோகிப் பட்டம் சூட்டுவதைவிடத் தூங்கும் போது கல்லைப் போட்டுக் கொன்று விடுங்கள்..! என்னையா துரோகி என்கிறீர்கள்? இந்த மன்றம் வலிவும் பொலிவும் அடைய வாழ்க்கையைத் தத்தம் செய்திருக்கிற என்னையா துரோகி என்கிறீர்கள்? கல்லடியும் சொல்லடியும்பட்டுக் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு இவைகளைக் கனவிலும் மறவாது

உயிரைத் திரணமாக மதித்து உங்களோடு அணிவகுத்து நிற்கும் - இந்த அபாக்யவதி அல்லியா துரோகி? (அனைவரையும் பார்த்து)... நீங்கள் சொல்லுங்கள் தோழர்களே - அல்லி, துரோகியா? - அல்லி துரோகியா? - அல்லும் பகலும் அனவரதமும் உங்களோடு போர்க்கொடி பிடித்து அலையும் இந்த அல்லி துரோகியா? அல்லி துரோகியா? அல்லி துரோகியா?

அனைவரும்: இல்லை! இல்லை!! இல்லை!!!

பொன்: ம்.. பரவாயில்லை! தற்போதைக்கு அல்லி ஜெயித்து விட்டாள்! காலம் வரட்டும் -காரிருள் மறையும்... உண்மைக் கதிரவன் நிச்சயம் தோன்றுவான்!

கவி: (கவிஞர் வந்தபடி) கதிரவன் தோன்றுவதற்குள் நம் கதியெல்லாம் அதோகதிதான்!

பொன்: கவிஞரே!

கவி: மக்கள் மன்றம் தடை செய்யப்பட்டு விட்டது - சட்ட விரோதமாக்கப்பட்டு விட்டது!

பொன்: என்ன?

அல்லி: ஆ - மக்கள் மன்றத்துக்குத் தடையா?

கவி: அதுமட்டுமல்ல, இரவோடு இரவாக ரகசியமாகக் கூடியிருக்கும் சீமான்கள் சபையில் நம் அனைவரையும் நாளைக் காலையில் கைது செய்ய உத்திரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது!

பொன்: ஆ!

அல்லி: கைது செய்ய உத்தரவு?

கவி: அதோடு முடியவில்லை - அடக்குமுறை தர்பார்! நினைக்கவே நெஞ்சம் வெடிக்கிறதப்பா - புதுமைப் பித்தனின் பிணத்தைக் கொண்டு வருபவருக்குப் பரிசளிக்கவும் ஏற்பாடாகி விட்டது!

அல்லி: ஆ!

கவி: கண்ட இடத்திலே அந்தக் கர்ம வீரனை யார் வேண்டுமானாலும் சுடலாம்தான்!

அல்லி: அய்யோ! அவரையா? - சுடுவ்தா? கவிஞரே உடனே அவசரமாக நாம் காரியத்தில் இறங்க வேண்டும் - தோழர்கள் தங்களுடைய அபிப்ராயத்தை வெளியிடலாம்.

பொன்: அபிப்ராயம் என்ன? தலைக்கு மேல் வெள்ளம் வந்து விட்டது! இனி அரசனின் தலையைக் கிள்ளி எறிய வேண்டியதுதான்!

தோழர்கள்: ஆமாம், அதுதான் சரி!

கவி: சரியான யோசனை! காலையிலே அவசரச் சட்டம் வெளியாவதற்கு முன்பு -மன்னனின் மரணச்செய்தி வெளியாக வேண்டும் - கிழக்கு வானத்து சிகப்பை, கிள்ளி எறியப்பட்ட அரசனின் ரத்தச் சிகப்பு தோற்கடிக்கவேண்டும்! மல்லிகை பரப்பிய மஞ்சத்திலே - செம்பருத்தி இதழ்கள் சிதறிக் கிடப்பது போல அரசனின் செங்குருதி சிதறிக் கிடக்க வேண்டும்! ம.. புரட்சி அத்தியாயத்தின் சிறப்பாயிரத்தை எழுத ஆரம்பியுங்கள்!

பொன்: எழுத ஆரம்பிக்கலாம் - எழுத்தாணியை முதலில் எடுப்பது யார் என்று தெரிய வேண்டுமே? இன்றிரவே அரசன் பிணமாக வேண்டும்! அந்தக் காரியத்தைச் செய்ய ஆள் யார்? அது தெரிய வேண்டாமா?

கவி: ஏன் வழக்கம் போல் சீட்டுக் குலுக்கிப் போடுவோம்! யாருடைய பெயர் வருகிறதோ - அவர்கள் அரசனைக் கொல்ல வேண்டும்!

பொன்: (அல்லியிடம் திரும்பி) தலைவின் சம்மதம் எப்படியோ?

அல்லி: நான் தயார்! சீட்டுக் குலுக்கிப் போடுங்கள்! இன்று அரசன் சாகாவிட்டால் நாளை புதுமைப்பித்தன் சாக வேண்டும் - பிறகு நாம் சாக வேண்டும், நாமும் அவரும் தப்ப வேண்டுமானால், அரசன் சாவதே நல்லது! கவிஞரே, சீட்டுகள் தயாராகட்டும்!

கவி: இதோ தயார்.

(கொண்டு வருகிறார்)

பொன்: உம்.. குலுக்கிப் போடுங்கள்!

(கவிஞர் குலுக்கிப் போடுகிறார் - ஒருவன் எடுக்கிறான் அதைப் பிரித்து கவிஞர் படிக்கிறார் - பயங்கர இசை.)

கவி: அல்லி! அல்லிதான் அரசனைக் கொல்ல வேண்டும்!

(தோழர்கள் கரகோசம்.)

அல்லி: இப்போதே நான் தயார்! தோழர்களே, விடை கொடுங்கள்! கவிஞரே - வெற்றியோடு திரும்புகிறேன்! தலைவர் அவர்களே - தங்கள் சந்தேகத்தை நீக்கத் தகுதியான சந்தர்ப்பம் உடனடியாகக் கிடைத்து விட்டது எனக்கு! வருகிறேன் - வணக்கம்!

பொன்: ம்... போய் வா அல்லி! இந்தா!

(என்று கைத்துப்பாக்கியை எடுத்துத் தருகிறான் - அதை அவள் வாங்கிக் கொண்டு புறப்படுகிறாள்.)

பொன்: (தோழர்களிடம்) தோழர்களே -அல்லியின் மீது எனக்குள்ள சந்தேகம் இன்னும் நீங்கியபாடில்லை! வாருங்கள்; நாமும் அவளைத் தொடர்ந்து செல்வோம்! அல்லி நம்மை ஏமாற்றி விட்டால், நாமே - இன்றிரவே அரசனைத் தீர்த்துக் கட்ட வேண்டும்! புறப்படுங்கள்!

(புறப்படுதல்)

காட்சி 43

(சீமான்கள் சபை - அரசன், அமைச்சர், சீமான்கள், கைதி, உலகப்பன்)

அமை: குருநாதர் இவ்வளவு பெரிய மோசக்காரர் - சூழ்ச்சிக் காரர் என்று எனக்குத் தெரியாது! அவர் செய்த அக்ரமத்திற்குச் சரியான தண்டனை, அவராகவே அளித்துக் கொண்டார்!

அரி : போதுமய்யா, மந்திரியாரே - நிறுத்தும்! நீர் என்ன பெரிய ஒழுங்காம்? சீமான்களே! செத்துப் போன குருநாதரை குற்றவாளி எனக் கூறும் இந்த அமைச்சர் யார் தெரியுமா? ஊர் பெயர் தெரியாத வழிப்போக்கனைப் பிடித்து அரசனைப் போல ஜோடித்து அவனைத் தன் இஷ்டப்படி ஆட்டி வைக்கும் மாயாவிதான் இந்த மந்திரியார்!

அமை: பொய்.. பொய்..! அரிஹரநாதர் பேசுவது விபரீதமான பொய்!

சீமா: (அரிஹரநாதரிடம்) என்னய்யா உளறுகிறீர்? ஏன் மன்னரையும் மந்திரியையும் இழித்துப் பேசுகிறீர்?

அரி: நான் பேசவில்லை! இதோ, இந்தக் கடிதம் பேசும்! இது யார் எழுதியது தெரியுமா? மணிமகுடபுரியின் உண்மையான அரசன் மணிமாறன் எழுதியது! படியுங்கள் - எல்லாம் புரியும்!

(சீமான் படித்துவிட்டு)

சீமா: என்ன மன்னர் முன்பே வெளியேறி விட்டாரா?

அரி: ஆமாம்.. ஆமாம்..! சந்தேகமேன்? - என் பேச்சையும் கேட்க வேண்டாம் - மந்திரி பேச்சையும் கேட்க வேண்டாம். (அரசனிடம்) அவனையே கேளுங்கள்! ஏய் நீ உண்மையான அரசனா? மந்திரி உண்டாக்கிய அரசனா? மறுக்காமல் சொல்! உம்..!

அர: சாமி, சாமி! என்னை விட்டுடுங்க! நான் உண்மையான ராஜா இல்லைதான்!

அரி: கேட்டீர்களா? - இன்னும் கேளுங்கள்! இந்தப் போலி அரசனை வைத்துக் கொண்டு கல் நாட்டு விழாவிலே பொதுமக்கள் முன்னிலையில் அதிகாரமனைத்தும் தன் பெயருக்கு மாற்றிக் கொள்ள அமைச்சர் திட்டம் போட்டது உண்மையா, இல்லையா?

அமை: நம்பாதீர்கள் - எல்லாம் பொய்!

அரி: ஏய் நீ சொல்! உண்மைதானே?

அர: ஆமாங்க - உண்மைதான்! ராஜா மாதிரி நடிடான்னு, மந்திரிதான் சொன்னாருங்க!

சீமா: என்ன, மந்திரியாரே - விழிப்பு?

அமை: விழிப்பு ஒன்றுமில்லை - அரசன் ஓடிவிட்டான்! இந்தச் செய்தி நாட்டிலே பரவினால் குழப்பம் ஏற்படுமே யென்றுதான் இப்படி ஒரு ஏற்பாட்டைச் செய்தேன்!

சீமா: அந்த ஏற்பாட்டைச் செய்ய உமக்கு என்ன அதிகாரமிருக்கிறது? சீமான்கள் சபையை ஏமாற்றியிருக்கிறீர்! இது பெருங் குற்றம்! போலி மனிதன் ஒருவனுக்கு பொன்னாபரணம் பூட்டிப் பொம்மலாட்டம் நடத்தியிருக்கிறீர் - மிகப் பெரிய குற்றம்! யாரும் செய்யத் துணியாத சதி! சீமான்கள் சபை, இவரை உடனே கைது செய்ய வேண்டும்!

(அனைவரும்)

சீமான்கள்: ஆமாம் - கைது செய்யத்தான் வேண்டும்!

பெரிய சீமான்கள்: ம்.. உலகப்பா... நடக்கட்டும்!

(மந்திரி கைது செய்யப்படுகிறார்.)

பெ.சீ: (அரசனைக் காட்டி) இந்தப் போலி அரசனையும் காராக்கிரகத்தில் தள்ளிக் கடுந்தண்டனை விதிக்க வேண்டும்!

அர: பிரபுக்களே! என்னைக் கைது செய்வதற்கு முன்பு ஒரு வார்த்தை! சிறிது நேரம் பேச எனக்கு அனுமதி வேண்டும். சில உண்மைகளை இங்கு வெளியிட விரும்புகிறேன்!

சீமா: நீயோ பொய்யன் -புளுகன் - போலி மனிதன்! உன்னிடம் ஏதடா உண்மை?

அர: நான் பொய்யனுமல்ல - புளுகனுமல்ல - போலி மனிதனுமல்ல! நானே உண்மையான அரசன்!

சீமா: என்ன?

அரி: நம்பாதீர்கள் -நம்பாதீர்கள்! இவன் ஒரு நடுத்தெரு நாராயணன் - குப்பை மேட்டுப் பயல்! இவனைக் கொண்டு போய் கோபுரத்தில் ஏற்றியது இம்மந்திரி! அவ்வளவுதான்! இவன் மன்னனுமல்ல; மண்ணாங்கட்டியுமல்ல!

அர: நான் போலி அரசன் என்பதற்கு என்ன ஆதாரமிருக்கிறது, பத்திரிகாசிரியரே?

அரி: ஒரே ஆதாரம் - உனக்கு எழுதத் தெரியாது! கையெழுத்துப் போடவும் கையாலாகதவன் நீ! அரசனைப் போல உனக்கு கையெழுத்துப் போடத் தெரியாததால்தான் - முதல் நாள் சீமான்கள் சபையில் சித்தங் கலங்கியவனைப் போல நடிக்கச் சொன்னார் மந்திரி!

அர: உண்மைதான்! சபையோர்களே, கேளுங்கள்! அரண்மனையிலே அமைச்சர், மதகுரு, இந்த அரிஹரநாதர் மூவரும் செய்யும் அக்கிரமங்கள் தாங்காது -மன்னன் மணிமாறன் வெளியேறியது உண்மைதான்! ஆனால் நாட்டைத் துறந்த மணிமாறன் - இவர்களின் கேட்டை விளக்குவதற்காக மாறுவேடத்தில் திரிந்தான்! மணிமகுடம் ஏடு விற்பனை செய்யும் வாலிபனாக மாறினான்! அரசாங்கக் காவலர்கள் அவனைக் கைது செய்து அமைச்சர் முன்னே நிறுத்தினார்கள்! அமைச்சருக்குத் தெரியாது; தன் முன் நிற்கும் அனாதை இளைஞன் அரசன் தானென்று! அரசன் காணாமற் போன நேரம் - இந்த மூவரும் மூளையைக் குழப்பிக் கொண்டிருந்த வேளை - அந்த சமயம் நான் கொண்டு போய் நிறுத்தப்பட்டேன்; எனக்கு ராஜா வேடம் கட்டினார்கள். ராஜனைப் போலவே நடந்து கொள் என்று மிரட்டினார்கள் - மணிமாறனாகிய என்னை - மணிமாறனைப் போல் நடிக்கச் சொல்லி தூபம் போட்டார்கள்! அரசனைப் போல கையெழுத்துப் போடச் செய்ய அமைச்சர் எவ்வளவோ முயன்றார்! ஒரேயடியாக நான் நடித்து விட்டேன் - கையெழுத்தே போடத் தெரியாதென்று! ஏமாளிப் பையன் ஒருவனை ஏமாற்றி விட்டதாகவும் - சீமான்கள் சபையின் கண்ணை மறைத்து

விட்டதாகவும் எண்ணி, தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொண்டார்கள். இந்த முற்றிப் போன ஏகாதிபத்தியப் பித்தர்கள்! எத்தனை நாளைக்கு ஏமாற்றி வாழ முடியும்? இருள் மறையும் நேரம் வந்து விட்டது! உதயசூரியனின் ஒளி அதோ கண்ணுக்குத் தெரிகிறது! இனியும் இருட்டடிப்பு செய்யும் அரிஹரநாதர்களும் - அறிவை விரட்டியடிக்கும் மதகுருக்களும் -அடக்கு முறை தொடுத்தளிக்கும் இவர் போன்ற அமைச்சர்களும் உலவுவதற்கு உலகத்திலே எந்த மூலையிலும் இடமில்லை!

அரி: சபை இவனை நம்பிக் கெட வேண்டாம்! இவன் அரசனேயல்ல! அரசனாயிருந்தால் கையெழுத்துப் போடட்டும்; பார்ப்போம்!

அர: கையெழுத்து! ஒன்று போதுமா? ஓராயிரம் வேண்டுமா? இந்தா!

(கையெழுத்துக்களை சிறு சிறு தாள்களில் மளமளவென்று போட்டுப் பறக்க விடுகிறான்.)

கையெழுத்து மட்டும் போதாதென்றால் இதோ இன்னும் ஆதாரம் (மார்பைத் திறந்து) நான்தான் மணிமாறன் என்பதற்கு மறுக்க முடியாத ஆதாரம்! மருதலாங்கானத்து சோழன் மணிமுடிக்காரியோடு போர் தொடுத்த போது ஏற்பட்ட காயத்தின் அடையாளம்! களந்தந்த வடு! போர்த் தழும்பு! போதுமா ஆதாரம்? இன்னும் வேண்டுமா?

சீமா: போதும் - போதும்! அரசே! எங்களை மன்னித்து விடுங்கள்! அரிஹரநாதரின் பேச்சை நாங்கள் இனியும் நம்ப மாட்டோம்!

(குருநாதரின் கையாளாக இருந்த கைதி)

கைதி: ஆமாங்க! குருநாதரும், இந்த அரிஹரநாதரும் சேர்ந்துதாங்க அரசரைக் கொல்லும்படி என்னை அனுப்பினாங்க!

அரி: அய்யகோ! ஒரே பொய் மயம் ஜகத்! நாளைக்கே என் பத்திரிகையில் இதற்கெல்லாம் மறுப்புக் கொடுக்கிறேன்!

சீமா: அதுவரை உம்மை விட்டுவைக்க உத்தேசமில்லை! உம்! இப்போதே இவரையும் கைது செய்யுங்கள்!

(உலகப்பன் கைது செய்தல்.)

அரி: அட, ஆண்டவனே! பரமசிவம்! ஓடிவந்து என்னைக் காப்பாற்று!

உல: ம்..அவரால் ஓடிவர முடியாது! ரிஷப வாகனத்துக்கு கால் ஒடிந்து விட்டதாம்!

அரி: அட முருகா! இந்த நாஸ்தீகாளிடமிருந்து என்னைக் காப்பாற்று!

உல: ம்.. அவர் எங்கேயிருக்காரோ? வள்ளி வீடோ? தெய்வயானை வீடோ? இந்தக் கத்தல் காதில் விழற நேரமோ, என்னமோ?

அரி: மகாவிஷ்ணு - நீயாவது வாயேன்!

உல: ஊஹூம் அது அவசரத்துக்கு நடக்காது! கருடன் மலையில் மோதிக்கிட்டு ரெக்கை ஒடிஞ்சு போச்சாம்!

சீமா: இழுத்துப் போங்கள். எல்லாரையும்! மந்திரி -அரிஹரநாதன் - இந்தக் கொலைகாரன் மூவரும் ஒரே கூண்டில் கிடக்கட்டும் -ம்.. கொண்டு போங்கள்.

(உலகப்பன் மூவரையும் ஒன்றாகக் கட்டி இழுத்துப் போகிறான்.)

அர: மதிப்பு வாய்ந்த பிரபுக்களே! மணிமகுடத்திலே கப்பியிருந்த காரிருளின் ஒரு பகுதி நீங்கி விட்டது! மிச்சமிருக்கும் கறையும் நீங்குவதற்கு உங்கள் அனைவரின் மனமும் இளக வேண்டும்! இந்த நாட்டுத் தலை எழுத்தை நிர்ணயிக்கக்கூடிய சபை இது! நாடாளவும் - நாட்டுக்கு நன்மை புரியவும் - அமைக்கப்பட்டதாகக் கூறப்படும் இந்தச் சபை இதுவரையில் - மதகுருவின் ஆலோசனைகளுக்கு அடிபணிந்தும், மந்திரியின் சூழ்ச்சிகளுக்குத் துவண்டு கொடுத்தும், மணிமகுடபுரியின்

மக்களிடத்திலே மாறாத வெறுப்பைச் சம்பாதித்துக் கொண்டிருக்கிறது! இந்த வெறுப்பு விலகுவது என்பது சாதாரணமல்ல! இந்த மக்களுக்கு விடுதலை வழங்குவதின் மூலமாகத்தான் அந்த வெறுப்பை விலக்கிக் கொள்ள முடியும்! பொதுமக்களுக்காகப் பாடுபடும் பொன்னழகன் - புதுமைப்பித்தன் ஆகியோர் பயங்கரவாதிகள் என்று இந்தச் சபையிலே சற்று முன்பு பேசினோமே - நினைத்துப் பாருங்கள்! யார் பயங்கரவாதிகள்? ஜரிகை உடையிலே இருக்கும் அமைச்சர் - ஜப மாலையோடிருக்கும் மதகுரு - ஜனங்களை ஏய்த்துப் பிழைக்கும் பத்திரிகாசிரியன் - இவர்களை விடவா அவர்கள் பயங்கரவாதிகள்? கொடிக்கால் நகரை அழித்துக் கோயில் கட்டும் திட்டத்தை நான் தடுத்தும் கேட்காமல் தங்களுக்குள்ள தனிப்பட்ட அதிகாரத்தின் வலிமையாலும் - தந்திரத்தின் சக்தியாலும், அந்த ஏழைகள் பகுதியை இடித்து மண்ணாக்கினார்களே - சீமான் சபையின் மூத்திரையைக் குத்திக் கொண்டு; இவர்கள் அல்லவா பயங்கரவாதிகள்! அன்பு நிறைந்த பிரபுக்களே! நடந்தவைகள் நடந்தவைகளாயிருக்கட்டும் - இனி நடப்பவைகள் நல்லவையாக இருக்கட்டும்! அதற்கான அவசர முடிவை இந்தச் சபை இன்றைக்கே - இப்பொழுதே - இன்றிரவே செய்து முடிக்க வேண்டுகிறேன்!

சீ.1: என்ன செய்யவேண்டுமென்று அரசர் விரும்புகிறார்?

அர: சீமான்கள் சபை கலைக்கப்படவேண்டும்! அரசன் முடி துறக்க வேண்டும்!

சீ.2: என்ன?

சீ.3: இது முடிகிற காரியமா?

அர: நம்மால் முடியாததுதான்! ஆனால் மக்கள் இந்தக் காரியத்தை சுலபமாக முடித்துவிடுவார்கள்! அன்பு நிறைந்த பிரபுக்களே! என்மீதும், இந்தச் சபையின் மீதும் மக்களுக்கு ஏற்பட்டிருக்கிற ஆத்திரம் எங்கே போய் நிற்கும் என்று சொல்ல முடியாது! திடீரென்று ஒரு நாள் உங்கள் மன்னனின் தலை

பந்தாடப்படலாம்; பாராளும் மன்றத்திலே அமர்ந்திருக்கும் சீமான்களாகிய உங்கள் தலைகள் -பனங்காய்கள் போல சீவப்படலாம்; இது ஆரூடமல்ல; அனுபவ உண்மை- அழியாமல் இருக்கும் சரித்திரங்கள் காட்டும் அபாய அறிவிப்பு! மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு என்ற தத்துவத்தை உணராத எத்தர்களின் உடல்கள் சத்தெடுக்கப்பட்ட சக்கைகளாக வீசியெறியப்பட்டிருக்கின்றன - சரித்திரத் தெருவின் ஓரங்களிலே! எத்தனை நாளைக்கு, ஆண்டவன் விட்ட வழி யென்று ஆயுளை நகர்த்திக் கொண்டிருப்பார்கள்? 'ஏன்?' என்ற கேள்வி கருவிலே வந்து விட்டால் - அந்தப் புரட்சிக் குழந்தை உதயமாகப் பத்து மாதங்கூடத் தேவையில்லையே! பழைய காலத்துப் புராணக் கற்பனையிலே -ரிஜிப் பிண்டம் இராத் தங்காது என்பார்களே; அதுபோல, உடனடியாகக் கூட உதயமாகி விடலாமே! அந்தக் கேள்வி, மணிமகுடத்திலே கிளம்பவில்லை யென்று கருதுகிறீர்களா? 'தூரப் போடா ஜாதி கெட்டவனே - பெரிய ஜாதிக்காரன் வருவது கண் தெரியவில்லை - கபோதிப் பயலே' என்று பூசணிக்காய் வயிறு படைத்தோன் கேட்கிறானே, புழுதியடைந்த மேனியனைப் பார்த்து! அப்போது தோன்றுகிறதே - அந்த ஏன்? என்ற எக்காளக் கேள்வி! ''பொன்மலையும் - பூரிப்பான வாழ்வும் எங்களுக்குத்தானடா சொந்தம் - மண்மேடும், மங்கிய வாழ்க்கையும் உங்கள் கர்ம வினையடா'' என்று கர்ஜிக்கிறானே; கனம் - தனம் இரண்டும் படைத்தோன் -கண்ணிலே குளங் கொண்டவனைப் பார்த்து! அப்போது கொக்கரித்துக் கிளம்புகிறது கோமான்களே - நம் குரல்வளையை அமுக்கும் அந்த ''ஏன்?'' என்ற கேள்வி! ''எட்டிப் போ - எமை நத்திக்கிட'' - இனி செல்லாது சீமான்களே -செல்லாது! ''நம்மை எதிர்ப்பதா? - ஆயுத மற்ற நிராயுதபாணிகளா? - சுட்டுப் பொசுக்கிவிட மாட்டோமா?'' இந்த இறுமாப்பு நிறைந்த வீரப் பேச்சுக்கள் - வெறும் வெத்து வேட்டுக்கள்தான்! விடுதலை முரசு தட்டுவோரின் பக்கம் திரும்பியிருக்கும் துப்பாக்கி முனைகள், திடீரென, நம்மை நோக்கித் திருப்பப் படலாம் - யார் கண்டார்கள்?

நம்முடைய படையிலே எத்தனை பேர் உள்ளத்திலே "ஏன்?" என்ற மந்திரம் பதிவாகியிருக்கிறதோ? எந்த நேரத்திலே அந்த மந்திரம் ஜெபிக்கப்பட்டுப் புரட்சி வேள்வியிலே, நம்முடைய உடலிலேயுள்ள கொழுப்பு, நெய்யாக வார்க்கப்பட இருக்கிறதோ? நேரமும் காலமும் சொல்ல முடியாது! புயலைக் கூட வருவதற்கு முன்பு கண்டுபிடித்து விடலாம் - புரட்சியைக் கண்டு பிடிக்க இயலாது! அதன் விளைவையும் கணக்குப் போட இயலாது. அந்தப் பயங்கரமான விளைவு தேவையென்று நீங்கள் விரும்புகிறீர்களா? புரட்சி எரிமலை வெடித்து - அதன்நெருப்புக் குழம்பிலே சிக்கி உருவற்றுப் போய் விட விரும்புகிறீர்களா, உண்மை நண்பர்களே! ஒருக்கணம் யோசித்துப் பாருங்கள்! புரட்சிக்காரர்களின் கையிலே சிக்கிவிட்டால் - என்ன நடக்கும் என்பதை யோசித்துப் பாருங்கள்! "சிசுக்களையும் - பசுக்களையும் - சிங்காரப் பெண்களையும் - சேர்த்து வைத்துக் கொளுத்திய சீமான் சபையின் உறுப்பினரே! - இதோ- இந்தத் தீக்குண்டத்திலே உமது மனைவியோடு நீச்சல் விளையாட்டு நடத்துமய்யா!" என்று கட்டளை பிறப்பிப்பார்கள் - கண்ணீரை மட்டுமே இதுவரை தங்கள் உடமையாகக் கொண்டிருந்தவர்கள்! "யாரய்யா நீர்? வரி போட்டு வாட்டிய சீமானா? - இதோ உமது முதுகெல்லாம் வரி போடுகிறேன்!"என்று கொள்ளிக் கட்டையால் கோடு போடுவார்கள்; குடல் கருகிச் செத்த குடும்பத்திலே மிச்சமிருப்பவர்கள்! "ஆகாகா, அகப்பட்டுக் கொண்டீரா - ஆடம்பரப் பிரபுவே! பன்னீர்க் குளியலும் பழரசபானமும் - கன்னியர் சூழ் கட்டிலறையும் இல்லாவிட்டால் உமக்குத் தூக்கம் வராதாமே? இதோ, நீர் விழுந்து புரண்டு தூங்குவதற்கு அருமையான இடமென்று சாக்கடை சகதியிலே தூக்கி எறிவார்கள்; - இதுவரையிலே சாக்கடை ஓரத்திலே வாழ்ந்து கொண்டிருப்பவர்கள்! இந்த முடிவுகளை வரவேற்க நீங்கள் தயார்தானா? - பயமுறுத்துகிறேன் - என்று எண்ணாதீர்கள்! பக்குவப்பட்டு விட்டது நாடு என்பதையே அறிவிக்கிறேன்! அரசன்,

ஆண்டவனின் பிரதிநிதி! மதகுரு, மகேஸ்வரனின் அவதாரம் - என்றெல்லாம் நம்பிக் கிடந்தவர்கள் - புதுமைப் பித்தனின் பிரச்சாரத்தால் விழித்துக் கொண்டார்கள்! விதியை நொந்து கொண்டு விழியை நதியாக்கிக் கொண்டவர்கள் வேதனைக்குக் காரணம் - விதியல்ல என்பதை உணர்ந்து விட்டார்கள்! அறிவியக்கம் தலை தூக்கி விட்டது - வரட்டுப் பொதுவுடைமை மட்டும் பேசி வந்தவர் உள்ளங்களிலே கூட வளமான கருத்துக்கள் முளைவிடத் தொடங்கி விட்டன! சுயமரியாதைக் கனலும் - சுதந்திர அனலும் சூறாவளி வேகத்திலே பரவ ஆரம்பித்து விட்டன! இனி சுருட்டிக் கொள்ள வேண்டியது தான் நமது வாலை! என்ன சொல்லுகிறீர்கள்? - புதிய பாதை கண்டுபிடித்து புத்தியோடு நடக்கப் போகிறீர்களா? இல்லை பழைய பாதையிலே நடந்து - கத்திக்குத் தலைவணங்கப் போகிறீர்களா? - 'முடி துறந்தேன்' என்று சரித்திரம் வேண்டுமா? - 'முடி சாய்ந்தது' என்ற வரலாறு வேண்டுமா? - எது வேண்டும்? சமத்துவ அரசா - அல்லது நமக்கு ஆளுக்கொரு சவக் குழியா? சொல்லுங்கள்! நண்பர்களே - சொல்லுங்கள்!!

சீமா.1: அரசர் கூறுவதனைத்தும் சரியானதுதான்! புரட்சி வெள்ளம் கரை புரண்டு நிற்பதும் உண்மைதான்!

சீமா. 2: அதைத் தடுக்க அரசரே ஒரு வழி சொல்லட்டும்!

அர: சொன்னேனே - முன்பே! ஒரே வழி! அறிஞர் வகுக்கும் வழி! அரசைப் பொதுவாக்குவதுதான்!

சீமா.1: அதற்கு மாற்று?

அர: மாற்று என்ன? - பொதுத் தேர்தல் நடத்த வேண்டும்! அதிலே போட்டியிட்டு வெற்றி பெறுகிறவர்கள் ஆட்சிக்கு வரவேண்டும்!

சீமா.2: நிலைமை அதுவானால் - அதுவே உகந்த வழியானால் - அரசர் இஷ்டப்படி நடப்பதே நல்லது!

அர: எல்லோர் அபிப்பிராயமும் அதுதானே?

சீமா.1: ஆமாம்! (கைதூக்கல்)

அர: கை தூக்கி விட்டீர்கள்! மக்களின் கை நம்மை நோக்கித் தூக்கப்படுவதற்கு முன் - எச்சரிக்கையாக இப்போதே கை தூக்கி விட்டீர்கள்! மகிழ்ச்சி! நாளைக் காலையிலே -இந்த நாடு நல்ல செய்தி கேட்கும்! இன்றிரவு நான் நிம்மதியாகத் தூங்குவேன்!

காட்சி 44

(மாளிகையின் ஒரு பகுதி - அல்லி ஒளிந்து ஒளிந்து வருகிறாள்.)

காட்சி 45

(மாளிகையின் ஒருபகுதி - உலகப்பன் காவல் புரிந்தபடியிருக்கிறான் - யாரோ வருவதைப் பார்க்கிறான், தனக்குள்)

உல: ஓகோ - அல்லியம்மாளா -காதலரைத் தேடிக் கொண்டு அந்தப்புரத்திற்கே வர ஆரம்பிச்சாச்சா? ஆமாம் - இது எப்பவே பிடிச்சு நடக்குது? அரசர் அவங்ககிட்ட உண்மையைச் சொல்லிவிட்டாரா? இல்லாமலா, அம்மா இங்கேயே வருவாங்க? சரி.. சரி.. நம்ப இங்க இடைஞ்சலா நிற்பானேன்! ஒதுங்கிக்குவோம்!

(போகிறான் அதைவிட்டு. அல்லி மெதுவாக அந்த இடத்தைக் கடந்து மாளிகைப் பக்கம் நுழைகிறாள் - பயங்கர இசை)

காட்சி 46

(அரசன் தூங்குகிறான். படுக்கையில் கொசுவலை கட்டப்பட்டிருக்கிறது. அல்லி வருகிறாள். கீழே தடுக்கி குப்புற

விழுகிறாள். துப்பாக்கி கீழே விழுகிறது. அரசன் விழித்துக் கொண்டு எழுந்து விடுகிறான். அவள் அவசரமாக எழுந்து போய் கைத்துப்பாக்கியை கையில் எடுப்பதற்கு முன்பு, அவள் கையைப் பிடித்துக் கொள்கிறான். அவள் கையிலே துப்பாக்கி இருந்தும் கூட சுட முடியாமல், அவளது கை அவன் கையில் அகப்பட்டு விடுகிறது.)

அர: அல்லி! எங்கே வந்தாய்?

அல்லி: தெரியவில்லை! உம்மைக் கொல்வதற்காக வந்தேன்!

அர: என்னைக் கொல்லவா? ஏன்

அல்லி: எவ்வளவு நாளைக்கு எங்களைக் கொன்று வாழ முடியும் - கொலைக் கருவி கொலுமண்டபத்துப் பக்கமும் திரும்பும் என்பதைக் காட்ட வேண்டாமா, அதற்காக!

அர: கொன்றுவிடு! பயப்படவில்லை! ஆனால் என்னைக் கொன்று என்ன லாபம் என்பதைச் சொல்!

அல்லி: லாபமில்லை! நஷ்டமில்லாமலாவது இருக்குமல்லவா? உம்மை உயிரோடு விட்டால் நாளைக் காலையிலே - பொன்னழகன் கூட்டத்தைக் கைதுசெய்யும்படி உத்திரவு உதயமாகும் - புதுமைப் பித்தனை சுட்டுத்தள்ள சட்டம் பிறக்கும் - மக்கள் மன்றம் தடை செய்யப்படும் -இந்தக் காரியங்கள் எதுவும் நடக்காமல் தடுக்கத்தான் உம்மைக் கொன்றுவிடத் தீர்மானித்தோம்!

அர: நீ குறிப்பிட்ட எந்தக் காரியமும் நடக்காமல் நானே தடுத்து விட்டேன்! நாளைக் காலையிலே மணிமகுடபுரியை மக்கள் கையிலே ஒப்படைக்கப் போகிறேன். சீமான்கள் சபையிலே, இப்போது தீர்மானமும் நிறைவேறிவிட்டது.

அல்லி: புரிகிறது - புவியாளும் மன்னரே -உமது தந்திரம் புரிகிறது! பொய் சொல்லி தப்பிவிடலாம் என்று எண்ணுகிறீரா?

உரிமைப் புதுவெள்ளத்தை அணைபோட்டுத் தடுக்கும் உமது உயிரை அணைக்காமல் திரும்ப மாட்டேன்!

அர: உயிரை அணைப்பாய் - அல்லி - நான் யார் என்று தெரிந்தால் என் உடலையே அணைப்பாய்!

(அல்லியை விடுகிறான். அல்லி துப்பாக்கியை அவன் மார்புக்கு நேராக நீட்டுகிறாள்)

அர: அல்லி - சுடு! சுட்டுக் கொன்று விடு! ஆனால் சுடுவதற்கு முன் நான் யார் என்று தெரிந்து கொள்!

(பீரோவிடம் திரும்புகிறான்.)

அல்லி: நில்லும்!

அர: துப்பாக்கியை எடுக்கப் போவதில்லை! இந்தத் துர்ப்பாக்கியன் யார் என்று காட்டப் போகிறேன்! கொஞ்சம் இரு! (பீரோவிலிருந்து தாடி முதலியன எடுத்து) ஒரு வினாடியில் தெரிந்து கொள்வாய் நான் யாரென்று! இதோ! பார் அல்லி! என்னைப் பார்! நீ யாரை சுட வந்திருக்கின்றாய் என்று பார்!

(புதுமைப்பித்தனாக நிற்கிறான்.)

அல்லி: ஆ! புதுமைப் பித்தனா?

அர: புதுமைப் பித்தன்தான்! புரட்சிக்காரி அல்லியின் காதலன்தான்! தவறிப் போய் இந்தத் தங்க வீட்டிலே பிறந்து விட்ட மனிதன்தான்! அல்லி! சுடப் போகிறாயா என்னை? நீ சுடுவாய்! நீ ஒரு புதுமையான நெருப்பாயிற்றே! நீங்கினால் சுடுவாய் - நெருங்கினால் குளிர்வாய்!

(அல்லி எதுவும் புரியாது திகைத்து நிற்கிறாள் - பொன்னழகனின் குரல் மட்டும்)

குரல்: ''ஆமாம் - எனக்குத் தெரியாமல்தான் போய் விட்டது- பொன்னழகனை சகோதரனாகவும், புவியாளும் மன்னனைக் காதலனாகவும் எண்ணுகிற ஒரு சதிகாரி எனக்குத் தங்கையாக வந்திருக்கிறாள் என்பது தெரியாமல்தான் போய்விட்டது - துரோகம் - அணைபோட்டுத் தடுக்க முடியாத துரோகம் - வெள்ளம்- ஐந்தாம் படைகள் இங்கேயே இருக்கின்றன - எந்த நேரத்திலும் இந்த மன்றத்தின் வாழ்வைத் தீர்த்துக் கட்டக் கூடிய அரசனுடைய கையாட்கள் நமக்குள்ளே உலவுகிறார்கள்.

(அல்லி நடுங்குகிறாள்.)

அல்லி: நான் ஐந்தாம் படைதான்! துரோகிதான்! பொன்னழகனின் குற்றச்சாட்டு உண்மையானது தான்! மாளிகை வாசிகளின் மடியிலே கிடந்தவள்தான் நான்! அரண்மனைக்காரனின் ஆலிங்கனத்திலே சிக்கியவள்தான் நான்!

அர: இல்லை அல்லி! இல்லவே இல்லை! நீ நினைப்பது போல நான் இருதயமற்ற மனிதனல்ல! உன்னை ஏமாற்றிய ஜாலக்காரனுமல்ல! ஜனநாயகத்தின் முன்னோடும் பிள்ளை, நான் என்பதைப் பெருமையோடு சொல்லிக் கொள்கிறேன்! நீ எந்தப் புதுமைப் பித்தனை நேசித்தாயோ அதே புதுமைப் பித்தன் தான்! மான் தோலிலே வேங்கை உலவுவதுண்டு- ஆனால், நான் வேங்கைத் தோலிலே உலவ வேண்டிய மானாகி விட்டேன்! மன்னன் வேடத்திலே வாழ வேண்டிய மனிதனாகி விட்டேன்! இந்தத் தவறுக்கு நான் பொறுப்பாளியல்ல! என் தங்கமே - என்னை நம்பு! மன்னன் வேடத்தை சில நாள் தாங்கினால்தான் மக்களுக்கு நிரந்தரமான நன்மை ஏதாவது செய்ய முடியும் என்று கருதினேன் - கருதியபடி காரியத்தில் வெற்றியும் பெற்றேன்! அல்லி! இன்னும் என்னை நம்ப மாட்டாயா? -நாளைக்கு காலையில் மக்கள் ஆட்சி மலரப் போகிறது! மன்னன் முடி துறக்கப் போகிறான்! சீமான்கள் தொலைக்கப்படப் போகிறது! நம்பு, அல்லி! என்னை நம்பு!!

அல்லி: ஊஹூம்.. மக்கள் மன்றத்தின் கட்டளையை நான் நிறைவேற்ற வேண்டும்! அதோடு அரசனின் காதலி என்ற அவமானச் சின்னத்தை உமது ரத்தத்தால் கழுவிக் கொள்ள வேண்டும்!

புது: அப்படியானால் - கட்டளையை நிறைவேற்று! அல்லி! காதலனைக் கொன்று போட்டு விட்டுப் போ! இத்தனை நாள் நம்மிடையே வளர்ந்த நேசமும், பாசமும், உன் நெஞ்சிலே இரக்கத்தை உண்டாக்க வில்லை யென்றால் - நான் என்ன செய்ய முடியும்? உத்திரவை நிறைவேற்று! - உன்னை உயிராகப் பாவித்தவனின் உயிரைப் போக்கு! எந்த அகன்ற நெஞ்சிலே, உன் அழகான முகத்தைப் பதித்துச் சாய்ந்து கிடந்தாயோ - அந்த நெஞ்சிலே குறி பார்த்துச் சுடு! வேண்டாம் - வேண்டாம்! என் நெஞ்சிலே சுடாதே! அங்கே என் காதலி அல்லி இருக்கிறாள்! அவள் மீது துப்பாக்கி ரவைகள் பாய்ந்து விடும்! என் தலைக்குக் குறி வைத்துக் கொல்லு! அன்பே! ஆருயிரே! - அருமருந்தே! உன் ஆசைக்குரியவனை ஒரு நொடியில் தீர்த்து விடு! உம் சுடு! இரு, இரு, இதோ வருகிறேன்! புதுமைப் பித்தனை சுட்டு விடாதே! அவன் உன் காதலன்! காதலனை சுடக் கூடாது! உன் பகைவன் அரசன் தான்! அரசனைச் சுடு! சுட்டுத் தள்ளு!

(புதுமைப் பித்தன் வேடத்தைக் கலைத்து அரசனாக நிற்கிறான் - அல்லி, மெய்மறந்து நிற்கிறாள்.)

அர: ம்.. சுடு... அல்லி.. இதோ உன் பகைவன் - மணிமகுடபுரியின் மன்னன்! உன்னை மயக்கிய புதுமைப் பித்தனல்ல -அவன் ஒழிந்தான்! உன் கண் எதிரே இனி அவன் தோன்ற மாட்டான்! சுட்டு விடு - துவளாதே! மடமடவென்று சுட்டுத் தள்ளு! கொஞ்சம் பொறு... அல்லி! உன்னை ஆசை தீர ஒருமுறை நினைத்துக் கொள்கிறேன்! நாம் ஆடியதையும் பாடியதையும் மனக்

கண்ணிலே நிறுத்திக் கொள்கிறேன்! ஆனந்தமாக ஒரு பெருமூச்சு விட்டுக் கொள்கிறேன்! மலர்க்கரம் படைத்தவளே - என் மனம் நிறைந்த மாதரசி -காதலீ - அல்லீ - காதலீ, காதலீ - சுடு.. சுடு!

(கண்களை மூடிக் கொண்டு பேசுகிறான் - துப்பாக்கி சப்தம் - பயங்கர இசை -கண்ணை விழிக்கிறான் -தான் சாகவில்லை - அல்லி, தன்னையே சுட்டுக் கொண்டு கீழே கிடக்கிறாள்.)

அர: ஆ.. அல்லி...!

(திகைக்கிறான் - அப்போது பொன்னழகன்- துப்பாக்கியை நீட்டியபடி அங்கு ஓடிவந்து)

பொன்: நில்! அக்ரம அரசனே! அடப்பாவி! அல்லியைக் கொன்று விட்டாயா? இதே பழிக்குப் பழி!

(அரசனைச் சுடுகிறான். அரசன் கீழே விழுதல் - காவலர் ஓடிவந்து பொன்னழகன் முதலியோரைச் சூழ்தல்.)

அர: (எழுந்து தினறியபடி) நில்லுங்கள் - காவலர்களே! அவர்களை யாரும் தொடாதீர்கள்! நானாகவே இந்த முடிவைத் தேடிக் கொண்டேன்! பொன்னழகரே - அவசரப்பட்டு விட்டீர்! அல்லியை நான் கொல்லவில்லை! அவளே சுட்டுக் கொண்டாள்! உம்மீதும் குற்றமில்லை! யாரோ, அவசரக்காரர்கள் சீமான் சபையின் முதல் தீர்மானத்தை மட்டும் உம்மிடம் கூறியிருக்கிறார்கள்? முடிவான தீர்மானம் என்ன என்பது உமக்குத் தெரியாது! மரண மூச்சு விட்டுக் கொண்டிருக்கும் நான், உங்களிடத்தில் ஒரு மகிழ்ச்சிகரமான செய்தியைச் சொல்லப் போகிறேன் - மணிமகுடபுரியிலே நாளைக் காலை முதல் மக்களாட்சி உதயமாகப் போகிறது! சீமான்கள் சபையிலேஅந்த முடிவை எடுத்து

விட்டுத்தான் தூங்குவதற்கு வந்தேன் - நீண்ட தூக்கத்திற்கு நீங்களே ஏற்பாடு செய்து விட்டீர்கள், சந்தோஷம்! பல நாட்களாக நான் பட்ட பாட்டிற்குச் சரியான பலன் கிடைத்து விட்டது! மக்களின் மனதை வளப்படுத்தியிருக்கிறேன் - போதுமான அளவுக்கு! புதிய ஆட்சியை நிர்வகிக்கிற அளவுக்கு! ஜாதி - மத - பேதங்கள் -கடவுள் கொள்கைகள் -மூட நம்பிக்கைகள் அனைத்தும் ஒழிந்த மக்களரசுக்கு வழி வகுத்துவிட்ட பெருமையோடு உங்களிடமிருந்து விடைபெற்றுக் கொள்கிறேன் பொன்னழகரே! பலாத்காரத்தால் செய்து முடிக்க முடியாதகாரியத்தை - அப்படிச் செய்தாலும் நிலைக்க முடியாத காரியத்தை - அமைதியான முறையிலே செய்து முடித்து விட்டேன்; அறிவுப் புரட்சி - அதனையொட்டி அரசியல், பொருளாதாரப் புரட்சி- என்ற எனது கொள்கை வெற்றி பெற்று விட்டது! என்ன திகைக்கிறீர்கள்? என்னடா இது - புதுமைப் பித்தன் சித்தாந்தம் போல இருக்கிறதே, என்று பார்க்கிறீர்களா? புதுமைப்பித்தன் மட்டுமல்ல; மணிமகுடம் பத்திரிகையின் ஆசிரியர் கூட பேசுவது போலத் தெரியும்! இதோ பாருங்கள் தோழர்களே! நன்றாகப் பாருங்கள்! உங்கள் தோழனைப் பாருங்கள்! (புதுமைப் பித்தனாக மாறிக் கொண்டு) மன்னனாகப் பிறந்தேன் - மதமும் அதிகாரமும் வகுத்த நியதிப்படி! மக்கள் தொண்டனாக வாழ்ந்தேன் - இதோ மக்கள் தொண்டனாகச் சாகிறேன்! தோழர்களே! நாளை முதல் புதிய அரசு - புதிய கொடி -புதிய வாழ்வு - புதிய பொதுத் தேர்தல் - அந்தத் தேர்தலிலே போட்டியிடுங்கள்? வெற்றி நம் பக்கமேதான்! ஏழை மக்களின் தூதுவர்கள் . பாராளும் உறுப்பினர்களாக அமையட்டும்! பழைய பத்தாம்பசலி ஆட்சி ஒழியட்டும்! பகுத்தறிவு ஆட்சி உதயமாகட்டும்! பலாத்காரத்தை இன்றோடு மறந்து விடுங்கள் - அது என் ரத்தத்தோடு உறைந்து போகட்டும்! வருகிறேன் தோழர்களே -வருகிறேன். அல்லி.. அல்லி! (அவளை அணைத்தபடியே)

வருகிறோம்! புதுமைக் காதலர்கள் இருவரும் உங்களிடம் விடை பெற்றுக் கொள்கிறோம்! பொன்னழகரே! எங்கே? ஒரு முறை வாழ்த்து முழங்குங்கள்! மக்கள் மன்றம் வாழ்க! மக்கள் மன்றம்.. வாழ்க!

(அனைவரும்) வாழ்க!

அர: வாழ்க, வாழ்க! தாயகம் வாழ்க! தன்மானம் வ்ாழ்க!! சமத்துவம் வாழ்க!! வாழ்க...

காட்சி 47

(புதுமைப்பித்தன், அல்லி சிலை -பொன்னழகன், கலாராணி முதலியோர் இருத்தல் - கவிஞரும் பெண்களும் பாட்டு - பொன்னழகன், சிலைகளுக்கு மாலை போடுதல்)

பாட்டு: 'புதியதோர் உலகம்'' போல...

(முடிவுற்றது)



கலைஞரின் சிறப்புமிகு நூல்கள்

குறளோவியம் (வண்ணப் படங்களுடன்)
கலைஞரின் பசுமை நினைவுகள்
கலைஞர் சொன்ன கதைகள்
தேர் சென்ற பாதையிலே
ரோமாபுரிப் பாண்டியன்
கலைஞரின் கவிதைகள்
வெள்ளிக்கிழமை **நாவல்**
ஒரே இரத்தம் **நாவல்**
ஒரு மரம் பூத்தது **நாவல்**
சுருளி மலை **- நாவல்**
சிலப்பதிகாரம் **- நாடகக் காப்பியம்**
மணிமகுடம் ,,
மகான் பெற்ற மகன் ,,
நச்சுக்கோப்பை ,,

கலைஞர் கருணாநிதியின் சிறுகதைகள்
அரும்பு **- சிறுகதைகள்**
மனோகரா **- கதை வசனம்**
மேடையிலே வீசிய மெல்லிய பூங்காற்று
இனியவை இருபது - பயண நூல்
போர் முரசு
ஆறுமாதக் கடுங்காவல்
பேசும் கலை வளர்ப்போம்
சிறையில் பூத்த சின்னச் சின்ன மலர்கள்
சின்னச் சின்ன மலர்கள்
யாரால் ? யாரால்? யாரால்?
கிழவன் கனவு
கலைஞரின் சிந்தனைச் சிதறல்கள்
கலைஞரின் முத்தமிழ்
கலைஞரின் உவமை நயம்
கலைஞரின் குட்டிக் கதைகள்
கலைஞரின் சொல்நயம்
கலைஞரின் நவமணிகள்
கலைஞரின் முத்துக்குவியல்

பாரதி பதிப்பகம்
126/108 உஸ்மான் சாலை,
தியாகராய நகர், சென்னை- 600 017